மலர் : 52

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 52

# சத்தியத்தின் குரல்

## Editorial Team


Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

**Guest Editors**
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

**Staff Writers**
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Abel R. Nayagam
Kingsly rajah

Translation : **B. Benny Martin**

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



# பிசாசுகள்

## Demons

*Louis Rushmore*

வரலாற்றிலும் சரி, சமகாலத்திலும் சரி பிசாசுகளைப் பற்றிய கதைகள் கவர்ச்சிகரமாக இருப்பதோடு பிசாசுகள் ஒரு வேதாகமத் தலைப்பாகவும் இருக்கிறது. இருந்தபோதிலும், உலகத்தின் மக்களால் பிசாசுகளைப் பற்றி அதிகமாக நம்பப்படும் காரியங்களுக்கு எந்தவித ஆதாரங்களோ அல்லது வேதாகம குறிப்புகளோ இல்லை. நவீன உலகின் பிரச்சனை பிசாசினால் பிடிக்கப்படுவது அல்ல, அதைப் பற்றிய சிந்தனையில் மூழ்கி விடுவது தான் என்று வேத வல்லுநர்கள் சொல்லுகிறார்கள்.

பிசாசுகள் என்னும் பதம் பழைய ஏற்பாட்டில் நான்கு முறையும், புதிய ஏற்பாட்டில் 84 முறையும் வருகிறது. இதில் குறிப்பாக பழைய ஏற்பாட்டு வசனங்களை மாத்திரம் நான் பதிவு செய்கிறேன் (லேவியராகம் 17:7; உபாகமம் 32:17;11 நாளாகமம் 11:15; சங்கீதம் 106:37). பேய்கள் அல்லது பிசாசுகள் இருந்தன. Daemon, Daimon போன்ற கிரேக்க பதங்களில் இருந்து தான் பிசாசு பேய் போன்ற பதங்களெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (யாக்கோபு 3: 15ல்) 'பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

பேய்கள் இருந்தது பற்றி நற்செய்திப் புத்தகங்கள் மிக ஆழமாக எதையும் குறிப்பிடவில்லை. மாறாக, அதைப் பற்றி லேசாக எடுத்துக் கொள்ளப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பிசாசுகளின் ஆரம்பம் அல்லது தோற்றத்தை பற்றி நற்செய்திப் புத்தகங்கள் விவரமாக எதையும் அறிவிக்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் எதிரிகள் கூட அவர் பிசாசுகளை துரத்தினதை ஒத்துக் கொண்டார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து பிசாசுகளின் தலைவனோடு கூட்டு வைத்துக் கொண்டு பிசாசுகளை துரத்தினார் என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள்( மாற்கு 3:22).

## பிசாசுகளின் தோற்றம் மற்றும் அடையாளம்

பிசாசுகளின் தோற்றம் அல்லது அடையாளம் பற்றி இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் இந்தப் பிசாசுகள் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்த சாத்தானைப் பின்பற்றின விழுந்து போன தேவ தூதர்கள் தான் என்று எண்ணுகிறார்கள்( II பேதுரு2:4 ; யூதா 6). இன்னும் சிலர், பிசாசுகள் சில காலம் பாதாளத்திற்கு தப்பிக்கும்படியாக அனுமதிக்கப்பட்ட துன்மார்க்கமாக மரித்தவர்களின் ஆத்துமாக்கள் என்று கற்பனை செய்கிறார்கள். பெரும்பாலான



வேதாகம மாணவர்கள் பாதாளத்திலிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிற துன்மார்க்கமான மனிதர்களின் ஆவிகள் தான் என்று முடிவுக்கு வருகிறார்கள்.

ஆனால், V.E. Howard என்பவர் பிசாசுகள் பாதாளத்திலிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிற துன் மார்க்கமான மனிதர்களின் ஆவிகள் என்பதை சந்தேகிக்கிறார். (லூக்கா 16:22–29) வசனப் பகுதி இவ்வுலகத்தை விட்டு கடந்து சென்றவர்களின் ஆவிகள், அவைகள் நல்லாவிகளாக இருந்தாலும் சரி, கெட்டாவிகளாக இருந்தாலும் சரி மனிதர்களுக்கு உதவி செய்வதற்கோ அல்லது மனிதர்களைத் தடை செய்வதற்கோ பூமிக்கு மறுபடியும் செல்ல அனுமதிக்கப்படுகின்றன என்னும் எண்ணத்தை மறுக்கிறது. விழுந்து போன தேவதூதர்களுக்கும் இதே நிலைமைதான். ஏனென்றால், பாவம் செய்த தேவதூதர்களையும் தேவன் தப்ப விடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயதீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்திருக்கிறார் (11 பேதுரு2:4 ;யூதா 6).

பிசாசுகளின் ஆரம்பம் மற்றும் அடையாளம் பற்றி புதிய ஏற்பாட்டில் நமக்குப் போதுமான அளவு தெளிவான தகவல்கள் இல்லாதபடியால் ஒருவராலும் தீர்க்கமாக பிசாசுகளைப் பற்றிய கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாது. சாத்தான் சம்மந்தமான காரியங்களை நாம் இறுதியாகப் பகுத்து ஆராய்ந்தாலும் கூட சாத்தானின் ஆரம்பம் பற்றி திட்டவட்டமாக ஒரு முடிவுக்கு நம்மால் வர முடியாது. வேதாகமத்தை முழுமையாக நம்புகிறவர்கள் ஏதோ ஒரு காலகட்டத்தில் பிசாசுகள் இருந்தன என்பதை ஒத்துக்கொள்வார்கள். ஆயினும், பிசாசுகளின் ஆரம்பம் பற்றி வேதாகமம் மௌனமாக இருக்கிறது. புதிய ஏற்பாடும் கூட பிசாசுகளின் ஆரம்பம் பற்றி மௌனமாய் இருக்கிற

படியால் கிறிஸ்தவர்கள் பிசாசுகளின் ஆரம்பம் குறித்து யூகிக்கவோ அல்லது தாங்கள் திட்டவட்டமாக நம்புகிற ஒன்றை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவோ கூடாது.

**பிசாசுகளைப் பற்றிய விவரம் மற்றும் பிசாசினால் பிடிக்கப்படுவது**

எனவே, ஒருவர் வேத வாக்கியங்களின் அடிப்படையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் நடந்து திரிந்த முதல் நூற்றாண்டு உலகில் பிசாசுகள் இருந்ததை ஏற்றுக் கொள்கிறார். அதுமாத்திரமல்லாமல், ஒருவர் வேத வாக்கியங்களின் அடிப்படையிலேயே பிசாசுகள் பற்றிய விளக்கத்தையும் பொருளையும் கொள்ள முடியும்.

இந்தப் பிசாசுகள் தேவனை விடக் கீழான, அதே நேரத்தில் மனிதனை விட சற்று மேலான இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய ஜீவிகளாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அது மாத்திரமல்ல, இந்தப் பிசாசுகள் அவைகளின் சேனைகளை விட மேலான அறிவுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மேலும், வேத வாக்கியங்களில் இப்பிசாசுகள் விவேகம் உள்ள ஜீவிகளாகவும், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதைப் பற்றிய மெய்யான அறிவை பெற்றிருந்தவைகளாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. மற்றும் ஓர் அதிர்ச்சி அளிக்கக் கூடிய காரியம், பரிசுத்த வேத வாக்கியங்களில் இயேசு கிறிஸ்துவை **முதலில் தேவனுடைய பரிசுத்தர்** என்று ஏற்றுக் கொண்டவைகள் பிசாசுகளாய் இருக்கின்றன என்பதாகும் [மாற்கு 1:23-24]. புதிய ஏற்பாட்டிலும், ஆதி கிறிஸ்தவத்திலும் பிசாசுகள் அசுத்த ஆவிகளாகவே கருதப்பட்டு இருக்கின்றன. இந்தக் கருத்து பிசாசுகளுக்கு மாற்றாக அசுத்த ஆவிகள், பொல்லாத ஆவிகள் என்ற பதங்கள் அடிக்கடி பயன்படுத்தப் பட்டதால் தெளிவாகிறது.

பிசாசினால் பிடிக்கப்பட்ட நபர்களிடமிருந்து இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் துரத்தின ஆறு சம்பவங்கள் நற்செய்திப் புத்தகங்களில் இடம் பெற்றிருக்கிறது.1 அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன்[ மாற்கு 1:23]; கதரேனருடைய நாட்டில் அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் [மாற்கு5:1-20; மத்தேயு 8:28-34; லூக்கா 8:26-39]. சீரோபேனிக்கே தேசத்தாளின் மகள் [மாற்கு 7:24-30; மத்தேயு 15:21-28]; காக்கா வலிப்பு பிடித்த ஒரு மகன் [மாற்கு 9:14-29; மத்தேயு 17:14-21]; பிசாசு பிடித்த [மத்தேயு 9:32-34]; குருடும், ஊமையுமான ஒருவன் [மத்தேயு 12:22; லூக்கா 11:15]. மேலும், ஏழு பிசாசுகளிடமிருந்து விடுதலை பெற்ற மகதலேனா மரியாள் பற்றி இரண்டு முறை குறிப்பிடப் பட்டிருந்தாலும், அவளிடமிருந்து பிசாசுகள் துரத்தி விடப்பட்ட விதம் விரிவாக விளக்கப்படவில்லை [மாற்கு 16:10; லூக்கா 8:2]. புதிய ஏற்பாடு இயேசுவின் சீஷர்கள் பிசாசுகளை துரத்தினது பற்றி அநேக

முறைகள் குறிப்பிட்டு இருப்பதையும் (மாற்கு 3:14;மாற்கு 6:7; மத்தேயு 10: 1,2) லூக்கா 10:17-20;மாற்கு 16:17;மாற்கு 9:18,28; லூக்கா 9:40). புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்துவால் அநேக பிசாசுகள் துரத்தப் பட்டதையும் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு அடிமைப் பெண்ணை பிசாசின் பிடியிலிருந்து பவுல் விடுவித்ததையும் நாம் பார்க்கிறோம் (அப்போஸ்தலர் 16:16-18).

பரிசுத்த வேதாகமம் பிசாசினால் பிடிக்கப்படுவதற்கும், வியாதிக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாக வேறுபடுத்தி இருக்கிறது. பிசாசினால் பிடிக்கப்படுவது சாதாரணமாக இருந்த புதிய ஏற்பாட்டு காலகட்டத்திலும் கூட பிசாசினால் பிடிக்கப்படுவதற்கும், வியாதிக்கும் உள்ள வித்தியாசம் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. நிச்சயமாகவே, ஒருவர் பிசாசினால் பிடிக்கப்படும் போது அது அந்த நபருடைய சரீரத்துக்குள் வியாதியை உண்டாக்கும். ஆனால், எல்லா வியாதிகளுக்கும் பிசாசு காரணம் அல்ல.

'அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும், வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள், அவர்களைக் குணமாக்கினார்'(மத்தேயு 4:24).

### பிசாசுகள் இவ்வுலகில் அனுமதிக்கப்பட்டதன் நோக்கம்

பிசாசுகளின் ஆரம்பம் மற்றும் அடையாளம் மரித்துப் போகக்கூடிய மனித இனத்திற்கு அறியாத ஒன்றாக இருந்தாலும் கூட, முதல் நூற்றாண்டு காலத்தில் பாலஸ்தீனத்தில் பிசாசுகள் அனுமதிக்கப் பட்டதற்கான காரணம் ரகசியமான ஒன்று அல்ல. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் போது பிசாசுகள் மனிதர்களைப் பிடிக்கும்படியாக அனுமதிக்கப்பட்டதின் காரணம் 1 யோவான் 3:8ல் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. 'பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான். ஏனெனில், பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ் செய்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். இயேசுவின் எழுபது சீஷர்கள் தங்களுக்கும் பிசாசுகளைத் துரத்தும் வல்லமை தரப்பட்டதை அறிந்து ஆனந்தமடைந்து இயேசு கிறிஸ்துவிடம் வந்தார்கள். அவர்களைப் பார்த்து நமது ஆண்டவர் இயேசு 'சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதை கண்டேன்' என்று சொன்னார் (லூக்கா 10:18).

இயேசு கிறிஸ்து இயற்கையின் மீது தமது வல்லமையை நிரூபித்தது போல (மாற்கு 4:35-41); சுகப்படுத்த முடியாத வியாதிகள் மீது தம்முடைய வல்லமையை நிரூபித்தது போல (மாற்கு 5:25-34) ஆவி உலகத்தின் மீதும் அவர் தம்முடைய வல்லமையை நிரூபித்தார். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு பிசாசுகளை துரத்தும் வல்லமையை வழங்கினார். ✞



# கர்த்தரும், கன்றுக்குட்டியும்

# The Lord and the Calf

*EZS. Rajanayagam*

எகிப்தின் அடிமைத்தனத்தில் சுமார் 400 ஆண்டுகள் சிக்கி சீரழிந்த மக்களை, கண்ணீரைக் காணும் யெகோவா தன்னுடைய வல்லமையுள்ள கரங்களினாலும், ஓங்கிய புயத்தினாலும் விடுதலையாக்கி பகலில் மேகஸ்தம்பத்தாலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தாலும் [யாத் 13:21] வழி நடத்தி வந்தார். இவர்களுக்குத் தூதர்களின் ஆகாரத்தைக் கொடுத்தார். [சங். 78:25]. அப்பொழுது தேவன் அவர்களோடு கொண்டிருந்த உறவு மிகவும் அலாதியானது. அதை நாம் பாவம் செய்வதற்கு முன் ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாள் தேவனோடு கொண்டிருந்த உறவுக்கும், எடுத்துக் கொள்ளப் படுவதற்கு முன் ஏனோக்கு தேவனோடு கொண்டிருந்த [ஆதி. 5:24] உறவுக்கும் ஒப்பிடலாம். ஆம், அது அவ்வளவு சிறப்பானது.

ஆனால், இந்த ஜனங்கள் என்ன செய்தார்கள்? தங்களுடைய கானான் பயணத்தின் ஒரு கட்டத்தில், தேவனுடைய பர்வதம் [யாத். 3:1:19:12] என்றழைக்கப்படும் சீனாய் மலையின் அடிவாரத்தில் பாளயமிறங்கினார்கள். இந்த ஜனங்கள் தேவனுடைய வல்லமையைக் கண்ணாரக் கண்டு காதாரக் கேட்டவர்கள் [யாத். 19:16. 20:18]. ஆம், தேவன் பேசிச் சொல்லிய வார்த்தைகள் என்று இருக்கிறபடியால் [யாத் 20:1] பயங்கரமான காட்சியோடு, தேவ சத்தத்தையும் இவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்பொழுது அந்த தேவ சத்தம் இவர்களுக்கு என்ன சொல்லிற்று? என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்.... [யாத். 20:2,4] என்றது.

நமக்கெல்லாம் வசனங்கள் ஆவியானவரால் அவருடைய தாசர்களைக் கொண்டு **எழுதி கொடுக்கப்பட்டு** நாம் வாசிக்கிறோமல்லவா அது போல் அவர்களுக்கு இல்லாமல், வார்த்தைகளோடு, தேவனுடைய **சத்தத்தையும்** நேரிடையாக பயங்கரக் காட்சியோடு கேட்டிருக்கிறார்கள் [யாத். 19:19,22]. ஜனங்கள் தேவ சத்தத்ததையும் அந்த காட்சியையும் கண்டு பயந்த போது மோசே ஜனங்களை நோக்கி

பயப்படாதிருங்கள் உங்களை சோதிப்பதற்காகவும் நீங்கள் பாவம் செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும் தேவன் எழுந்தருளினார் என்றான் (20:20) தேவ சத்தமும், பயங்கர காட்சியும் தேவ வெளிப்பாட்டிற்காகவும், அவர்கள் பாவம் செய்யாமலிருக்கும்படியும் என்று தெளிவுபடுத்தப்பட்டது. அப்படியானால், அவர்கள் தேவ காரியத்தில் எந்தளவு ஈடுபாடும், பயபக்தியுமுடையவர்களாய் இருந்திருக்க வேண்டுமென்று எண்ணிப்பாருங்கள்!

இந்த இஸ்ரவேல் ஜனங்கள் 32-ம் அதிகாரத்தில் தங்கள் நன்றி கெட்ட தேவ பயமற்ற தன்மையை அரங்கேற்றினார்கள். மோசே மலையிலிருந்து இறங்கி வரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்ட போது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி அவனை நோக்கி; எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்! ஆதலால் நீர் எழுந்து எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள் (யாத் 32:1). இவர்களின் ஆட்டம் இந்த வசனத்திலிருந்து தான் தொடங்குகிறது.

தன் சகோதரனாகிய மோசேயின் வாயாக இருக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதனாகிய ஆரோன் ஜனங்கள் இப்படிக் கேட்ட போது என்ன செய்திருக்க வேண்டும்? முற்பிதாக்களின் காலத்தில் சோதோமின் மக்கள் தன் வீட்டிற்கு வந்த மனிதர்களை அறியும்படி லோத்தின் வீட்டைச் சூழ்ந்து கொண்டு அவர்களை வெளியே கொண்டு வா என்று நெருக்கிய போது, லோத்து சகோதரரே **இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம்** என்று கெஞ்சினது போல இவனும் எப்படியாவது போராடி முயற்சித்திருக்க வேண்டும் (ஆதி. 19:47). ஆனால், லோத்தை விட மேலான நிலையில் தேவனால் வைக்கப்பட்ட ஆரோனோ ஜனங்களின் நெருக்குதலுக்கு எந்த எதிர்ப்பும் காட்டாமல் ஆமென் என்று சொல்லி அவர்கள் ஆசைக்கு அசிங்கமாக அடிப்பணிந்தான். ஏன் இவன் இப்படிச் செய்தான் என்பது எனக்கு இன்றளவும் விளங்காத ஒன்றாக உள்ளது! அதற்கு ஆரோன் உங்கள் மனைவிகள், குமாரர், குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றான் (யாத். 32:2)

பிறகு ஆரோன், ஏதோ அதிகாரம் தனக்கு இருப்பது போல் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக **ஒரு பலி பீடத்தைக் கட்டி நாளைக்கு கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். (32:5) மறுநாள் அவர்கள்**

அதிகாலையில் எழுந்து சர்வாங்க தகன பலிகளையிட்டு சமாதான பலிகளைச் செலுத்தினார்கள். பிறகு, தங்கள் வழக்கமான விளையாட்டு. இந்த விளையாட்டில் இவர்கள் மாம்சமும், மனசும் விரும்பின எல்லாம் அடக்கம்! இவைகளைப் பொறுத்தளவில் பக்தி என்பது சாமிக்கும் இருக்க வேண்டும். ஆசாமிக்கும் இருக்க வேண்டும்! நம்முடைய தேசத்தின் நேர் பங்காளிகளாகவே காட்சி தருகிறார்கள்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி; நீ இறங்கிப்போ; எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டு வந்த **உன் ஜனங்கள்** தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்...... என்றார் (32:8). எப்படியோ கர்த்தர் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு கன்றுக்குட்டி! கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய அதே கனம், மரியாதை இந்த கன்றுக்குட்டிக்கும். ஆம், அதற்கு ஒரு ஆசாரியன் ஒரு பலிபீடம், ஒரு பண்டிகை, அதிகாலை பலி பிறகென்ன இரண்டும் ஒன்று தான். அப்புறம் ஆட்டம் பாட்டம் தான் குடி கும்மாளம் தான். பக்தியென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்! சரி இதிலிருந்து நமக்குக்கிடைக்கும் பாடங்கள்!

I. **மார்க்கத் தலைவரும், மதிகெட்ட ஜனங்களும்**

கர்த்தரும் கன்றுக்குட்டியும் என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், வழி நடத்துபவர்களும், வழி நடக்கிறவர்களும் ஏகமாய்க் கெட்டுப் போயிருக்கிறார்கள் என்பது.

தேவன் மோசேக்குக் கொடுத்த அதே கனத்தை கிட்டத்தட்ட அவன் சகோதரனாகிய ஆரோனுக்கும் கொடுத்தார். (யாத் 4:1416). அவனிடத்தில் அதிகம் எதிர்பார்க்கப்பட்டிருக்கும் (லூக். 12:48). ஆனால், இவன் என்ன செய்தான்? ஜனங்களின் நெருக்குதலுக்கு முன் கேவலமாக மண்டியிட்டான். இதற்காகவா ஒருவன் தலைவனாகவும், அதிகாரமுடையவனாகவும் இருப்பது? வெட்கம்.

அங்கே நாம் பார்க்கும் அதே சூழ்நிலை இன்றைய கிறிஸ்தவத்தில் அப்படியே காணப்படுகிறது. சொல்லப்போனால், புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திலேயே இந்த நிலை துவங்கிவிட்டது. அதிகாரத்தைக் கையிலே வைத்திருந்த பிலாத்து என்ன செய்தான்? இயேசுவை நீதிமான் என்று அறிந்திருந்தும் (மத்.27:24) ஜனங்களின் நெருக்குதலுக்கு அடிபணிந்து சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தான். நீதியின் குரலை நெறிப்பதற்காகவா இவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது?

சரி இவனாகிலும் அரசியல்வாதி. ஆன்மீகவாதிகளும் அப்படித்தான் இருப்பார்களென்று முன்னுரைக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலன் பவுல் தன்னுடைய அந்திய நாட்களில், விசுவாசக் குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது: ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தஙகள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும் [I தீமோ 4:3,4] என்றார்.

வரும் என்று முன்னுரைக்கப்பட்ட ஆபத்து நம்முடைய நாட்களில் படுஜோராக வந்து நடந்து கொண்டிருக்கிறது. அன்றைக்கு கர்த் தரைப் பிடிக்காமல் கன்றுக்குட்டியை நாடினது போல், இன்றைக்கு கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தின ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் வசனங்களில் காணப்படாத கள்ள உபதேசங் களாகிய கன்றுக் குட்டியை நாடுகிறார்கள். அன்றைக்கு ஆரோன் ஜனங்களின் அநியாய ஆசைக்கு அடிபணிந்தது போல், இன்றைக்கு ஆன்மீகத் தலைவர்கள் மார்க்க வழிகாட்டிகள், குருக்கள், வரம் பெற்றவர்கள், அற்புதம் செய்கிறவர்கள் என்ற பெயர்களில் வலம் வரும் பல குருடரான வழிகாட்டிகள், ஜனங்களைத் தாங்கள் பக்கம் சேர்த்துக் கொள்ளவும், தக்கவைக்கவும் பல கன்றுக்குட்டிகளை உருவாக்கித் தருகிறார்கள். சிலை வழிபாடு கன்றுக்குட்டி, பண்டிகை கன்றுக்குட்டி, ஓய்வுநாள் கன்றுக்குட்டி, தசமபாகக் கன்றுக்குட்டி, குழந்தை ஞானஸ்நானம் கன்றுக்குட்டி, அந்நியபாஷை கன்றுக் குட்டி, தீர்க்கதரிசன கன்றுக்குட்டி என்று சகட்டுமேனிக்கு உருவாக்கித் தருகிறார்கள். இப்படி நடத்துபவர்கள் குறித்து இயேசு ஆண்டவர் சொல்லுவதை கவனியுங்கள். அவர்களை விட்டு விடுங்கள். அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராய் இருக்கிறார்கள். குருடனுக்கு குருடன் வழி காட்டினால் இருவருமே குழியிலே விழுவார்கள் என்றார் [மத்.15:14].

II. **கன்றுக்குட்டியும், பிரிவினை சபைகளும்**

கர்த்தரும், கன்றுக்குட்டியும் என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், தேவ சித்தத்திற்கு மாறாக கன்றுக் குட்டிகளாகிய பல சபைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன என்பது

தேவன் ஆரானுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தெளிவாகவும், திட்டமாகவும் இப்படியாகச் சொல்லியிருந்தார்.

**என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்** என்று (யாத் 20:3). சர்வவல்லமை கொண்ட யேகோவாவிற்கு மாற்றாக யாரும் இருக்கமுடியாது, எதுவும் இருக்க முடியாது. ஆனால், இவர்கள் என்ன செய்தார்கள்? தேவன் சொன்னதைக் கேட்கவில்லை. மாறாக, தாங்கள் விருப்பம்போல் கன்றுக்குட்டிகளைச் செய்து இவர்களாகவே சொல்லிக் கொள்ளு கிறார்கள், **உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே** என்று (யாத் 32:4). இப்படி ஆரோன் மற்றும் ஜனங்கள் உட்பட எல்லோரும் ஏக மனதாகச் சொல்லிவிட்டார்கள் என்பதால் கன்றுக்குட்டி தெய்வமாகி விட்டதா? யேகோவாவிற்கு நிகராகிவிட்டதா? சொல்லுங்கள்.

அருமையானவர்களே! இன்றைக்கு கிறிஸ்தவ மத உலகில் இதே நிலை அப்படியே காணப்படுகிறது! எப்படி கர்த்தருக்கு மாற்றாக வேறே தேவர்கள் இருக்க முடியாதோ அதுபோலவே, **கிறிஸ்து கட்டின சபைக்கு மாற்றாக வேறு எந்த சபையும் இருக்க முடியாது.** சபையை ராஜ்ஜியத்திற்கு ஒப்பிட்டு தீர்க்கதரிசனம் உரைத்த தானியேல் தீர்க்கன் ஒரு ராஜ்ஜியம் என்றே குறிப்பிட்டுள்ளார். (தானி. 2:44). இந்தக் கல்லின் மேல் **என் சபையைக்** கட்டுவேன் (மத் 16:18) என்று இயேசு ஒருமையில் தான் வாக்களித்தார். இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் **சபையிலே** சேர்த்துக் கொண்டு வந்தார் என்று ஒருமையில் தான் உள்ளது. (அப்.2:47) இரத்தத்தைச் சிந்தி **தமது சபையை** சம்பாதித்தார் என்று ஒருமையில் தான் உள்ளது(அப்.20:28). எபேசியர் 4-ம் அதிகாரத்தில் காணப்படும் ஒன்றுகளில் சரீரம் (எபே 4:4,12) என்று தான் உள்ளது. இன்னும் கிறிஸ்து மீண்டும் வரும் போது தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை (சபையை) ஒப்புக்கொடுப்பார். (1 கொரி 15:24) என்றே உள்ளது. ஆக, சபை ஒன்று தான் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்றுகள் வேண்டும்? தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் அறிவைக் கொண்டு இதைக் கூடவா புரிந்து கொள்ள முடியாது!

### III. தேவ பார்வையும், மனித பார்வையும்

கர்த்தரும், கன்றுக்குட்டியும், என்ற தலைப்பிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், தேவ பார்வை, மனித பார்வையிலிருந்து வேறுபட்டது என்பது.

ஈசாயின் குமாரர்களில் ஒருவனை ராஜாவாக அபிஷேகம் செய்யச் சென்ற சாமுவேல், முகத்தையும் சரீர வளர்ச்சியையும் பார்த்துத் தடுமாறிக் கொண்டிருந்த போது, தேவன் ஒரு பெரிய உண்மையை

வெளிப்படுத்தினார். அது, **மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்** என்று [1 சாமு 16:7]. அவர் தான் நம் கர்த்தர்.

ஆம், தேவன் மனித பார்வையோடு ஒத்துப் போவதில்லை. யாத்திராகமத்தில் என்ன நடந்தது? ஒரு பலிபீடம் கட்டப்பட்டது. நாளைக்கு பண்டிகை என்று கூறப்பட்டது. அதிகாலையில் எழுந்து பலிகள் செலுத்தப்பட்டு வேடிக்கைகளும் அரங்கேற்றப்பட்டது [யாத் 32:5,6]. எல்லாம் ஒருமித்த கருத்தோடு நடந்தது. அதுவும் என்ன சொல்லபட்டு நடந்தது? உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த தெய்வங்கள் இவைகளே [32:4] என்று உண்மையில் யேகோவாவாகிய கர்த்தர் தான் இவர்களை அழைத்துக் கொண்டு வந்தார். ஆக, இது அவருக்காகச் செய்யப் பட்டது போன்ற ஒரு தோற்றத்தைத் தந்தது.

ஆனால், இவைகளையெல்லாம் கவனித்த கர்த்தர் மோசேயை நோக்கி நீ இறங்கிப்போ; எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டு வந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள் என்றார் [யாத். 32:7]. எப்படிக் கொடுத்துக் கொண்டார்களென்று அடுத்து வசனத்தில் விளக்கினார். **நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலக்கினார்கள்** என்றார் [32:8]

அருமையானவர்களே! தேவன் சொல்லுவதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? தேவன் சொல்லாத ஒன்றை நாம் எத்தனை பேர் சேர்ந்து செய்கிறவர்களாக இருந்தாலும், நம்முடைய செயலுக்கு ஆரோன் போன்று எப்படிப்பட்ட ஓர் ஆன்மீக வழிகாட்டி துணை நின்றாலும், பக்தி என்ற பெயரில் நாம் எவ்வளவு ஆர்ப்பட்டம் செய்தாலும் அது தேவ பார்வையில் நமக்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தரவே தராது. மாறாக, தேவனுடைய சமூகத்தில் நம்மைக் கெடுத்துக் கொண்டவர்களாகவே காட்சி தருவோம். தேவனுடைய பார்வையில் இப்படிக் கெடுத்துக் கொண்டவர்களாகக் காட்சிதர நாம் யாரும் ஒருபோதும் விரும்பமாட்டோம்.

அப்படியானால், நாம் செய்ய வேண்டியது என்ன? தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ள வேண்டும் [பிர.12:13]. கிறிஸ்து கட்டின ஒரே சபையிலே அங்கமாக இருந்து கிறிஸ்துவின் உபதேசத்தில் மாத்திரம் நிலைத்திருக்க வேண்டும். [2 யோவா9]. ஏனெனில், அவருடைய வசனமே நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் [யோவா 12:48]. ✞

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பிசாசுகள் | Louis Rushmore | ... 1 |
| கர்த்தரும், கன்றுக்குட்டியும் | E.Z.S. Rajanayagam | ... 5 |
| சபை பற்றி வேதாகம் என்ன ..... | J.C. Choate | ... 13 |
| கோபத்தைக்கிளறி விடுதல் | Jerry Bates | ... 17 |
| நல்லவர்கள் எல்லாம் ..... | E.Z.Selvanayagam | ... 20 |
| மதியிறுக்கமும், ஆவிக்குரிய ..... | P.C. Philemon Rajah | ... 25 |
| ஆதி அன்பு | B. Arjunan | ... 30 |

## தேவன் – God

| | | |
|---|---|---|
| என் மனப்பான்மை..... | Clifp Holmes | ... 35 |
| தேவன் இறையாண்மை உள்ளவர் | Larry Murdock | ... 37 |
| இயேவின் வரலாற்று வேர்களை..... | T. Pierce Brown | ... 43 |

## தேவனுடைய வார்த்தை – The Word of God

| | | |
|---|---|---|
| நீங்கள் சொல்வது எனக்கு புரியவில்லை | David R. Keny | ... 46 |

## இரட்சிப்பு – Salvation

| | | |
|---|---|---|
| வேதாகமத்தில் எங்கே நான் ..... | Gary Colley | ... 48 |

## சபை – The Church

| | | |
|---|---|---|
| சுவிசேஷகனுடைய வேலை | Wayne Barrier | ... 50 |
| கிறிஸ்துவையும், சபையையும் ..... | Sunny David | ... 52 |

## வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by

| | | |
|---|---|---|
| இரட்சிக்கப்படுவதன் மூலமாக இழந்து..... | Shane Fisher | ... 56 |
| ஆத்தும ஆதாயம் செய்யும்..... | Ken Tyler | ... 60 |

செயலில் கிறிஸ்தவம் - Christianity in Action

| | | |
|---|---|---|
| பெண்கள் நற்செய்தியைப் ..... | Paul Holland | ... 62 |
| கர்த்தருடைய சேனையில் | Rodney Nulph | ... 65 |

ஆராதனை - Worship

| | | |
|---|---|---|
| சாத்தான் சனிக்கிழமை வேலை..... | Marilyn Lastrape | ... 68 |
| நாம் ஆராதனையில் ஏன் | Derek Broome | ... 71 |
| இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் | D.A Adenugba | ... 73 |

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை - Daliy Christian Living

| | | |
|---|---|---|
| அவர் எனக்கு பாரமானவர் அல்ல .......... | John A. Gray | ... 78 |
| மறக்கப்பட்ட கருவி | Betty Burton Choate | ... 80 |

கிறிஸ்தவ இல்லம் - The Christian Home

| | | |
|---|---|---|
| சாய்ந்து போகிற நிழல் | Michael L.King | ... 85 |
| உண்மையான அன்பு | Denny Petrillo | ... 88 |

வசனரீதியான பாடங்கள் - Textual Studies

| | | |
|---|---|---|
| பஸ்காவைப் பற்றிய இரண்டு ..... | Aaron Cozort | ... 90 |
| முன்கூட்டியே தீர்மானித்தல் | David Conley | ... 92 |

வேதாக கதாபாத்திரம் - Bible Characters

| | | |
|---|---|---|
| நீங்கள் எவ்விதாமான பெண் ? | Emily Fisher | ... 95 |
| தவறாகக் குற்றம் சாட்டப்படுதல் | Andy Robison | ... 98 |
| சாத்தானின் பொறுமை | Paul Mowrer | ... 99 |
| சபைக்காக கிறிஸ்துவின் மாதிரி | Dale Grissom | ... 102 |
| பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்.... | Raymond Elliott | ... 107 |



## சபை பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது?

## What does the Bible say about the church

*J.C Choate*

கீழ்க்காணும் கேள்விகளை சிந்தித்துப் பார்த்து, வசனங்களை வாசித்து பதிலளியுங்கள்.

**1 சபை என்பது என்ன?**

மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை‘[மத்தேயு 16:18].‘தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார். [அப்போஸ்தலர் 2:47] தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர் களாயுமிருங்கள்‘ [கொலோசெயர் 3:15].

**1. சபை என்பது**

- ☞ ஒரு கூடும் வீடு
- ☞ ஒரு மார்க்கப் பிரிவினைக்கூட்டமா?
- ☞ ‘அழைக்கப்பட்ட‘, இரட்சிக்கப்பட்ட, தேவனுடைய மக்கள்

**2. சபை யாரால் ஆரம்பிக்கப்பட்டது?**

‘மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை ‘[மத்தேயு 16:18].

- ☞ கிறிஸ்து
- ☞ யோவான் ஸ்நானன்
- ☞ அப்போஸ்தலனாகிய பேதுரு

**3. சபை எங்கே ஆரம்பமானது?**

என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் காத்திருங்கள் என்றார்‘ [லூக்கா 24:49].

‘ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்‘ [அப்போஸ்தலர் 1:5].

- ☞ ரோமாபுரி
- ☞ லண்டன்
- ☞ எருசலேம்

**4. சபை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?**

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே கூடி வந்திருந்தார்கள் ‘அப்போஸ்தலர் 2:1]

தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந் தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்‘ [அப்போஸ்தலர் 2:47].

- ☞ கி.பி 606
- ☞ சுமார் கி.பி 33ல்
- ☞ பெந்தெகொஸ்தே நாளில்

**5. யார் சபையின் அஸ்திபாரம்?**

மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை‘[மத்தேயு 16:18]. பவுல் அதை இவ்விதமாக விளக்குகிறார். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது[1கொரிந்தியர் 3:11].

- ☞ பேதுரு
- ☞ கிறிஸ்து
- ☞ ரோமின் போப்

**6. சபையின் பெயர் என்ன?**

இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, [எபேசியர் 3:14 ,15].

- ☞ கிறிஸ்துவின் சபை
- ☞ ஏதோ ஒரு மனிதனுடைய பெயர்
- ☞ வேத வாக்கியங்களில் காண முடியாத மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயர்கள்.

‘கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்‘ [ரோமர்16:16].

**7. யார் சபையின் தலைவர்?**

பவுல் கிறிஸ்துவைப் பற்றி சொல்லும் போது ‘அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்‘ என்று சொல்கிறார் (கொலோசெயர் 1:18).

- ☞ வருடாந்திர மாநாட்டின் தலைவர்
- ☞ கிறிஸ்து
- ☞ ரோமின் போப்

**8. ஒருவர் சபைக்குள் எப்படிப் பிரவேசிக்கிறார்?**

- ☞ ஒருவர் தானாகவே முடிவெடுத்து சபையில் சேருகிறார்
- ☞ மற்ற அங்கத்தினர்களால் வாக்களித்து தெரிந்து கொள்ளப்படுகிறார்.
- ☞ கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தரால் சபையிலே சேர்க்கப்படுகிறார்கள்.

**9. சபைக்காக என்ன விலை கொடுக்கப்பட்டது?**

இயேசு கிறிஸ்து தம்முடைய ரத்தத்தை விலையாக கொடுத்து சபையை வாங்கினார் (அப் 20:28).

- ☞ ஒன்றுமில்லை
- ☞ கிறிஸ்துவின் ரத்தம்.
- ☞ அப்போஸ்தலரின் இரத்தம்.

**10. ஆராதனையில் தேவன் எதை அவசியமாக்குகிறார்?**

‘தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார் (யோவான் 4:24).

- ☞ வெறுமனே நேர்மையாகவும், உண்மையாகவும் இருந்தால் போதுமானது.
- ☞ சரியான மனநிலையுடனும், வேத வாக்கியங்களின்படியும் ஆராதிக்க வேண்டும்.
- ☞ தாங்கள் விரும்புகிறபடி ஆராதிக்கலாம்.

**11. சபையின் ஆளுகை அமைப்பு என்றால் என்ன?**

சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் (எபேசியர் 1:22,23). தகுதியுள்ள ஆண்கள் சபையில் மூப்பர்களாகவும், உதவி காரர்களாகவும் சேவை செய்ய வேண்டும். (1 தீமோத்தேயு 3; தீத்து 1).

- ரோமின் போப்
- உதவிக்காரர்
- முப்பரும், உதவிக்காரரும்

**12. சபையின் பணி என்ன?**

உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் (மாற்கு 16:15); திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் உதவி செய்ய வேண்டும் (யாக்கோபு 1:27).

- ஒரு கிளப்பை நடத்துவது
- சுவிசேஷத்தை பிரசங்கிப்பது
- ஏழைகளை விசாரிப்பது

**13. சபைக்கு இறுதியாக என்ன நடக்கும்?**

‘ அதன்பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்‘(1 கொரிந்தியர் 15:24).

- அது மரித்துப் போகும்
- அது கிறிஸ்துவோடு இந்தப்பூமியில் ஆயிரம் ஆண்டுகள் அரசாளும்.
- அது தேவனிடத்தில் ஒப்பு கொடுக்கப்படும்.

நீங்கள் அங்கம் வகிக்கும் சபையை குறித்து மகிழ்ச்சி அடையலாம். ஆனால், இந்த கேள்விகளை குறித்து நீங்கள் சிந்தியுங்கள். புதிய ஏற்பாட்டில் நீங்கள் எந்த சபையை குறித்து வாசிக்கிறீர்களோ அந்த சபையில் நீங்கள் அங்கம் வகிக்கிறீர்களா? அந்த சபை கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டதா? கிறிஸ்து எந்த சபைக்காக ஒரு நாள் திரும்பி வரப் போகிறாரோ அந்த சபையில் நீங்கள் அங்கம் வகிக்கிறீர்களா? அப்படி இல்லை என்றால் மேலே கொடுக்கப்பட்டிருக்கிற வேத வாக்கியங்களைப் படித்து கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கத்தக்க வேத வாக்கியங்களுக்கு இன்றே கீழ்ப்படியுங்கள்.



# கோபத்தைக் கிளறிவிடுதல்

## Stirring up Anger

*Jerry Bates*

நீதிமொழிகள் புத்தகத்தில் சில சுவாரசியமான நீதிமொழிகள் இடம் பெற்றுள்ளன, அவைகள் எழுதப்பட்ட காலத்தில் எப்படி இருந்ததோ , அப்படியே இப்பொழுதும் உண்மையாய் இருக்கிறது. நீதிமொழிகள் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள வார்த்தைகள் நமக்கு விசித்திரமாகத் தோன்றும். அது மாத்திரமல்லாமல், நீதிமொழிகள் சில கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கிறபடியால் நமக்கு அவைகள் முற்றிலும் அந்நியமாகத் தோன்றும். இருந்தபோதிலும் அவைகளின் அடிப்படைச் செய்திகள் இன்றும் மதிப்புள்ளவைகளாய் இருக்கின்றன. அத்தகைய பழமொழி அல்லது நீதிமொழி நீதிமொழிகள்30:32–33 வசனங்களில் இடம் பெற்றுள்ளது.

'நீ மேட்டிமையானதினால் பைத்தியமாய் நடந்து, துர்ச் சிந்தனையுள்ளவனாயிருந்தாயானால், கையினால் வாயை மூடு. பாலைக் கடைதல் வெண்ணெயைப் பிறப்பிக்கும்: மூக்கைப் பிசைதல் இரத்தத்தைப் பிறப்பிக்கும்: அப்படியே கோபத்தைக் கிண்டிவிடுதல் சண்டையைப் பிறப்பிக்கும்'. இந்த நீதிமொழிகளில் போதிக்கப் பட்டிருக்கும் சத்தியத்தை ஆழ்ந்து சிந்திக்க நாம் சில நிமிடங்களை எடுத்துக் கொள்வோம்.

இந்த நீதிமொழிகளில் வலியுறுத்தப்பட்டிருக்கும் முக்கிய கருத்து ஒருவர் மேட்டிமையாய் நடவாமலும், துர்ச்சிந்தனை இல்லாதவராயும் இருப்பதுதான். ஏனென்றால், ஒருவர் மேட்டிமையாய் நடக்க முயற்சித்தாலும் அல்லது துர்ச்சிந்தனை உடையவராய் இருக்க முயற்சித்தாலும் அது கோபத்தைத்தான் பிறப்பிக்கும். இங்கே ஞானி குறிப்பாக இந்த முப்பதாம் அதிகாரத்தில் ஆகூர் ஒருவர் தன்னைத்தானே மேட்டியாக எண்ணிக் கொள்வது முட்டாள்தனமான ஒன்று என்று சொல்லுகிறார். ஒருவர் தன்னைத்தானே உயர்வாக எண்ணிக் கொள்வதன் விளைவு சண்டை என்பதை நம்மில் பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்வோம். காரியங்கள் இப்படி இருக்கிறது என்று நம்மில் பெரும்பாலானோர் ஒத்துக் கொண்டாலும் கூட, நாம் பல சந்தர்ப்பங்களில் இதே காரியத்தைச் செய்ய முயற்சிக்கிறோம் என்பது வேதனைக்குரிய ஒன்றாகும். வாழ்க்கையின் எதோ ஒரு கட்டத்தில் முட்டாள்தனமாக யார்

தான் நடந்து கொள்ளவில்லை? இதை இந்த நீதிமொழிகள் 30 ஆம் அதிகாரத்தின் ஆசிரியர் பாலைக் கடைதலோடும், மூக்கைப் பிசைதலோடும் ஒப்பிடுகிறார். இன்றும் கூட பலர் பாலை கடைகிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் பாலை கடைவதினால் ஏற்படும் இயற்கையான விளைவு வெண்ணெய் என்பதை அறிந்திருக்கிறார்கள். அதுபோல் ஒருவர் மூக்கை பிசைந்தாலோ அல்லது மூக்கில் அடிபட்டாலோ அதன் இயற்கையான விளைவு அதிகமான ரத்தம் தான். அந்த விளைவு உடனடியாக உண்டாகிறது.



நாம் அந்த விளைவை தனிப்பட்ட ரீதியில் கூட அடையாளம் கண்டு கொள்ள முடியும். ஒருவர் மேட்டிமை அடைந்தாலோ அல்லது துர்ச்சிந்தனை உடையவராக இருந்தாலும் அதன் இயற்கையான விளைவு சண்டைதான் என்பதை விளக்குவதற்கு மேற்சொல்லப்பட்ட இந்த நீதிமொழிகள் மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

இங்கே ஞானி ஒருவரை இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்குப் பதிலாக தன் கையினால் வாயை மூடுவது நலமாயிருக்கும் என்று சொல்கிறார். மறுபடியும் இப்படிப்பட்ட வார்த்தைகள் நமக்குப் புதுமையாக இருக்கின்றன. இங்கே இந்த சொற்றொடர் பழமையானதாக இருந்தாலும் கூட தற்காலத்திற்கு பொருந்துகிற ஒன்றாகவே இருக்கிறது. இங்கே அடிப்படையாக இந்த ஆசிரியர் ஒருவர் அமைதியா இருக்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறார். இத்தகைய சொற்றொடர்கள் பழைய ஏற்பாட்டில் பலமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் பொருள் என்னவென்றால், சண்டை சச்சரவுகள் ஏற்படாமல் இருக்க ஒருவர் தன்னுடைய வாயையும், இருதயத்தின் எண்ணங்களையும் அடைத்து வார்த்தைகளை வெளிப்படுத்தாமல் இருக்க வேண்டும்.

இதேவிதமான கருத்து நீதிமொழிகள் 28:25 லும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ' பெருநெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான்; கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்'.

புதிய ஏற்பாடு தீமையான காரியங்களைப் பேசுவதை குறித்தும் ஒருவர் தன்னை மேன்மையாக எண்ணிக் கொள்வதற்கும் எதிராக அடிக்கடி எச்சரிக்கை விடுக்கிறது. யாக்கோபு ஆசிரியர் நாவை நெருப்போடு ஒப்பிடுகிறார், அது அநீதி நிறைந்த உலகம் என்று சொல்லுகிறார்( 3:6). சில வசனங்களுக்கு பின்பு( 3:8)ல் அவர் நாவு

அடங்காத புல்லாங்குழல், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. மேலும், யாக்கோபு 3:16 ல் 'வைராக்கியம் விரோதம் எங்கே உண்டோ, அங்கே கலகமும், சகல துர்ச்செய்கைகளுமுண்டு' என்று சொல்கிறார்.

இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருக்க வேண்டும் என்று உற்சாகப்படுத்தினார். 'சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் 'என்று சொன்னார். இதன் பொருள். நாம் மற்றவர்களோடு சமாதானமாய் இருப்பது மட்டுமல்லாமல், மற்றவருடைய உறவில் விரிசல் ஏற்படும்போது நாம் சமாதானம் பண்ணுகிறவர்களளாயிருக்க வேண்டும். நிச்சயமாகவே இதற்கு நம்முடைய நாவையும், மனதையும் ஞானமாய் பயன்படுத்துவது அவசியமாய் இருக்கிறது. நம் செயல்பாடுகளில் சில சமாதானத்துக்கு வழி நடத்தும், சில செயல்பாடுகள் சண்டைக்கு வழிநடத்தும். கிறிஸ்தவர்களாக நாம் சண்டை சச்சரவுகளை உண்டாக்கும் காரியங்களில் இருந்து விலகி இருக்க வேண்டும். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக அறிவிக்கிறார். 'தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது.

இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான். ஆனபடியால், சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்'( ரோமர் 14:17-19).

✝

---

## தேவ சமூகத்தில் ...

- ❀ இருதயத்தை ஊற்றி விட வேண்டும் (சங்கீதம் 62:8).
- ❀ தேவ சமூகத்தை நோக்கி கெஞ்ச வேண்டும் (மல்கியா 1:9).
- ❀ தேவ சமூகத்தில் பயப்பட வேண்டும் (பிரசங்கி 3:4).
- ❀ தேவ சமூகத்தில் களி கூர வேண்டும் (நீதிமொழிகள் 8:30).

# நல்லவர்கள் எல்லாம் இரட்சிக்கப்படுவார்களா?

# Do All Good People Will be Saved?

*E.Z. Selvanayagam*

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்பு இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகிற தகுதி எனக்கோ இந்த உலகில் வேறு எவருக்குமோ அல்லது குழுவினருகோ இல்லை என்பதை எல்லா மனத்தாழ்மையுடனும் ஒப்புக் கொள்ளுகிறேன். கிறிஸ்து ஒருவருக்கே அத்தகுதி உண்டு என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வோம். ஏனெனில், அவரே நியாயாதிபதி [அப்.17:31]

இருப்பினும் எனது நண்பர்களும், உறவினர்களும் பல்வேறு சபைகளில் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களில் பலர் மிகுந்த பக்தி வைராக்கியமும், ஆர்வமும் உள்ளவர்கள். கர்த்தருடைய காரியங்களுக்குத் தாராளமாய் கொடுக்கிறவர்கள். ஆனாலும், பவுல் அப்போஸ்தலன் கூறுவது போல் தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியம் உண்டென்று அவர்களைக் குறித்து சாட்சி சொல்லுகிறேன். ஆகிலும், அது அறிவுக்கேற்ற வைராக்கியம் அல்ல. எப்படியெனில், அவர்கள் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவனுக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள் [ரோமர் 10:2,3] என்று வருத்தத்தோடே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இப்படிச் சொல்லும்போது, நான் மற்றவர்களை நியாயம் தீர்க்கிறேன் என்று தயவு செய்து என்மீது ஆத்திரப்படாதீர்கள். நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாட்களில் நியாயம் தீர்க்கும் [யோவான்12:48] என்பதை நான் மறந்து விடவில்லை. ஆயினும், நாம் நேசிக்கிற உறவினர்களோ, நண்பர்களோ தேவனுடைய சித்தத்தை அறியாமலும் அல்லது தேவனுடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ளாமல் தடுமாறினாலும் கவலையீனமாக இருந்தாலும் அவர்கள் பேரில் உள்ள கரிசனையால் அவர்களுக்கு சத்தியத்தை எடுத்துரைத்து தேவனுடைய சித்தத்தைப் புரிய வைத்த தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தூண்டுவது நம்முடைய கடமையன்றோ!

அப்போஸ்தலனாகிய பவுல் தன் இனத்தாரின் தவறான வைராக்கியத்தைக் குறித்து எனக்கு மிகுந்த துக்கமும் மனவேதனையும் உண்டாயிருக்கிறது [ரோமர்9:1] என்கிறாரே. அது போன்ற பந்தபாசத்தால் இதைப் பற்றி எழுதத் துணிந்தேன்.

முதலாவதாக, எல்லா சபைகள் என்பதே வேத வாக்கியத்துக்கு முரணானது. சபை ஒன்று தான் (எபே 4:4) அதில் ஒரே சரீரம் என்று தானே இருக்கிறது என்பீர்கள். அவசரப்படாமல் அதே நிருபம்1ம் அதிகாரம் 23–ம் வசனத்தையும் வாசியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் எனது சபையைக் கட்டுவேன் என்று ஒருமையில் தான் சொல்லியிருக்கிறார் மத்16:18) அது இயேசு உயிர்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தகொஸ்தெ பண்டிகை அன்றே வேத வசனத்தின்படி எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. (அப். 2:41-47) அந்த சபையை வேதம் கிறிஸ்துவின் சபை என்று அழைக்கிறது. (ரோமர் 16:16).

உண்மை இவ்வாறு இருக்க, இன்று மனிதன் பல நிறுவனங்களை அமைத்துக் கொண்டு அவைகளுக்குச் சபை என்ற பெயரைச் சூட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சுய இரத்தத்தைக் கொண்டு சம்பாதித்த தேவனுடைய சபையைக் கொச்சைப்படுத்தி மகிழ்கிறான். (அப்.20:28) இன்றைக்கு மனிதனால் நிறுவப்பட்ட சற்றேறக்குறைய நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் சபைகள் என்று கூறிக் கொண்டு மக்களைக் குழப்புவதால் கிறிஸ்து கட்டிய உண்மையான சபை எது? என்று கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறுகின்றனர். இது இரட்சிப்புக்குத் தூணும், ஆதாரமுமாக இருக்கிற கிறிஸ்துவின் சபையை நோக்கி மக்கள் வராதபடி மக்களை வஞ்சிக்க சத்துருவாகிய சாத்தான் செய்யும் சதித் திட்டமேயன்றி வேறல்ல.

இந்தச் சமயத்தில் பழைய ஏற்பாட்டில் கடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. புகழ்பெற்ற சாலமோன் அரசனுக்குப் பிறகு அவன் குமாரன் ரெகோபெயாம் அரசுக்கட்டில் ஏறுகிறான். அவனுடைய மதியீனமான போக்கினால் இஸ்ரவேல் சாம்ராஜ்ஜியம் இரண்டாக உடைந்து வடபகுதிக்கு யெரோபெயாம் அதிபதியானான். ஆனாலும், அவனுக்கு ஒரு பயம். மக்கள் எருசலேமில் உள்ள தேவாலயத்திற்குப் போக்கும்வரத்துமாக இருந்தால் அரச பரம்பரையைச் சேர்ந்த ரெகோபெயாம் மீது அன்பும் மதிப்பும் ஏற்பட்டு நாளடைவில் மக்கள் அவன் பக்கம் சாய்ந்துவிட்டால் ஆபத்து என்று நினைத்தான். ஆகவே, அவன் மக்களை எருசலேம் தேவாலயத்திற்குப் போய்த் தொழ வேண்டிய அவசியம் உண்டாகாதபடி தடுத்து நிறுத்த ஒரு தந்திரம் செய்தான். அவனுடைய எல்லைக்குள் அதாவது, தாணிலும் பெத்தேலிலும், விக்கிரக கோவில்களைக் கட்டி எகிப்தின் தெய்வங்கள் என்ற நம்பப்பட்ட கன்றுக்குட்டிகளுக்கு, ஒரிஜினல் நாடாகிய யூதாவில் கடைபிடிக்கப்படும் பண்டிகைக்கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியில் பண்டிகை கொண்டாடி, மேடையில் பலியிட்டான். மக்களைப் பார்த்து நீங்கள் எருசலேமுக்குப் போகும்

சிரமம் வேண்டாம். இங்கேயே தொழுங்கள் என்று திசை திருப்பினான். அதே நாளிலே பண்டிகை, ஆர்ப்பாட்டம், அலறல், வேடிக்கை என்று எல்லாமே உண்டு. மக்களுக்கு இது போதுமே. தேவன் நமது ஆராதனையை ஏற்றுக் கொள்ளுகிறாரா, இல்லையா? அதைப் பற்றி யாருக்குக் கவலை? (1ராஜா 12:26-33).

இன்றைக்கு அதுவே நிலை. பிழைக்கத் தெரிந்த சில சுயநல வாதிகள் மக்களுடைய மடமையையும், மெத்தனத்தையும் பயன்படுத்திக் கொண்டு, தேவனுடைய ஸ்தானத்திற்கு தங்களை உயர்த்திக் கொண்டு மக்களுடைய மனநிலைக்கேற்ப தேவனுடைய நீதிச் சட்டங்களின் வீரியத்தைக் குறைத்து திருத்தம் செய்து மக்கள் கூட்டத்தை திரளாய் சேர்த்துக் கொள்கிறார்கள். இவர்களின் தந்திரங் களை சரியாகப் புரிந்து கொள்ளாமல் பலரும், புரிந்த கொண்ட சிலரும் அதிலுள்ள ஓட்டைகளின் வழியாக கசிந்து வருவதை தரிசித்துக் கொண்டும், இரசித்துக் கொண்டும் இப்படிப்பட்ட நிறுவனங்களில் அங்கம் வகித்துக் கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டு போலி திருப்தியோடு உலா வருகின்றனர்.

இவர்களுக்கு கற்பிக்கப்படுகிற உதேசங்களில் அநேகம் வேத வசனத்திற்குப் புறம்பானவைகள். மிக முக்கியமானவைகள் என்று வேதம் குறிப்பிடுகிற சில உபதேசங்கள் அவர்களுக்குக் கற்பிக்கப் படுகிறதே இல்லை என்பது மிகவும் வேதனையாக இருக்கிறது. இந்த சூழ்நிலையில் அவர்களுக்கு அதைச் சுட்டிக்காட்டி அவர்களை சரியான பாதையில் போகும்படி ஆலோசனை கூறுவது நியாயந் தீர்ப்பது அல்ல. மாறாக, நல்லெண்ண மன்றாட்டே (யாக் 5:20).

சான்றோர்களே! அரசு அங்கீராம் இல்லாத ஒரு பள்ளியில் உங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பீர்களா? அல்லது இரண்டும் இரண்டும் ஐந்து என்றோ, தமிழ்நாடு ஐரோப்பா கண்டத்தில் இருக்கிறது என்றோ ராஜீவ்காந்தி, மகாத்மா காந்தியின் பேரன் என்றோ போதிக்கப்படுகிற பள்ளிக்கு உங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து அனுப்புவீர்களா? நிச்சயமாக மாட்டீர்கள். ஆனால், சபையா? அதைப்பற்றி என்ன ஐயா, எல்லாம் இயேசு சாமியைத்தானே கும்பிடுகிறார்கள். மாதாவையும் கும்பிடுவதை ஏன் ஏன் குறை சொல்ல வேண்டும். அது அவன் சௌகரியம் என்று சொல்லுகிறீர்களே, வேண்டாம் சகோதரனே, சகோதரியே!ஆன்மீகக் காரியங்களை அப்படி அசட்டை செய்ய வேண்டாம். தயவு செய்து லாசரு ஐசுவரியவான் உவமையை ஊன்றி வாசியுங்கள். லூக். 16:27-31 வரை உள்ளதை சிந்தியுங்கள்.

முதலாவது, சிறு குழந்தையாக இருக்கும்போது ஞானஸ்நானம் என்ற பெயரால் தலையில் தண்ணீர் தெளிக்கப்பட்டவர்கள் எல்லாம் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் இருக்கிறேன் என்று எண்ணிக் கொண்டிருப்பது தவறான எண்ணம். மாற்கு சுவிசேஷம் 16:16 **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்** என்று தெளிவாகப் போதிக்கிறது. இதில் இரண்டு விதமான போதனைகள் சம்மந்தப்பட்டிருக்கின்றன. ஒன்று ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டவனுடைய வயதும் புரிந்து கொள்ளும் தன்மையும் இரண்டு திருமுழுக்கு என்று அர்த்தம் கொள்ளும் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்ட முறை.

**விசுவாசமுள்ளவனாகி** என்றால் சொல்லப்படுகிற சத்தியத்தைப் புரிந்த கொண்டு நம்பிக்கை தெரிவிக்க வேண்டும். அப்படிப்பட்டவர் களுக்கு ஞானஸ்நானம் கொடு என்பது பொருளாகும். ஒரு சிறு குழந்தை சொன்னதைக் கேட்டு விசுவாசிக்குமா? புரிந்து கொள்ளுமா? அதற்குத் தான் பெற்றோர்கள் பொறுப்பு எடுக்கிறோமே! என்பீர்கள். அதற்கு எங்கே ஐயா ஆதாரம்? இயேசு கிறிஸ்துவே முப்பது வயதில் தானே திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார். லூக். 3:23] வேதத்தின் காரியங்களை வேதத்தின்படி செய்வது தானே நியாயம். நம் இஷ்டம் போல செய்து கொள்வதற்கு அதிகாரம் எங்கே? எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறாரே இயேசு மத் 28:19]. ஆகவே, குழந்தை ஞானஸ்நானத்தை இனிமேலாவது கைவிடுங்கள்

இரண்டாவது, ஞானஸ்நனாம் கொடுக்கும் முறை. திருமுழுக்கு அல்லது ஞானஸ்நானம் என்னும் சொல்லுக்கு மூல மொழியாகிய கிரேக்க மொழியில் Baptizo [பாப்டிஸோ] என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு அமுக்குதல் அல்லது மூழ்கடித்தல் என்ற பொருள். சிறு குழந்தையில் தலைமேல் இரண்டு சொட்டு தண்ணீரைத் தெளித்து திருமுழுக்கு கொடுத்தாயிற்று என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? இயேசுவை கிறிஸ்து என்று விசுவாசிக்கும் மனப்பக்குவம் இல்லாத பச்சிளங்குழந்தையின் தலை மேல் இரண்டு சொட்டு தண்ணீர் தெளித்து இத தான் ஞானஸ்நானம் என்று நானும் நீங்களும் ஒத்துக் கொண்டாலும் வேத வசனம் ஏற்றுக் கொண்டு இரட்சிப்புத் தருமா? ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிடில் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான். என்கிறார் இயேசு [யோவான் 3:5].

ஒருவனுடைய பிரவேசமே தவறு என்று ஆகும்போது அவன் இராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுவது எப்படி?

ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். I தீமோ2:5) என்று பவுல் தீமோத்தேயு என்ற இளம் பிரசங்கிக்கு எழுதுகிறார். பந்தயத்தில் முறைப்படி உன்னைப் பதிவு செய்து கொள்ளாமலும் பந்தயம் நடத்தியவரின் நிபந்தனைக்குக் கட்டுப்படாமலும் ஓடினால் பரிசு எப்படிக் கிடைக்கும்? இன்று அநேக கிறிஸ்தவர்கள் முறைப்படி பதிவு செய்து கொள்ளாத ஓட்டக்காரனைப் போல் கர்த்தருடைய உபதேசச் சட்டத்தின்படி செய்யாமல் கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடிகொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்வர்கள் பரிசு பெறுவது முடியாத காரியம். ஒருவேளை பரிசுத்த வேதாகமத்தை அனுதினமும் நீங்கள் வாசித்து தியானிப்பதால் உங்கள் வாழ்க்கை மற்றவர்களுடைய வாழ்க்கையைக் காட்டிலும் சிறப்பாக இருக்கும். அதற்கு நீங்கள் பரிசுத்த வேதாகமத்தைத் தான் படிக்க வேண்டும்.

வேதாகமம் படிப்பது இம்மைக்காக மட்டுமல்ல (I கொரி 15:19) மறுமையிலும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு ஆயத்தம் செய்திருக்கிற நித்திய வீட்டைப் பெற்றுக் கொள்ளுவதற்கே.

ஆகவே, என் நண்பர்களே, சகோதரியே! உன்னுடைய கிறிஸ்துவ ஓட்டம் வேதாகம உபதேசச் சட்டத்தின்படியும், நிபந்தனைகளின் படியும் பதிவு செய்யப்பட்ட ஓட்டம் தானா? தயவு செய்து வேதாகமத்தின் வெளிச்சத்தில் அதை சரிபார்த்துக் கொள்ளுங்கள். நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லை யென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப் பதற்கு வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல், பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும் தேவனுடைய உபதேசச் சட்டங்கள் அனைத்தையும்) முறுமுறுபில்லாமலும், தர்க்கிப் பில்லாமலும் செய்கிறவர்களாகவும் மாறுங்கள் (பிலி. 2:14 –16). ✝

## விலகியிரு

- *மனுஷனை நம்புவதற்கு விலகியிரு (சங்கீதம் 118:8).*
- *பண ஆசைக்கு விலகியிரு (1தீமோத்தேயு 6:10).*
- *உலக சிநேகத்திற்கு விலகியிரு (யாக்கோபு4:4).*
- *துன்மார்க்கருடைய ஆலோசனைக்கு விலகியிரு( சங்கீதம் 1:1).*
- *மிஞ்சின எண்ணங்களுக்கு விலகியிரு (ரோமர் 12:3).*

# மதியிறுக்கமும், ஆவிக்குரிய மதியிறுக்கமும்..

# Autism and Spiritual Autism

*Bro. P.C. Philemon Rajah*

மதியிறுக்கம் என்பது ஒரு சரீர குறைபாடு. அதேப்போல ஆவிக்குரிய மதியிறுக்கம் என்பது ஆத்தும குறைபாடாகும். அதாவது, நோயாகும். மதியிறுக்கம் (ஆட்டிசம்) என்பது, மூளை, தகவல்களைப் பயன்படுத்திப் புரிந்துகொள்ளும் திறனைத் தடுப்பது. பார்த்தல், கேட்டல் என உணரும் விஷயங்களைச் சரியாகப் பயன்படுத்த முடியாமல், மனிதர்களின் நடவடிக்கைகள் மாறிப்போவதே ஆட்டிசம் எனப்படும்.

ஆவிக்குரிய மதியிறுக்கம் என்பது கர்த்தருடைய காரியங்களை (வசனங்களை) கேட்பதில், விசுவாசிப்பதில், அதற்கு ஏற்றபடி தன்னை மாற்றுவதில், அவைகளை அறிக்கையிடுவதில் மற்றும் அதற்கு கீழ்படியும்படி தன்னை ஒப்புவிப்பதில், மனிதருக்கு ஏற்படும் தடுமாற்றம் மற்றும் தடமாற்றமாகும்.

1) கேட்பதில் மதியிறுக்கம் மத். 13:15 'இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமம் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது. காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்ணை மூடிக்கொண்டார்கள் என்பதே

முதலாவதாக, நாம் கேட்பதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். கேட்பதில் மதியிறுக்கம் என்பது கர்த்தருடைய வார்த்தையை கேளாமலிருத்தல், கேட்பதை தவிர்த்தல், அப்படியே கேட்க வாய்ப்பு கிடைத்தாலும் ஆர்வமின்றி கேட்டல், கேட்கிறதை உணர மறுத்தல், கேட்கின்றதை மனதிற்குள் கொண்டு செல்லாமல் உடனே மறத்தல். கர்த்தருடைய வார்த்தை தன்னிடம் பேசுவதை பிறருக்கு என்று நினைத்தல், கர்த்தருடைய வார்த்தையினை கற்றுக்கொள்ளப்போதுமான நேரத்தினை கொடுக்காமலிருத்தல், மற்றும் கர்த்தருடைய வார்த்தை கேட்கக் கிடைக்கும் வாய்ப்புகளை வீணடித்தல் போன்றவையெல்லாம் கேட்பதில் மதியிறுக்கமாகும்.

இப்படிப்பட்ட மதியிறுக்கத்தினால் நிறைந்திருந்த மக்களைப் பார்த்து, ஆண்டவர் இயேசு கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக் கடவன்' என்று சொன்னார். (மத் 11:25). மேலும், கேட்கின்ற விதத்தினை குறித்து கவனமாக இருக்கச் சொன்னார். (மாற்கு 4:24). பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக்

கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும், கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்.

கர்த்தர், இஸ்ரவேல் மக்கள் பேசும்போது, அவர்கள் அதனை பொறுக்கக்கூடாமல், கர்த்தரைத் தங்களுடன் பேச வேண்டாம் என்றனர் (யாத் 20:19), ஸ்தேவான் கர்த்தருடைய வார்த்தையை போதிக்கும்போது, யூதர்கள் தங்கள் காதுகளை மூடிக்கொண்டனர் (அப் 7:57), அத்தேனே பட்டணத்து மக்கள் பரியாசம் செய்தனர் (அப் 17:32). பேலிக்ஸ் ராஜா அலட்சியம் செய்தான் (அப்போ 24:25). மார்த்தாள் உலக வேலைகளில் மும்முரமாக இருந்தாள் (லூக்கா 10: 40). ஆனால் மரியாளோ, ஆர்வத்துடனே ஆண்டவரின் பாதம் அமர்ந்து கற்றாள். (லூக் 10:39) ‘அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.‘

கர்த்தருடைய வார்த்தையினை தினந்தோறும் கேட்கின்ற பழக்கம் நமக்கு இருக்கின்றதா? அதனை தினம் வாசிக்கின்றோமா? இரவும் பகலும் தியானிக்கின்றோமா? மேலும், ஆராய்ந்து பார்க்கின்றோமா? அல்லது நேரமில்லை என இந்த உலகத்தின் பின்னே, உலக காரியங்களுக்காக ஓடிக்கொண்டிருக்கின்றோமா?

2. விசுவாசிப்பதில் மதியிறுக்கம். எபிரெயர் 4:2. ‘ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது. கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்ட படியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப் படவில்லை.

அடுத்ததாக, நாம் விசுவாசிப்பதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். விசுவாசிப்பதில் மதியிறுக்கம் என்பது கற்றுக்கொண்ட கர்த்தருடைய வார்த்தையின் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருப்பது.

ஆண்டவர் இயேசு அவர்கள் கண் முன்னே பிரமிப்பான காரியங்களை அதிசயமாக செய்திருந்தும், அவர்கள் அவரை நம்ப வில்லை. அவர்கள் கண்கள் அடைக்கப்பட்டவர்களாய் இருந்தனர். அதாவது, அதனை கண்டும் விசுவாசிக்கத்தக்க மனக்கண்கள் அற்றவர்களாக இருந்தனர் (மத்தேயு 1315). அப்படி இருப்பது பாவம் என ஆண்டவர் இயேசு எச்சரித்தார் (யோவான் 941). அப்படிப்பட்டவர் களின் வாழ்க்கையில் கர்த்தர் செயல்படவும் மாட்டார்.

மத்தேயு 13:58 'அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.'

கர்த்தருடைய சத்தியத்தினை கேட்பது எவ்வளவு முக்கியமோ, அதனை முழு மனதோடு நம்புவதும் மிக முக்கியம்தான். கர்த்தருடைய வார்த்தையின் ஏதோ ஒரு பகுதியையோ, வசனத்தினையோ நாம் நம்ப மறுப்பது என்பது, முழு பைபிளையும் நம்ப மறுப்பதாகும். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கும் போது நம் மனோ நிலை எப்படிப்பட்டதாக இருக்கின்றது. கர்த்தருடைய வார்த்தையினை கேட்கும் போது நாம் அதன் மீது நம்பிக்கை கொண்டால், அது பயனுள்ளதாகவம், நம்ப மறுத்தால் பயனற்றதாகவும் இருக்கும் [எபி 4:1,2]. ஆண்டவர் இயேசு அவருடைய வார்த்தையினால் அவரை விசுவாசிக்கிறவர்களுக்காக ஜெபித்தார். யோவான் 17:20 'நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

நமக்ண்ள் இருக்கும் நம்பிக்கை என்பது, கர்த்தர் நம் வாழ்வில் செய்த நன்மைகளை வைத்தோ, நாம் வேண்டியவைகள் கிடைத்ததை வைத்தோ இருக்கக் கூடாது. நமக்குள் இருக்கும் விசுவாசம் ஆபிரகாமை போல, அவருடைய வார்த்தையினாலே' அவரை விசுவாசிப்பதாக இருக்க வேண்டும். ரோமர் 10:17 'ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.'

ஆகையால், நாம் கர்த்தருடைய வார்த்தை முழுவதையும் முழு மனதுடனே விசுவாசிப்போம். ஆம்! நம்மை விடுதலையாக்க வல்லமையுள்ள சத்தியத்தினை முழுமனதுடன் விசுவாசிப்போம் [யோவான் 8:32]. ஏனெனில், கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் தவறுவதில்லை. ஏசா 55:10, 11 'மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து. விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனம் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து. நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.

### 3. மனந்திரும்புவதில் மதியிறுக்கம்

மத் 13:15 'இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும்

இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே.

அடுத்ததாக, நாம் மனந்திரும்புவதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். மனந்திரும்புவதில் மதியிறுக்கம் என்பது கற்றுக்கொண்ட கர்த்தருடைய வார்த்தைய உணர்ந்து திருந்தாமல், தங்கள் பாவங்களிலே நிலைநிற்பது என்பதாகும்.

இந்த கடினமான மனநிலையை ஆண்டவர் இயேசு மிகவும் கடினமாக கடிந்து கொண்டார். அவர்கள் மீது வரும் பயங்கரமான அழிவை முன்னறிவித்தார். லூக்கா 13:2,3 'இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்ல வென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.

கர்த்தர் அவருடைய வார்த்தைகளின் மூலம் என்னிடம் பேசுகின்றார் என்பதனை உணராமல் வாழ்வதும், மற்றவர்களோடு ஒப்பிட்டு தங்களைத் தாங்களே மெச்சிக்கொண்டு தங்கள் தவறுகளை உணராமல் இருப்பதும் ஞானமற்ற செயலாகும். 2. கொரி 10:12 'ஆகிலும் தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; தங்களைக் கொண்டு தங்களை அளந்துகொண்டு தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல.

சங்கீதக்காரன் தன் பிழைகளை உணர்கிறவன் யார்? என கேட்கின்றார். மேலும், தன்னை உணர்வுள்ளவனாக்கும்படி வேண்டுகின்றார்.

சங் 19:12, 119:73, 125, 169). உணர்வுள்ள இருதயம் வேண்டி ஜெபித்து பெற்றுக் கொண்டார் (1 இராஜா 3:12). ஆகையால், நம் தவறுகள் மற்றும் பாவங்கள் கர்த்தருடைய வார்த்தையினாலே சுட்டிக் காட்டப்படும்போது உடனே நம்மை நாமே திருத்திக்கொள்வோம். அது கர்த்தர் நமக்குத் தருகின்ற மிகப்பெரிய வாய்ப்பாகும் (லூக்கா 13:6--9).

### 5) கீழ்ப்படிவதில் மதியிறுக்கம்

மத்தேயு 7:21 ' பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.'

கடைசியாக, நாம் கீழ்படிவதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். கீழ்படிவதில் மதியிறுக்கம் என்பது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருப்பதாகும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதற்கு பதில் கீழ்ப்படியாமல் இருக்க என்ன நியாயமான காரணம் சொல்லலாம் என யோசிப்பவர்களும், சொல்பவர்களும் அரசனாகிய சவுலைப் போல கீழ்ப்படிதலில் மதியிறுக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர். அப்படிபட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டியது

என்னவெனில், கீழ்ப்படிதலுக்கு பதிலீடாக ஒன்றையும் வைக்க முடியாது என்பதே ஆகும். 1 சாமுவேல் 15:22, 23 'அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்த்திலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமே: பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியப் பாவத்துக்கும், இரண்டகம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாரா தனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்.

நாம் பரலோகப் பிதாவின் மீதும், கிறிஸ்துவின் மீதும் அன்புள்ளவர்களாக இருக்கின்றபடியினாலே, அவருடைய சத்தம் (வார்த்தை) கேட்கும் ஒவ்வொரு முறையும் அதற்கு கீழ்படியத்தக்கதாக நம்மையே அடிமையாக அர்ப்பணிப்போம். ரோமர் 6:17 'முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்.

மனிதர்களின் யோசனைகளிற்கு மதிப்பளித்து கர்த்தருடைய வார்த்தையை புறந்தள்ள வேண்டாம் (மாற்கு 7:9), ஏனெனில், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருப்பது நமக்கு பேராபத்தினைக் கொண்டு வரும். யோவான் 12:48

'என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். ஆகையால், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதைத் தாமதிக்கவும் வேண்டாம். தள்ளிப்போடவும் வேண்டாம் மற்றும் தவிர்க்கவும் வேண்டாம் (மலா 1:15-24). ✝

# ஆதி அன்பு

## The First Love

*Arjunan*

ஆதிஅன்பு மிகவும் சிறப்பானது. அந்த அன்பில் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டுமென நம்முடைய தேவனாகிய கர்த்தர் விரும்புகிறார். அநேகர் ஆதி அன்பை விட்டு விடுகின்றனர். ஆகையால், வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட சபைகளுக்கு கர்த்தர் திருவுளம்பற்றும்போது: 'நீ ஆதியிலே கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று எழுதுகிறார் [வெளி.2:4]. ஞானஸ்நானம் எடுத்து பல நல்ல தீர்மானங்களோடு ஜீவிக்கிற சிலர் நாளடைவில் தங்களுடைய விசுவாசத்தில் ஆட்டம் காண ஆரம்பித்து விடுகிறார்கள். பலவிதமான சோதனை வருகிறது என்ன செய்வதென்று தெரியவில்லை. முன்னே இந்தவிதமான பாடுகள் எல்லாம் வரவில்லை. இப்பொழுது பாடுகளும் பிரச்சனைகளும் வந்து வேதனையளிக்கிறது என்பார்கள். பாடுகளும் பிரச்சனைகளும் இல்லாத வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையில்லை. தனக்கு வரக்கூடிய சோதனைகளைச் சகித்து வெற்றியுள்ள ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழவேண்டும். 'ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும், பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்' என்கிறார் அப்போஸ் தலனாகிய யோவான் [1யோவா.2:24]. துவக்கத்தில் இருக்கிற அன்பும் விசுவாசம் குறைவதற்கு காரணம். ஆதி முதல் கேள்விப்பட்ட வசனம் உங்களில் நிலைத்திராதிருப்பதுதான். அந்த வசனத்தை உங்க ளுடைய இருதயத்தில் வைதது்க் காக்கவேண்டிய பொறுப்புடையவர் களாக இருக்கிறீர்கள். ஒரு நிலத்தில் விதைக்கப்பட்ட விதை எப்படி அந்த நிலத்தில் வைத்துப் பாதுகாக்கப்படும்போது அது வளர்ந்து மரமாகவும், பயிராகவும் வளர்ந்து பலன் கொடுக்கிறதோ அதைப்போல தேவனுடைய வசனத்தை நீங்கள் உங்களுடைய இருதயத்தில் வைத்துப் பாதுகாக்கும்போது, நீங்களும் பாதுகாப்பாக இருப்பீர்கள். பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள் ஆவிக்குரிய கனிகளையும் கொடுப்பீர்கள்.

தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல். தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி,

அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்' என யூதா குறிப்பிடுகிறார் (யூதா 6). தேவனுடைய பார்வையில் மனிதர்களாக இருந்தாலும், தேவதூதர்களாயிருந்தாலும் தவறு செய்தவர்களை தேவன் தண்டியாமல் விடார் எனக் காண்கிறோம். தவறு செய்த தேவ தூதர்களை அதாவது, ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளா தவர்களை நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். தேவதூதர்களையே தேவன் தப்பவிடா திருக்கும்போது, ஆதி அன்பில் குறைவாக உள்ள உங்களையும் என்னையும் சும்மாவிடுவாரா?. ஆகையால், ஆதி அன்பில் நிலைத்திருங்கள்.

எபிரெய ஆசான் சொல்லும்போது: 'ஆகையால். மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு. விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்' என்கிறார் (எபி.12:1), நம்மிலே விசு வாசத்தை துவக்குகிறவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அதை முடிக்கிறவரும் அவரே எனக் காண்கிறோம். நம்மிலே விசுவாசத்தை துவக்கின அவர் மற்றவற்றையும் அருளா திருப்பாரா, அவர் சகலத்தையும் செய்ய வல்லவராயிருக்கிறார். நாம் நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்திலே பொறுமையோடே ஓடவேண்டும். அநேகர் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தை விட்டுவிட்டு வேறு மாதிரியாக நடக்கவும் ஓடவும் முயற்சிக்கின்றனர். அப்படிப் பட்டவர்கள் நாளடைவில் விசுவாசத்தில் நிலைத்திராமற் போய் விடுகிறார்கள். ஆண்டவர் பேதுருவிடம் பேசும்போது: 'சீமோனே. சீமோனே. இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்: நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்' (லூக்.22:31.32), விசுவாசத்தைத் துவக்குகிற கர்த்தர் அந்த விசுவாசம் ஒழிந்து போகாதபடி வேண்டிக் கொள்ளவும் செய்கிறார். ஒருவேளை அவர் நமக்காக வேண்டிக் கொள்ளாவிட்டால் நம்முடைய நிலைமை என்னவாகும் என்பதை யோசித்துப் பாருங்கள். இதையெல்லாம் அறிந்தபடியால் பிசாசு இப்படியாக கேட்டுக்கொண்டான். இன்றைக்கு அநேகர் சுளகில் உள்ள பதரைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சுளகினால் புடைத்தால் கோதுமை மணிகள் மட்டுமே நிலைத் திருக்கும், பதர் எல்லாம் பறந்தேபோகும். நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறீர்கள்? உங்களுடைய விசுவாசம் எப்படிப் பட்டதாயிருக்கிறது? உங்களுடைய ஆதிஅன்பு குறைந்திருக்கிறதா?

அல்லது அப்படியே இருக்கிறதா? அல்லது விசுவாசத்திலே வளர்ந்திருக்கிறீர்களா? பவுல் சொல்லும்போது; 'நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்' என்கிறான் [பிலி.3:12]. தேவன் நம்மை எதற்காகத் தெரிந்துகொண்டுள்ளார் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டும், அதை அறிந்துகொண்டு நாம் அவர் வழியே செல்லவேண்டும். அநேகர் எதற்காக கர்த்தரை ஏற்றுக்கொண்டோம் என்பதை அறியாமலே போய்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேறு ஒருநபர் ஒரு காரியத்தைச் சொன்னால் அதுவும் சரிதான் என்று அந்தவழியே போக முயற்சிப்பார்கள். ஆகையால், இயேசு சொல்லும்போது: 'என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்' என்கிறார் [யோவா.6:44]. நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டராயிருந்தால் தேவனுடைய வசனத்திற்குச் செவி கொடுத்து ஆதிஅன்பில் நிலைத்திருங்கள்.

மேலும், 'அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியம் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம் உண்டாயிருக்கிறது' என பவுல் சொல்லுகிறார் [எபே.3:12]. விசுவாசத்தினாலே என்ன பலன் என்று அநேகர் நினைக்கின்றனர். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என வாசிக்கிறோம். நம்முடைய முற்பிதாக்கள் விசுவாசத்தினாலே ராஜ்ஜியங்களை ஜெயித்தார்கள் வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். நாம் அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் தைரியம் அடைகிறோம். திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் பாக்கியத்தையும் பெறுகிறோம். எல்லோரும் தேவனிடத்திற்குச் சென்று விட முடியாது. இயேசு'என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று' சொல்லுகிறார். இயேசு இல்லாமல் தேவனிடத்திற்கு ஒருவரும் செல்லமுடியாது.

இயேசுவினிடத்தில் விசுவாசம் கொண்ட ஒரு நூற்றுக் அதிபதியைக் குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். அவன் 'இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டபோது. அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்க வேண்டுமென்று. அவரை வேண்டிக் கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக் கொண்டு; நீர் இந்தத் தயவு செய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான்.

நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப்போனார். வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை: ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும். அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்த மாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருண்டு: நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான். என் வேலைக்காரனே. இதைச்செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர்களை அனுப்பினான். இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்‘ [லூக்.7:3-8]. இந்த அதிபதியினுடைய விசுவாசம் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் காணப்படாத விசுவாசம். இயேசுவானவர் இவனுடைய விசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப் பட்டார். இன்றைக்கு உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதா யிருக்கிறது? கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவர்கள் தங்களுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்காக அல்லது உறவினர் களுக்காக வேண்டிக் கொள்ளுவார்கள். ஆனால், இந்த நூற்றுக்கு அதிபதியோ தன் வேலைக்காரனுக்காக ஆண்டவரை நோக்கி வேண்டிக்கொண்டான். அப்படியானால் எப்படிப்பட்ட ஒரு எஜமானன் என்று பாருங்கள். இப்படிப்பட்ட ஒரு எஜமானனிடம் வேலை பார்த்த அந்த வேலைக்காரன் உண்மையிலே ஆசீர்வதிக்கப்பட்டவன். நீங்கள் ஒரு எஜமானனாக இருந்தால் இந்த நூற்றுக்கு அதிபதியைப் போல இருங்கள். நீங்கள் ஒரு வேலைக்காரனாக இருந்தால் நூற்றுக்கு அதிபதியினிடத்தில் வேலைபார்த்த அந்த வேலைக்காரனைப்போல உங்களுடைய எஜமானனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.

ஆண்டவர் சொல்லும்போது; ‘என்னிடத்தில் இடறலடையாதிருக் கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்‘ [லூக்.7:23]. நீங்கள் இயேசுவினிடத்திலும் அவருடைய வசனத்திலும் நம்பிக்கை கொள்ளுங்கள். அப்பொழுது தேவனுடைய மகத்துவங்களைப் பார்ப்பீர்கள். அநேக யூதர்கள் அவருடைய வசனத்தின் நிமித்தம் இடற லடைந்தார்கள். அதைக்குறித்து சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள். உங்களுடைய விசுவாசம் ஆதிஅன்பும் எப்படிப்பட்டதாயிருக்கிறது? தொடர்ந்து ஆதிஅன்பில் நிலைத்திருங்கள். ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையும் முக்கியமானதா?

ஆம், 'நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில். கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம் (எபி.3:14), எகிப்திலிருந்து கானான் தேசம் வரை 40 ஆண்டுகளாக உறுதியாக நிலைத்திருந்தவர்களுக்கே அந்த தேசத்தில் பங்கு கிடைத்தது. அதை நம் முற்பிதாக்கள் பங்கிட்டுக் கொடுத்தார்கள். அதைப்போல நாம் ஆரம்பத்தில் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்போது கொண்டுள்ள நம்பிக்கையை விட்டு விடாது காத்து முடிவுபரியந்தம் கஷ்டத்திலும் நஷ்டத்தினும் கர்த்தருடையவர்களாக இருக்கும்போது அவரிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். அவருடைய ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கும். நாம் நித்தியத்தில் அவரோடு பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இயேசுவின் மூலமாக பெற்றுக்கொள்ளுவோம். ஆகையால், ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை அசட்டை செய்துவிடாதிருங்கள். நாங்கள் உங்க ளுக்காக ஜெபிக்கிறோம்.

## கண்கள்

1. கண்ணானது சரீரத்தின் ஓர் அவயவமாய் இருக்கிறது (1 கொரிந்தியர் 12:12).

2. மாம்சமான கண்கள் மனுஷன் பார்க்கிற பிரகாரமாய் பார்க்கும் (யோபு 10:4).

3. உன் கண்கள் காணும் காரியங்களினாலே மதி மயங்கி போவாய் ( உபாகமம் 28:34).

4. உன் கண்கள் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதை பிடுங்கிப் போடு ( மத்தேயு 5:29).

5. கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது ( மத்தேயு 6:22).

தேவன்

## என் மனப்பான்மை

## My Attitude

*Clifp Holmes*

இந்த நாள் முடிவதற்கு முன் நான் செய்ய வேண்டிய காரியங்களை எதிர்பார்த்து அதிகாலையிலேயே எழுந்தேன். இன்று நான் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்புகள் எனக்கு உண்டு. இந்த நாள் எனக்கு எப்படிப்பட்ட நாளாயிருக்கும் என்பதை தெரிந்து கொள்ளும் வேலை எனக்கு உண்டு.

இன்று மழை பெய்து கொண்டிருக்கிறது என்று நான் குறை கூறலாம் அல்லது புல்களுக்கு இலவசமாக தண்ணீர் ஊற்றப்படுகிறது என்று நன்றி உள்ளவனாக இருக்கலாம்.

இன்று என்னிடம் அதிகமாக பணம் இல்லை என்று என்னால் சோகமாகவும் இருக்க முடியும் அல்லது என் பொருளாதார சிக்கல்கள் நான் பணத்தை வீணாக்காதபடி சிக்கனமாக, ஞானமாக செலவழிக்க என்னை உற்சாகப்படுத்துகிறது என்று மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும்.

இன்று என்னால் என் ஆரோக்கியம் குறித்து குறை கூறவும் முடியும் அல்லது நான் உயிரோடு இருக்கிறேன் என்று களிகூரவும் முடியும்.

இன்று என்னால் சிறு வயதில் நான் வளர்ந்து கொண்டிருந்தபோது எனக்கு கிடைக்காதவைகளைக் குறித்து புலம்பவும் முடியும் அல்லது அவைகள் தான் நான் இந்த உலகில் பிறக்க அனுமதித்தன என்று நன்றி உள்ளவனாயும் இருக்க முடியும்.

இன்று என்னால் ரோஜா செடியில் முட்கள் இருக்கிறது என்று புலம்பவும் முடியும் அல்லது முட்களுக்கு மத்தியில் கூட ரோஜா இருக்கிறது என்று அதைக் கொண்டாடவும் முடியும்.

இன்று நான் எனக்கு நண்பர்கள் யாரும் இல்லை என்று துக்கிக்கவும் முடியும் அல்லது நட்பு தேடல் பயணத்தை பரவசமாக மேற்கொள்ளவும் முடியும்.

இன்று என்னால் நான் வேலைக்குப் போக வேண்டுமே என்று முறுமுறுக்கவும் முடியும் அல்லது வருமானத்தை ஈட்டுவதற்கு தேவன் எனக்கு திராணியை தந்திருக்கிறார் என்று கெம்பீர சத்தத்தோடு சொல்லவும் முடியும்.

இன்று என்னால் நான் வீட்டு வேலையை செய்ய வேண்டுமே என்று முறுமுறுக்கவும் முடியும் அல்லது என் உடலுக்கும், என் உள்ளத்திற்கும், என் ஆத்துமாவுக்கும் கர்த்தர் ஒரு உறைவிடத்தை தந்திருக்கிறார் என்று பெருமைப்படவும் முடியும்.

இன்றைய நான் தான் உருவாக்கப்படும்படி எனக்கு முன்பாக இருக்கிறது. சிற்பியாகிய எனக்கு அதை வனையும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய நாள் எப்படி அமையும் என்பது என்னைப் பொறுத்துதான் இருக்கிறது. இந்த நாள் எப்படி இருக்க வேண்டும் என்பதை நான் தான் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நாள் உங்களுக்கு சிறந்த நாளாக அமையட்டும். ✝

**இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று நிராகரிப்பவர்கள் பெரும்பாலும் கீழ்க்காணும் கேள்வியை கேட்கிறார்கள்.**

சிலுவையில் தொங்கிய கள்வன் ஞானஸ்நானம் பெற்றுத்தான் இரட்சிக்கப்பட்டானா?

மக்களே, இன்று அந்த கள்வனைப் போல் யாருமே இரட்சிக்கப்பட முடியாது!

ரோமர் 10:9 இவ்விதமாகச் சொல்கிறது

‘என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரி லிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்‘.

ஆகவே, நீங்களும் நானும் விசுவாச செயல்பாடுகளை நடப்பிக்க வேண்டும்.

## தேவன்

## தேவன் இறையாண்மை உள்ளவர்

# God is sovereign

*Larry Murdock*

ஏன் உங்கள் தேவன் மற்ற தேவர்களை விட மேலானவராக இருக்கிறார்'? என்று சிலர் நம்மிடம் கேட்கலாம். வேதாகமத்தின் தேவன், வரலாற்றை பொருள்படும்படி படைத்திருக்கிறார். வேதாக மத்தின் தேவன் வருங்காலத்தையும் ஞானமாக உருவாக்குகிறார். வேதாகமம் தேவனைப் பற்றி கீழ்க்கண்டவாறு சொல்கிறது.

1 ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்.

2 பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.

3 நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்.

4 உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது.

5 அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர், நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள், காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

6 அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம்.

7 நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கிப் போகிறோம்.

8 எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.

9 எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது. ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.

10 எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே, அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்.

11 உமது கோபத்தின் வல்லமையையும், உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்து கொள்ளுகிறவன் யார்?

12 நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும் [சங்கீதம் 90:1–12].

ஒரு சந்ததி எழுகிறது, ஒரு சந்ததி மரித்துப் போகிறது. ஆனால், நித்திய தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார்! இப்பூமியில் நம்முடைய ஆயுசு நாட்கள் 70 அல்லது 80 வருடங்களாக இருந்தாலும் கூட, நம்மை உண்டாக்கின தேவனை நாம் சேவிக்க வேண்டும். அப்படி செய்வதன் மூலமாக, நம் வருங்காலம் உறுதியாகிறது, ஒரு நாள் நாம் தேவனோடு நித்திய நித்தியமாகவும் வாழ முடியும்.

Webster ஆங்கில அகராதி 'sovereign' என்பதற்கு எல்லாரையும் விட மேலானவர்; பிரதானமானவர்; எல்லோரையும் விட மகத்தானவர்; வல்லமையிலும் அதிகாரத்திலும் எல்லோரையும் விட உயர்ந்தவர்; ஆளுகை செய்கிறவர்; அரசர்; யாராலும் கட்டுப்படுத்த முடியாதவர்; யாரையும் சார்ந்திராதவர் போன்ற பொருள்களைக் கொடுக்கிறது. சாமுவேலின் நாட்களில் இஸ்ரவேல் தேசம் சுற்றிலும் இருந்த மற்ற தேசங்களைப் போல் தனக்கும் ஒரு ராஜா வேண்டும் என விரும்பியது. எனவே, தேவன் சாமுவேல் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு இவ்விதமாகச் சொன்னார். இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்களை எகிப்தியர் கைக்கும், உங்களை இறுகப்பிடித்த எல்லா ராஜ்யத்தாரின் கைக்கும் நீங்கலாக்கி விட்டேன்.

நீங்களோ உங்களுடைய எல்லாத் தீங்குகளுக்கும் நெருக்கங் களுக்கும் உங்களை நீங்கலாக்கி இரட்சித்த உங்கள் தேவனை இந்நாளிலே புறக்கணித்து, ஒரு ராஜாவை எங்கள்மேல் ஏற்படுத்தும் என்று அவரிடத்தில் கேட்டுக்கொண்டீர்கள். இப்பொழுது கர்த்த ருடைய சந்நிதியில் உங்கள் வம்சங்களின் படியேயும், ஆயிரங்களான உங்கள் சேர்வைகளின்படியேயும் வந்து நில்லுங்கள் என்றான். [1 சாமுவேல் 10:18,19]. நம்மில் எத்தனை பேர் தேவனிடம் 'எங்களுக்கு மேல் யாரையாவது வையுங்கள், என் வழியை நானே பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லுகிறோம்.

நண்பர்களே, சர்வ வல்ல தேவனை விட்டுவிட்டு நீங்கள் ஓடு கிறீர்களா? நம் சிருஷ்டிகர் எல்லாவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். சர்வ வல்ல தேவனாக அவருக்கு தெரியாதது ஒன்று இல்லை. அவரால் செய்ய முடியாதது என்று ஒன்றும் இல்லை. அதைப்போல் அவர் ஓர் எல்லைக்கு உட்பட்டவரும் அல்ல, எவ்வித கட்டுப்பாடுகளையும் அவர் மீது விதிக்க முடியாது.

இப்படிப்பட்ட சர்வவல்லவரிடம் நம் விண்ணப்பங்களை சமர்பிக்க நமக்கு வாய்ப்பு தரப்பட்டால் எப்படியிருக்கும்? அப்போஸ்தலனாகிய பவுல் கொலேசெ பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக எழுதுகிறார்.

9 இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம். நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்.

10 சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்

11 சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.

12 ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்.

13 இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

14 (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

(கொலோசெயர் 1:9–14).

இங்கே பவுல் சர்வ வல்லவருடைய கிருபாசனத்தண்டைக்கு தைரியமாய் நடந்து சென்று கொலோசெ பட்டணத்து கிறிஸ்தவர்களின் சார்பாக மன்றாடுகிறார். நண்பர்களே, பிரபஞ்சத்தின் சர்வ வல்லவரோடு ஜெபிக்கும் போது. எல்லாவற்றையும் அறிந்தவரோடு நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்; எல்லாவற்றையும் மாற்ற வல்லமை உள்ளவரோடு நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

காரியங்கள் இப்படி இருக்க நம்முடைய பதில் எப்படியாக இருக்க வேண்டும்? நாம் பணிந்து விசுவாசித்து ஆச்சரியத்தோடு பார்க்க வேண்டும்.‘அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28).

ஏசாயா 45 வது அதிகாரத்தில் கோரேசு என்னும் பேர் கொண்ட ராஜாவால் சர்வ வல்லவர் பேசிய வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கோரேஸ் ஒரு பெர்சிய ராஜாவாக இருந்தான். இந்தப் புறஜாதி ராஜாவை தேவன் தம்முடைய கட்டளையை நிறைவேற்றத் தெரிந்து கொண்டார். ஏசாயா 45:1–13 வசனங்களை கவனியுங்கள்:

1 கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க, கதவுகளைத் திறந்துவைக்கும்படிக்கும், அவனைப் பார்த்து, அவன் வலதுகையைப் பிடித்துக்கொண்டு, அவனுக்குச் சொல்லுகிறதாவது:

2 நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.

3 உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு,

4 வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன், நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தம், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தம், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு நாமம் தரித்தேன்.

5 நானே கர்த்தர், வேறொருவர் இல்லை என்னைத்தவிரத் தேவன் இல்லை.

6 என்னைத்தவிர ஒருவரும் இல்லையென்று சூரியன் உதிக்கிற திசையிலும், அது அஸ்தமிக்கிற திசையிலும் அறியப்படும்படிக்கு நீ என்னை அறியாதிருந்தும், நான் உனக்கு இடைக்கட்டு கட்டினேன், நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.

7 ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே, கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்.

8 வானங்களே, உயர இருந்து சொரியுங்கள், ஆகாயமண்டலங்கள் நீதியைப் பொழியக்கடவது, பூமி திறவுண்டு, இரட்சிப்பின் கனியைத்தந்து, நீதியுங்கூட விளைவதாக, கர்த்தராகிய நான் இவைகளை உண்டாக்குகிறேன்.

9 மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கு ஐயோ! களிமண் தன்னை உருவாக்கினவனை நோக்கி: என்ன செய்கிறாயென்று சொல்லத்தகுமோ? உன் கிரியையானது: அவருக்குக் கைகள் இல்லையென்று சொல்லலாமோ?

10 தகப்பனை நோக்கி: ஏன் ஜநிப்பித்தாய் என்றும், தாயை நோக்கி: ஏன் பெற்றாய் என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ!

11 இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவனை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள், என் பிள்ளைகளைக் குறித்தும், என் கரங்களின் கிரியைகளைக் குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள்.

12 நான் பூமியை உண்டுபண்ணி, நானே அதின்மேல் இருக்கிற மனுஷனைச் சிருஷ்டித்தேன், என் கரங்கள் வானங்களை விரித்தன, அவைகளின் சர்வசேனையையும் நான் கட்டளையிட்டேன்.

13 நான் நீதியின்படி அவனை எழுப்பினேன், அவன் வழிகளையெல்லாம் செவ்வைப்படுத்துவேன், அவன் என் நகரத்தைக் கட்டி, சிறைப்பட்டுப்போன என்னுடையவர்களைக் கிரயமில்லாமலும் பரிதானமில்லாமலும் விடுதலையாக்குவான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 45:1–13).

மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளை தேவன் கோரேசு ராஜா பிறப்பதற்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஏசாயா மூலமாக எழுதி கொடுத்தார். அது மிகச் சரியானது. இந்த வார்த்தைகள் அடிமைகளாக கொண்டு செல்லப்பட்ட யூதர்கள் மீது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை கவனியுங்கள். கோரேசு இந்த வார்த்தைகளை தன்னுடைய மனதிலே வைத்துக் கொண்டான். அதன் காரணமாக அவன் அந்த யூத ஜனங்களை எவ்வித விலையும் இன்றி, வெகுமதியும் இன்றி விடுவித்தான். கோரேசு தன் சொந்த செலவில் எருசலேம் தேவாலயத்தை கட்ட கட்டளையிட்டான்.

1 எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன்: எஸ்றா 1:1

2 பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். எஸ்றா 1:2

3 அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக. அவன் யூதாவிலுள்ள எருசலேக்குப்போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன். எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன். எஸ்றா 1:3

4 அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருகஜீவன்களையும் கொடுத்து, உதவிசெய்ய வேண்டும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன் ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம்பண்ணுவித்தான்' (எஸ்றா 1:1–4).

நண்பர்களே ,வேதாகமத்தின் தேவன் இப்பிரபஞ்சத்தில் சர்வ வல்லமை உள்ளவராய் இருக்கிறார். அவரை நாம் பணிந்து கொள்ள வேண்டாமா; அவரை விசுவாசிக்க வேண்டாமா; அவரை நாம் ஆராதித்து நம் வாழ்நாள் எல்லாம் அவருக்கு சேவை செய்ய வேண்டாமா?

✝

## கிறிஸ்து சபையை எப்படி நேசித்தார் ?

கிறிஸ்து சபையை தியாகப்பூர்வமாக நேசித்தார்

கிறிஸ்து சபையை பிரத்யேகமாக நேசித்தார்

கிறிஸ்து சபையை மிகவும் அக்கறையோடு நேசித்தார்

கிறிஸ்து சபையை சகிப்புத்தன்மையோடு நேசித்தார்.

## தேவன்
## இயேசுவின் வரலாற்று வேர்களை கண்டறிதல்
# Tracing Jesus'Historical roots
*T. Pierce Brown*



**நா**ம் கீழே இயேசுவைப் பற்றிய சில தீர்க்க தரிசன வசனங்களைக் காண முடியும். யூதர்கள் கூட இந்த வசனங்கள் அவர்கள் எதிர்நோக்கி இருந்த மேசியாவைத்தான் குறிக்கின்றன என்று ஒத்துக் கொண்டார்கள். இந்த வசனக் குறிப்புகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறின என்று புதிய ஏற்பாடு காட்டுகிறது. ஆதியாகமம் 3:15 இவ்விதமாக சொல்கிறது.

'உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்'(ஆதியாகமம் 3:15). (கலாத்தியர் 4:4,5) வசனங்கள் பழைய சர்ப்பமாகிய சாத்தானின் தலையை நசுக்கும் ஸ்திரீயின் வித்து இயேசு தான் என்று சுட்டிக் காட்டும் பல்வேறு வசனப் பகுதிகளில் ஒன்றாக இருக்கிறது.

ஆதியாகமம்18:17ல், தேவன் இவ்விதமாகச் சொன்னார். 'அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும் என்று வாசிக்கிறோம். அப்போஸ்தலருடைய நடபடிகள்3:25 யூத தேசத்தின் மூலமாகத்தான் பூமியில் உள்ள சகல வம்சத்தையும் ஆசீர்வதிக்கும் மேசியா வருவார் என்று காட்டுகிறது.'நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள். உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன் படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்'

(ஏசாயா 9:7) மேசியா தாவீதின் சிங்காசனத்தின் சுதந்திரர் என்று காட்டுகிறது. 'தாவீதின் சிங்காசனத்தையும், அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை, சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்'(ஏசாயா 9:7). நாம் மத்தேயு 1:1 ல் இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாற்றை பார்க்கும்போது இந்த தீர்க்க தரிசனம் அவரில் நிறைவேறுகிறது என்று பார்க்கிறோம். 'ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு (மத்தேயு 1:1).

மேசியா எங்கே பிறப்பார் என்று மீகா 5:2ல் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. 'எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது(மீகா 5:2). இந்த தீர்க்க தரிசனம் இயேசுவில் நிறைவேறியதை (மத்தேயு 2:1) உறுதி செய்கிறது. 'ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தபோது கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேக்கு வந்து, அதன் பின்பு இதே அதிகாரம் (4-6) வசனங்களில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம் 'அவன் பிரதான ஆசாரியர், ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச் செய்து, கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.

அதற்கு அவர்கள்,யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார், அதேனென்றால், யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல, என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள். (மத்தேயு 2:4-6).

தானியேல் 9:25 ல், நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். 'இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரம், அறுபத்திரண்டு வாரம் செல்லும். அவைகளின் வீதிகளும், அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும். ஆனாலும், இடுக்கமான காலங்களில் இப்படியாகும்.' இந்த தீர்க்கதரிசனம் (லூக்கா 2:1-2) வசனங்களில் நிறைவேறியது என்று நாம் பார்க்கிறோம்.

அந்நாட்களில் வாழ்ந்த பெரும்பாலான ரபீக்களுக்கு இயேசுவைப் பற்றி தீர்க்கதரிசிகள் உரைத்த தீர்க்கதரிசனங்கள் இயேசுவின் வாழ்வில் நிறைவேறியவரை அந்த தீர்க்கதரிசனங்களின் பொருள் அவர்களுக்குப் புலப்படாதிருந்தது. எரேமியா 31.15ல் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் புதிய ஏற்பாட்டில் வரலாற்றுப் பூர்வமாக நிறைவேறியது. மத்தேயு 2:17-18 வசனங்களில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

தேவன் உபாகமம் 18 :18ல், மோசேயிடம் இவ்விதமாகச் சொன்னார்.

'உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன், நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம்

அவர்களுக்குச் சொல்லுவார். ‘இந்த தீர்க்கதரிசனத்தை வரலாற்றில் இயேசு கிறிஸ்துவைப் போல் எந்த ஒரு நபரும் நிறைவேற்றவில்லை. நாம் யோவான் 6:14 ல், பார்க்கிற விதமாக இதை அந்த நாட்களில் வாழ்ந்த யூதர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ‘இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்‘

மேலும், யோவான்1:45 ல், நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். ‘பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு, நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்: அவர் யோசேப்பின் குமாரனும், நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்[யோவான் 1:45].

அந்நாட்களில் வாழ்ந்த ரபீக்களுக்கு எப்படி மேசியாவால் ராஜாவாக இருந்து கொண்டு மக்களால் நிராகரிக்கப்பட முடியும் என்று புரியாமல் இருந்தது. எனவே, அவர்களுள் பெரும்பாலானோர் இரண்டு மேசியாக்கள் இருப்பார்கள் என்று எண்ணினார்கள். ஆனால், ஏசாயா 53 மேசியாவைத்தான் குறிக்கிறது என்று எல்லோரும் ஒப்பு கொண்டார்கள். அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்த வருமாயிருந்தார், அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம், அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாமற்போனோம் [ஏசாயா 53:3]. நிச்சயமாகவே, நம்முடைய சொந்த அனுபவம் யோவான் 1:11 னுடன் ஒத்துப்போகிறது அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

[சகரியா 9:9] மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனமாகும். ‘சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு. எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி. இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும் கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மரியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்‘[சகரியா 9:9]. இது புதிய ஏற்பாட்டில் [யோவான்12:13-14]

வசனங்களில் நிறைவேறி இருக்கிறது.

13.குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்.

14. அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிற பிரகாரமாக!! என்று நாம் வாசிக்கிறோம்.

## தேவனுடைய வார்த்தை

# நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை

# It Looks Greek to me

*David R. Kenney*

**ஆ**ங்கிலத்தில் It looks Greek to me என்று பயன்படுத்தப்படும் சொற்றொடர், சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தைகள் கேட்பவருக்கு அல்லது வாசிப்பவருக்கு புரியாதபோது அந்த சந்தர்ப்பத்தில் அவர் எனக்கு ஒன்றும் புரியவில்லை என்று சொல்வதாக பொருள்படுகிறது.

இது பொதுவாக பலரால் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடரா கும். ஆனால், **இச்சொற்றொடரின் ஆரம்பத்தை ஒருவர் நினைத்துப்** பார்த்தால் அவர் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போவார். இந்த சொற்றொடர் ஷேக்ஸ்பியரின் Julius Caesar நாடகத்தில் இடம் பெற்றிருக்கிறது. எனவே, ஒருவர் நீங்கள் பேசுகிறது எனக்கு கிரேக்க மொழி போல் இருக்கிறது என்று மற்றொருவரை பார்த்து சொன்னால் பேசப்பட்ட வார்த்தைகள் அந்த நபருக்குப் புரியவில்லை என்று அர்த்தம். கிரேக்க மொழி இப்பூமியில் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்தாலும் கூட அது பல மாற்றங்களை சந்தித்து வந்திருக்கிறது.

உதாரணமாக, கிரேக்க கவிஞர் Homer என்பவர் எழுதிய Iliad மற்றும் Odyssey போன்ற நெடும் காவியங்கள் எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. ஆனால், நம்மிடத்தில் இருக்கும் இக்காவியத்தின் பழமையான பிரதி மூன்றாம் நூற்றாண்டை சார்ந்ததாக இருக்கிறது. இன்று உலகில் இருக்கிற பழங்கால கிரேக்க இலக்கியங்களில் இவ்விரு காவியங்களும் உள்ளடக்கம். கவிஞர் ஹோமரின் நாட்களில் பேசப்பட்ட கிரேக்கம் பழங்கால கிரேக்கமாக அழைக்கப்படுகிறது. ஆனால், ஹோமரின் நாட்களுக்கு முன்பாகவே இரண்டு வகையான கிரேக்கம் இருந்ததாக நம்பப்படுகிறது. அடுத்த தாக, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கிரேக்க மொழியாக koine கிரேக்கம் இருந்திருக்கிறது. இவ்வகையான கிரேக்கம் மகா அலெக் சாண்டர் உலகெங்கும் படையெடுத்து பல நாடுகளை கைப்பற்றிய போது உலகெங்கும் பரப்பப்பட்டது. இந்த koine அல்லது பொதுவான கிரேக்கம் கி.330 முதல் கி.பி330 வரை உலகம் முழுவதும் பேசப்பட்ட ஒரு மொழியாக இருந்திருக்கிறது. இன்றைய நாட்களில் பேசப்படும் கிரேக்கம் அல்லது நவீன கிரேக்கம் கி.பி 1453 முதல் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், இவ்வகையான கிரேக்கம் இதற்கு முந்தைய காலங்களில் பேசப்பட்ட கிரேக்கத்தை விட மாறுபடுகிறது.

வேத வல்லுநர்கள் இந்த Koine வகை கிரேக்கத்தினால் மிகவும் சிரமப்பட்டு இருக்கிறார்கள். ஏனென்றால், புதிய ஏற்பாட்டில்

பயன்படுத்தப்பட்ட கிரேக்கத்திற்கும் மற்ற இலக்கியங்களில் பயன் படுத்தப்பட்ட கிரேக்கத்திற்கும் பெருத்த வேறுபாடு இருந்திருக்கிறது. பின்பு இது குறித்து பல வேத வல்லுநர்கள் எடுத்த முயற்சியின் விளைவாக புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட கிரேக்கம் மற்ற கிரேக்கத்தை போல இலக்கிய வகையாக இல்லாமல் உரையாடல் வகையைச் சார்ந்ததாக இருக்கிறதைக் கண்டுபிடித்தார்கள்.

உதாரணமாக, சவக்கடல் தோல் சுருள்களுக்கிடையே காணப் பட்ட ஆவணங்கள் அவைகளில் சில மதச்சம்மந்தமான எழுத்துக்களா யிராமல் பொதுவான எழுத்துக்களை உள்ளடக்கிய ஆவணங்களாக இருந்தன. மேற்சொல்லப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்து பார்த்த போது, பல நிபுணர்கள் முன்பு சொன்னது போல koine கிரேக்கம் புரிந்து கொள்வதற்கு அவ்வளவு கடினமான ஒன்றாக இருக்கவில்லை. புதிய ஏற்பாடு அதிகமான மக்கள் வாசிக்க வேண்டும் என்பதற்காகத்தான் எழுதப்பட்டது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அந்நாட் களில் உலகளாவிய மொழியாக இருந்த இந்த koine கிரேக்கம் பேருதவியாக இருந்தது. ஆங்கிலமாக இருந்தாலும் சரி, தமிழாக இருந்தாலும் சரி, சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக மொழி எப்படி பயன்படுத்தப்பட்டது, இப்போது மொழி எவ்விதமாக பயன்படுத்தப் படுகிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக பதங்கள் பயன்படுத்தப்பட்ட விதத்துக்கும் இப்போது பதங்கள் பயன்படுத்தப்படுகிற விதத்திற்கும் உள்ள வேறுபாட்டை நம்மால் நன்றாக உணர முடியும். ஏதோ ஒன்று பொதுவாக இருக்கலாம். ஆனால், நாளை காரியங்கள் வேறு மாதிரியாக இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆதியில் தேவன் பாபேல் கோபுரத்தில் மொழிகளைத் தாறுமாறாக் கினார். எனவே, பிரிக்கவோ, இணைக்கவோ வார்த்தைக்கு வல்லமை உண்டு என்னும் உண்மையை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. வார்த்தைகள் எண்ணங்களை எடுத்துச் செல்லும் வாகனமாக இருக்கிறது. எண்ணத்தை வெளிப்படுத்தும் இவைகளை புரிந்து கொள்ளாமல் எண்ணத்தை மாத்திரம் ஒருவரால் எப்படி புரிந்து கொள்ள முடியும்? ஒருவர் கிரேக்க மொழியை அறியாமலேயே கிறிஸ்த வராகவும் முடியும். கிறிஸ்தவ வாழ்வை நன்றாய் வாழ்ந்து பரலோகம் போகவும் முடியும். ஆனால், கிரேக்க மொழியைப் படித்து அதன் ஆழமான அர்த்தத்தைப் புரிந்து கொள்வது என்பது தனிப்பட்ட முறையில் நமக்கு கிடைக்கும் திருப்தியாகும். உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசிங்கியுங்கள் என்று இயேசு கிறிஸ்து கட்டளையிட்டார் (மாற்கு 16:15). தேவன் தம்முடைய பராமரிப்பின் ஒரு விதமாக இந்த koine கிரேக்க மொழியை நமக்கு லாவகமாகத் தந்து அந்த கட்டளையை நிறைவேற்ற நமக்கு உதவி செய்திருக்கிறார். ✝

## இரட்சிப்பு

## வேதாகமத்தில் எங்கே நான் இரட்சிக்கப்பட இரண்டாவது வாய்ப்பு உண்டு என்பதை காண முடியும்?

## Where in the Bible Will I Find a Second Chance to be Saved

*Gary Colley*

**நோ**வாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தின் போது, பேழையின் கதவு அடைக்கப்பட்டு, தண்ணீர் மேலே எழும்பிய போது மூழ்கிக் கொண்டிருந்த ஜனங்கள் நோவாவிடம் தங்களைக் காப்பாற்று ம்படி கெஞ்சி இருப்பார்கள். அதேபோல் நியாயத்தீர்ப்பு நாள் வரும் போது எனக்கு ஒரு நாள், ஒரு மணி நேரம் அல்லது ஒரு நிமிட மாவது கூடுதல் வேண்டுமென்று ஆசைப்படுபவர்கள் அநேகர் இருப்பார்கள்.

நாம் சரியான பாதையை அறிந்து கொள்ளும்போது, முக்கியமான காரியங்களுக்கு உடனடியாக கவனம் கொடுக்கப்பட வேண்டும். நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய நாட்களை ஒத்தி வைப்பது நித்திய விளைவுகளை உண்டு பண்ணும். [மாற்கு 16:15,16; 2தெசலோனிக் கேயர்1:7-9]. ஒவ்வொருவருக்கும் கர்த்தருடைய சபையா, உலகமா சரியா, தவறா; நன்மையா, தீமையா நெருக்கமான வழியா விசாலமான வழியா என்பவைகளைத் தெரிந்து கொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறது [மத்தேயு 7:13,14]. ஆம், எல்லோருக்கும் தெரிந்து கொள்ளும் உரிமை உண்டு. ஆனால், யாருக்கும் இரண்டா வது வாய்ப்பு கொடுக்கப்படாது. இன்று இரட்சண்ய நாள் என்பது தான் செய்தியாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய கிருபையை ஒருவரும் விருதாவாய் பெறக்கூடாது என்று புத்திமதி சொன்னார் [2 கொரிந்தியர் 6:1-2]. எபிரேய ஆசிரியர் இவ்விதமாகச் சொன்னார். 'அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப் படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்து வும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசன மாவார்' [எபிரேயர் 9:27,28]

அடுத்ததாக, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நடக்கும் சம்பவங்களை பேதுரு ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்[2 பேதுரு 3:9,10].




அந்தப்பஜ, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்று இயேசு சொன்னார் [மத்தேயு 25:46]. நாம் பார்த்த எல்லா வசனங்களுமே இந்த பூமிக்குரிய ஜீவியத்தில் ஆயத்தம் என்பது மிகவும் முக்கியமானது என்பதைத்தான் வலியுறுத்துகின்றன. நமக்கு இரண்டாவது வாய்ப்பு உண்டு என்பது பற்றியோ, நாம் மரித்த பிறகு செல்லும் பாவ சுத்திகரிப்பு இடத்தைப் பற்றியோ வேதாகமத்தில் எந்த அடையாளமும் குறிப்பிடப்படவில்லை.11 ஏனெனில், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,

12. நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி

13. நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்ன மாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. இன்றே கீழ்ப்படியுங்கள் [எபிரேயர் 5:8-9].

அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, [எபிரேயர் 9:27]. 'அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து போகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான் '[லூக்கா 16:26]. ✝





# சுவிசேஷகனுடைய வேலை
# The work of an Evangelist

*Wayne Barrier*

அபோஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு சுவிசேஷகனுடைய வேலையை செய்' என்று கட்டளையிடுகிறார் [2 தீமோத்தேயு 4:5]. சுவிசேஷ னுடைய வேலை என்பது என்ன? 2 தீமோத்தேயு 3:10–4:5 வசனங்களை வாசித்தால் அதற்கான விடை கிடைக்கும்.

'நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும், அன்பையும் பொறுமை யையும், அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய். எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன். இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கி விட்டார்.

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.

பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர் களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.

நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு. அவை களை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்பு க்கேற்ற ஞானள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டி ருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத் தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது. 2 தீமோத்தேயு 3:17

நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறி ஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவரு டைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லு.

ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும்.

நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. (2 தீமோத்தேயு 4:1–5)

**நீங்கள் சுவிசேஷனுடைய வேலையைச் செய்ய விரும்பினால்**

(1) அப்போஸ்தலனாகிய பவுலை வழிகாட்டியாக கொண்டு நம் வாழ்க்கையையும், வேலையையும் அமைத்துக் கொள்ள வேண்டும்




(2) பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்க விருப்பம் உள்ளவர்களாயிருக்க வேண்டும்

(3) பரிசுத்த வேத வாக்கியங்களை நன்றாக அறிந்திருக்க வேண்டும்

(4) திருவசனத்தை பிரசிங்கிக்க வேண்டும்

(5) எப்போதும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள திறன் பெற்றவர்களாயிருக்க வேண்டும்.

(6) எல்லா நீடிய சாந்தத்தோடும் ,உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு புத்திச் சொல்ல வேண்டும்

(7) தேவைகளையும், வாய்ப்புகளையும், கள்ள போதகத்தையும், கள்ளப் போதகர்களையும் அடையாளம் காணத்தக்கவர்களாக இருக்க வேண்டும் .

நமக்கு அதிகமான சுவிசேஷர்கள் அவசியப்படுகிறார்கள். இவ்வகையான ஊழியம் பலம் அளிக்கக் கூடியது , திருப்திகரமானது.✞

சபை

# கிறிஸ்துவையும், சபையையும் பிரிக்க முடியாது

# Christ and His church are inseparable

*Sunny David*

**சர்ச்** என்னும் ஆங்கில வார்த்தைக்கு நவீன அகராதி **கிறிஸ்தவர்கள் ஆராதிக்க கூடும் ஒரு கட்டிடம்** என்று பொருள் கொடுக்கிறது. பெரும்பாலான மக்கள் சபையென்றால் அது செங்கல், சிமெண்ட் கலவை மற்றும் கற்களால் ஆன ஒரு கட்டிடம் என்று வேதாகமத்திற்கு புறம்பான ஒரு எண்ணத்தைக் கொண்டிருக்கிறார் கள். ஆனால், சபை என்னும் வார்த்தை வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் ஒரு முறை கூட மேற்சொல்லப்பட்ட அர்த்தத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆங்கில வார்த்தையான ‘church‘ என்பது கிரேக்கப்பதமான ‘Ekklesia‘ என்பதன் மொழிபெயர்ப்பாகும். இந்த கிரேக்க பதத்தை தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து (மத்தேயு 16 :18) ல் தாம் சபையை கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த போது ‘Ekklesia‘ என்னும் கிரேக்க பதத்தின் பொருள் அழைக்கப்பட்டவர் களின் கூட்டம் என்பதாக இருக்கிறது. இரண்டாம் நூற்றாண்டில் வேதாகமம் கிரேக்க மொழியில் இருந்து லத்தின் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட போது ‘Ekklesia‘ என்னும் கிரேக்க வார்த்தை ‘chirche‘ என்று லத்தின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. ரோம உலகில் chirche என்னும் பதம் மதம் மத்த சம்பந்தமான **நிகழ்வுகள் நடக்கும் ஒரு கட்டிடம்** அல்லது **ஆராதனை கூடமாக** பயன்படுத்தப்பட்டது.



இருந்தபோதிலும், சபையின் வேதாகம அர்த்தம் இன்னும் மாறவே இல்லை. வேதாகமம் சபையை கிறிஸ்துவின் சரீரமாகத் தான் பேசுகிறது (எபேசியர் 1:22-23) . அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர் என்று வாசிக்கிறோம் (கொலோசெயர் 1:18).

சபை தேவனுடைய வீடாகவும் பேசப்பட்டிருக்கிறது( 1 தீமோத்தேயு 3:15). 1 பேதுரு 2:5 ல் கிறிஸ்தவர்கள் அந்த தேவனுடைய வீட்டில் மக்களாக இருக்கிறார்கள் என்று நாம் வாசிக்கிறோம்.கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு பவுல் இவ்விதமாக எழுதினார் நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே

அவயவங்களுமாயிருக்கிறீர்கள் (1 கொரிந்தியர் 12:27). இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய சரீரமாகிய சபையைப் பற்றியும் மற்றும் ஓர் அருமையான கருத்து (எபேசியர்5:23) ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். (எபேசியர் 5:23).

கிறிஸ்து சபையாகிய அவருடைய ஆவிக்குரிய சரீரத்தின் இரட்சகராக இருக்கிறார். அதுமட்டுமல்லாமல், அவர் சபைக்கு தலையாய் இருந்து அதை ஆண்டு கொண்டிருக்கிறார். மறுபடியும் நாம் எபேசியர்5:25 –27 வரை உள்ள வசனங்களில் கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து ஒப்புக் கொடுத்தார் என்று நாம் வாசிக்கிறோம். அதுபோல் அப்போஸ்தலர் 20:28 ல் கிறிஸ்து தம்முடைய சுய இரத்தத்தினாலே சபையை வாங்கினார் என்று சொல்லி நாம் வாசிக்கிறோம். வேதாகமம் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உள்ள நெருக்கமான உறவை விவரித்து காட்டுகிறது. எனவே, ஒருவர் கிறிஸ்துவை உடையவராய் இருந்து சபையை அவரால் நிராகரிக்க முடியாது. எவ்வகையில் பார்த்தாலும் கிறிஸ்துவையும், அவருடைய சபையையும் பிரிக்கவே முடியாது.

சபை பற்றிய முழுமையான அறிவு நமக்கு இல்லை என்றால் நாம் அது ஒரு கட்டிடம் என்கிற ஓர் எண்ணத்தில் தான் காணப்படுவோம். சபையைப் பற்றிய ஆழமான அறிவு இல்லாத காரணத்தினால் தான் பலர் நாங்கள் சபைக்கு போகிறோம். என்ன ஓர் அழகான சபை, அவர்கள் ஓர் அழகான சபையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். கிறிஸ்து ஸ்தாபித்த சபையின் தன்மை பற்றிய போதுமான புரிதல் இல்லாத காரணத்தினால் தான் அவர்கள் இப்படி எல்லாம் சொல்கிறார்கள். கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபை இவ்வுலகில் காணப்படும் பல்வேறுபட்ட மார்க்க பிரிவினை கூட்டத்தினால் ஆனதல்ல. கத்தோலிக்க சபையும், மற்ற புரோட்டஸ்டண்ட் சபைகளும் இவ்வுலகில் தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே கிறிஸ்து தாம் வாக்குத்தத்தம் செய்தபடியே அந்த பெந்தேகோஸ்தே நாளிலே எருசலேம் நகரில் தம்முடைய சபையை ஸ்தபித்தார் மத்தேயு16:18; (அப்போஸ்தலர் 2:37–47). இவ்வுலகில் காணப்படும் எல்லா மார்க்கப் பிரிவினை சபைகளும் மனிதனுடைய கண்டுபிடிப்புகளாகும். இது நாம் எபேசியர் 4:4ல் வாசிக்கின்ற ஒரே சரீரம் அல்ல. ஒரே சரீரம் தான் என்று வேதாகமம் வெளிப்படையாக தெரிவித்திருக்கும்போது அநேக

சரீரங்கள் உண்டு என்று வேதாகமத்தை புரட்டிப் பேசுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. இயேசு கிறிஸ்து தம்மை பின்பற்றுகிறவர்கள் ஆயிரக்கணக்கான அமைப்புகளாக பிரிந்து கிடக்கும்படி அல்ல, மாறாக, ஒன்றாக இருக்கும் படித்தான் ஜெபித்தார் .

சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கியது ஓர் ஆவிக்குரிய சரீரமாகும். வேதாகமத்தால் பேசப்படுகின்ற சபையை நம்மால் நேர்மறையாக அடையாளம் காண முடியும். இதன் தனித்துவம் வாய்ந்த அடையாளங்களும், உபதேச அம்சங்களும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. கிறிஸ்து சபையாகிய அவருடைய ஆவிக்குரிய சரீரத்தின் இரட்சகராக இருக்கிறார். அதுமட்டுமல்லாமல் அவர் சபைக்கு தலையாய் இருந்து அதை ஆண்டு கொண்டிருக்கிறார். மறுபடியும் நாம் எபேசியர்5:25 –27 வரை உள்ள வசனங்களில் கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி நாம் வாசிக்கிறோம். அதுபோல் அப்போஸ்தலர் 20:28 ல் கிறிஸ்து தம்முடைய சுய இரத்தத்தினாலே சபையை வாங்கினார் என்று சொல்லி நாம் வாசிக்கிறோம். வேதாகமம் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள நெருக்கமான உறவை விவரித்து காட்டுகிறது. எனவே, ஒருவர் கிறிஸ்துவை உடையவராய் இருந்து சபையை அவரால் நிராகரிக்க முடியாது. எவ்வகையில் பார்த்தாலும் கிறிஸ்துவையும், அவருடைய சபையையும் பிரிக்கவே முடியாது.

வேதாகமம் வெளிப்படையாக தெரிவித்திருக்கும்போது அநேக சரீரங்கள் உண்டு என்று வேதாகமத்தை புரட்டிப் பேசுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. இயேசு கிறிஸ்து தம்மை பின்பற்றுகிறவர்கள் ஆயிரக்கணக்கான அமைப்புகளாக பிரிந்து கிடக்கும்படி அல்ல மாறாக ஒன்றாக இருக்கும் படித்தான் ஜெபித்தார் .

கிறிஸ்து ஒரே ஒரு சபையைத் தான் கட்டினார். இரட்சிக்கப்பட்ட எல்லோரும் அதில் அங்கம் வகிக்க முடியும் என்பதை அறிந்திருந்தார் . ஆகவே, கிறிஸ்து ஒரே ஒரு சபையைத் தான் கட்டினார். இரட்சிக்கப் படுகிற அவர்களை கர்த்தர் அனுதினம் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று வேதவாக்கியம் நமக்குத் தெளிவாகச் சொல்கிறது (அப்போஸ்தலர் 2:47) .

வெளிப்படையாகவும் புதிய ஏற்பாட்டிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சபையின் தெய்வீக அமைப்பின் காரணமாக அதை மனிதனால் உண்டாக்கப்பட்ட எல்லா மார்க்கப் பிரிவினை கூட்டங்களில் இருந்தும் நாம் எளிதாக வேறுபடுத்திக் காட்ட முடியும். கிறிஸ்து ஒரே ஒரு சபையை தான் கட்டினார். இரட்சிக்கப்பட்ட

எல்லோரும் அதில் அங்கம் வகிக்க முடியும் என்பதை அறிந்திருந்தார். ஆகவே, கிறிஸ்து ஒரே ஒரு சபையைத் தான் கட்டினார். இரட்சிக்கப் படுகிற அவர்களை கர்த்தர் அனுதினம் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று வேதவாக்கியம் நமக்குத் தெளிவாகச் சொல்கிறது [அப்போஸ்தலர் 2:47].

எனவே, ஒருவராலும் கிறிஸ்துவின் சபையில் தன் சுய விருப்பத் தின்படி சேர முடியாது. வேதாகம போதனைக்கு ஜனங்கள் எங்கெல்லாம் கீழ்ப்படிகிறார்களோ அங்கெல்லாம் சபை இருக்கிறது. வேத வாக்கியங்களின் போதனைகளின்படி முதல் நூற்றாண்டில் ஜனங்கள் எப்படிக் கீழ்படிந்தார்களோ அப்படி இன்றும் ஜனங்கள் கீழ்ப் படியும்போது முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எவைகளையெல்லாம் செய்தார்களோ அவைகளை எல்லாம் இன்றைய கிறிஸ்தவர்களும் செய்வார்கள் [அப்போஸ்தலர் 2:38;மாற்கு16:16].

அவர்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக, அதாவது கிறிஸ்தவர்களாக மாத்திரமே இருந்தார்கள் [அப்போஸ்தலர்11:26;1 பேதுரு 4:16; ரோமர் 16:16].

✝

## வேதாகம போதனைகள்

கொடுத்தால் பெறுவோம் (லூக்கா 6:38)

விதைத்தால் அறுப்போம் (கலாத்தியர்6:7)

அடங்கியிருந்தால் உயர்வோம்( 1 பேதுரு 5:6).

தாழ்மையாய் இருந்தால் கிருபையைப் பெறுவோம்( 1 பேதுரு 5:5).

மன்னித்தால் மன்னிக்கப்படுவோம் (மத்தேயு 6:14).

இரக்கப்பட்டால் இரக்கத்தை பெற்றுக் கொள்வோம்( மத்தேயு 5:7).

**வாழ்வதற்கான உபதேசம்**

# இரட்சிக்கப்படுவதன் மூலமாக இழந்து போதல்/ இழந்து போவதன் மூலமாக கண்டடைதல்

# Losing through saving | Finding through losing

*Shane Fisher*

**ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்,**

என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்'(மத்தேயு 16:25). மதங்களைப் பற்றிய உலகத்தின் கருத்துக்கு நாம் ஒத்துப் போகும்போது இரட்சிக்கப்படுவதன் மூலமாக நம்மை நாம் இழந்து போகிறோம்:

**1. மதங்களின் பன்முகத்தன்மையை தழுவிக் கொள்ள வேண்டும்.**

இது எல்லா மதங்களும் சமமானது மற்றும் சரியானது என்னும் ஒரு பார்வை ஆகும். அதாவது, இது இஸ்லாம், இந்து மதம் போன்றவைகள் எல்லாம் சரியானது தான் என்னும் ஒரு கண்ணோட்டமாகும். ஆனால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரட்சிப்புக்கு தாம் **ஒரே வழி** என்று தெளிவாகச் சொல்லிவிட்டார் (அப்போஸ்தலர்4:12).

**2. உலகளாவிய இரட்சிப்பு என்னும் போதனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் .**

இது இவ்வுலகத்தில் உள்ள எல்லோரும் இறுதியில் இரட்சிக்கப் படுவார்கள் என்னும் ஒரு பார்வையாகும். ஆனால், இக்கருத்து எல்லா வேதவாக்கியங்களோடும் முரண்படுகிறது.

**3. மார்க்க பிரிவினை கூட்ட உபதேசங்களை ஏற்றுக்கொண்டு அதைப் பின்பற்றுபவர்களோடு ஐக்கியம் கொள்ள வேண்டும்**

இது மனிதனால் உண்டாக்கப்பட்ட எல்லா மார்க்க பிரிவினை கூட்டங்களுமே கிறிஸ்தவம் என்னும் ஒரே குடையின் கீழ் தான் வருகிறது. எனவே, எல்லாமே சமமானது தான் சரியானது தான் என்னும் ஒரு பார்வையாகும் .

எத்தனை பேர் இக்கருத்தை விசுவாசிக்கிறார்கள் என்பதை நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். சிலர் சில நாட்களுக்கு முன்பு மரித்துப் போன ஜான் என்பவரை பற்றி இவ்விதமாகச் சொல்வார்கள். ஜான் சபைக்குப் போன ஒருவராக இருக்கவில்லை. ஆனால், அவர் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்தார். அவர் ஒரு நல்ல தகப்பனாகவும், நல்ல கணவராகவும் இருந்தார். அவர் தன் குடும்பத்தை நன்றாக

பராமரித்தார். அவர் சமுதாயத்துக்கு நிறைய நற்கிரியைகளைச் செய்தார். அவர் ஒருபோதும் சட்டத்தை மீறியதும் இல்லை, மீறச் சொன்னதும் இல்லை. அவர் இப்போது பரலோகத்தில் இருக்கிறார். ஒருவர் எப்படி நல்லவராக வாழ்ந்தார் என்பது பற்றிய பட்டியல் இப்படி நீண்டு கொண்டே இருக்கும். ஆனால், அவர்கள் தேவனுக்குக் கணக்கு கொடுக்கும் வயதை அடைந்தவர்கள். எல்லோருமே சிருஷ்டிகருக்கு விரோதமாக பாவம் செய்து இருக்கிறபடியால் நிச்சயமாக நாம் தண்டிக்கப்படுவதற்கு பாத்திரராக இருக்கிறோம் என்னும் உண்மையைப் புரிந்து கொள்ள அவர்கள் தவறிவிட்டார்கள் [1 யோவான்3:4; இருந்த போதிலும், உண்மையான மார்க்கம் பற்றி தேவனுடைய கருத்துக்கு நீங்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும் போது இழந்து போவதன் மூலமாக உங்களைக் கண்டடைவீர்கள்.

1 ஒரே மார்க்கம் தான் உண்டு என்பது சத்தியத்தின் உண்மையாய் இருக்கிறது யோவான் 14: 5,6]

2 எல்லோரும் இரட்சிக்கப்பட மாட்டார்கள்[ மத்தேயு 7:13-14,21-23].

3 மார்க்க பிரிவினைக் கூட்டம் என்பது புதிய ஏற்பாட்டுக்கு அந்நியமாய் இருக்கிறது.

மார்க்க பிரிவினைக் கூட்டத்தில் பெரும்பாலான ஜனங்கள் மார்க்க சம்பந்தமான காரியங்களில் பன்முகத்தன்மை தவறானது என்பதை ஒத்துக்கொள்வார்கள்.

அதேபோல் இவ்வுலகில் உள்ள எல்லோரும் இறுதியில் இரட்சிக் கப்படுவார்கள் என்னும் போதனையையும் தவறென்று ஒத்துக் கொள்வார்கள். இருந்தபோதிலும், அவர்கள் போதிக்கிறவைகளில் பெரும்பாலானவைகள் புதிய ஏற்பாட்டுக்கு அந்நியமானது என்பதை காணாமல் இருப்பது வினோதமாய் இருக்கிறது. அப்போஸ்தலருடைய புத்தகத்தில் சபையின் வரலாற்றை சிந்தித்துப் பாருங்கள். அந்நாட்களில் சபை துண்டு துண்டாகவா பிரிந்து இருந்தது? முதல் நூற்றாண்டில் சபை பல்வேறுப்பட்ட நாமங்களை தரித்துக் கொண்டு, மனிதனால் உண்டாக்கப்பட்ட பல்வேறுபட்ட கொள்கைகளை பின்பற்றினதா? அப்போஸ்தலருடைய நடபடிகள் முழுவதும் பவுல் மேற்கொண்ட சுவிசேஷ பயணங்களில் அவரால் தொடங்கப்பட்ட சபைகள் எப்படி இருந்தன? பவுல் அங்கொன்றும் இங்கொன்றுமாக மார்க்கப் பிரிவினை கூட்டங்களையா ஸ்தாபித்தார்? லீஸ்திராவில் கிறிஸ்துவின் சபையை தொடங்கி விட்டு கொரிந்துவில் கத்தோலிக்க சபையையா அவர் தொடங்கினார்? வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆசியாவில் இருந்த ஏழு சபைகள் வெவ்வேறுபட்ட ஏழு மார்க்கப் பிரிவினைக் கூட்டங்களா?

ஆனால், நீங்கள் மார்க்க பிரிவினை கூட்ட மனதுடைய வர்களாக இருந்தால் எல்லா சபைகளும், சமமானது, சரியானது என்று தான் மற்றவர் களையும் நீங்கள் சம்மதிக்கச் செய்வீர்கள். இது புதிய ஏற் பாட்டுக்கு அந்நியமான ஒன்றாகும். நாம் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருந்து மார்க்கப் பிரிவினைத் தடைகளைத் தகர்த்தெறிந்து இயேசு கிறிஸ்து தன்னுடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்த ஒரே சபைக்கு திரும்புவோம். (அப்போஸ்தலர்20:28; எபேசியர்1:22-23;4 :4) .

**4. சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்படிந்து தேவனுக்கு உண்மையாய் வாழும் போது அது நமக்கு நித்திய ஜீவனைத் தரும்.**

நம் பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்க வல்லவரை நாம் தேட வேண்டும். இரட்சிப்புக்கு இயேசுவே ஒரே வழி.. நாம் அவர் சொல்லி யவைகளை நம்பும்போது அந்த விசுவாசம் தேவன் விரும்புகிற கீழ்ப்படிதலைக் கொண்டு வரும். ரோமர் 10:17; எபிரேயர் 5:8,9;2 தெசலோனிக்கேயர் 1:7-10). நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டு இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்( எபேசியர் 2:4-10). நம்முடைய இரட்சிப்பை நம்மால் சம்பாதிக்க முடியாது, நம் வாழ்க்கை நற்கிரியைகள் செய் கின்ற ஒன்றாக இருக்க வேண்டும். ஜீவன் உள்ள விசுவாசம் அப்படித்தான் கிரியைகளைச் செய்யும் (எபேசியர் 2:10; யாக்கோபு 2:14-26).

மதங்களைப் பற்றிய உலகத்தின் பார்வைக்கு இயேசுவின் நிமித்தம் என்னை நான் இழந்து போகும்போது வேதாகமத்திற்கு போய் சத்தியத்தை நான் கண்டடைவேன். அந்த வேதாகமம் தான் இயேசு கிறிஸ்து கட்டின சபையைப் பற்றிப் பேசுகிறது. அதாவது, இயேசு கிறிஸ்துவால் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்ட சபை பற்றி பேசுகிறது (மத்தேயு 16:18).

பணம் மற்றும் உடைமைகளைப் பற்றிய உலகத்தின் பார்வைக்கு நீங்கள் உங்களை ஒப்பு கொடுக்கும் போது இரட்சிக்கப்படுவதன் மூலமாக இழந்து போகிறீர்கள்.

1 இந்த உலகம் பொருளாசையையும், பேராசையையும் நற்பண்புகளாகப் பார்க்கிறது. ஆனால், மத்தேயு 16:26 இவ்விதமாகச் சொல்கிறது. 'மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? '(மத்தேயு 16:26). இயேசு கிறிஸ்து பேசின மற்றுமொரு முரண்பாடு உள்ள வாக்கியம் ஒருவர் இவ்வுலகத்தில் உள்ள எல்லாவற்றையும் ஆதாயப்படுத்தி அதை தன் மனதில் விக்கிரகமாக வைத்தால் அந்த நபர் நித்திய நித்தியமாக ஆத்துமாவை இழந்து போவார் என்று

சொல்லுகிறார். அந்தப் பணக்கார வாலிபன் தன் இருதயத்தில் ஒரு விக்கிரகத்தை வைத்திருந்தான். அது அகற்றப்பட வேண்டும் என்று இயேசு விரும்பினார். ஆனால், அந்த பணக்கார வாலிபனுக்கோ அதை தன் இருதயத்தில் இருந்து அகற்ற விருப்பமில்லாமல் இருந்தது. (மாற்கு 10:21-25).

2 இந்த உலகம், நாம் தேவனுக்கு தியாகப்பூர்வமாய் கொடுப்பது முட்டாள்த்தனமானது என்று பார்க்கிறது.

3 இந்த உலகம் ஒருவருக்கு செல்வத்தைப் பெருக்கும் ஆற்றல் ஒருவருடைய திறமை மற்றும் தந்திரத்தினால் தான் கிடைக்கிறது என்று நம்புகிறது.

4 இந்த உலகம் உக்கிராணத்துவத்தை ஒருவருடைய செல்வத்தை அதிகரிக்க அவசியமான ஒன்றாகத்தான் பார்க்கிறது. இருந்த போதிலும், பணம் மற்றும் உடைமைகளைப் பற்றிய தேவனுடைய பார்வைக்கு உங்களை நீங்கள் ஒப்புக்கொடுக்கும் போது இழந்து போவதன் மூலமாக உங்களை நீங்கள் கண்டடைவீர்கள் .

1 தேவன் அவருக்கென்று கொடுப்பதை நற்பண்பாகப் பார்க்கிறார் (2 கொரிந்தியர் 9:6-7).

2 தேவன் தியாகப்பூர்வமாக அவருக்குக் கொடுப்பதை ஞானமான ஒன்றாகப் பார்க்கிறார். மத்தேயு 25:46) .

ஏனென்றால், ஒருவர் உண்மையான மகிழ்ச்சியின் ரகசியம் கொடுப்பதுதான் என்பதை அறிந்து கொள்கிறார். மேலும், நாம் கொடுக்கும்போது நம்மை அபரிதமாக ஆசீர்வதிக்கும் தேவனைப் பிரதிபலிக்கிறோம் (2 கொரிந்தியர் 9:10-14). ; யாக்கோபு 1: 17 ).

3 உண்மையாகவே, பணம் சம்பாதிக்கும் ஆற்றல் தேவனிடத்தில் இருந்து தான் வருகிறது( உபாகமம்8:18) .

4 தேவன் உக்கிராணத்துவத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிகச் சிறந்த விதிகளுள் ஒன்றாகப் பார்க்கிறார்( மத்தேயு 25:14-30) . நான் இந்தக் கேடுகெட்ட உலகத்தில் என் பொக்கிஷங்களை சேர்த்து வைத்தால் நியாயத்தீர்ப்பின் போது எல்லாவற்றையும் இழந்து விடுவேன். ஆனால், நான் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைத்தால், எல்லாவற்றையும் நித்தியத்தில் கண்டடைவேன். (மத்தேயு 6:19-20).

**வாழ்வதற்கான உபதேசம்**

# ஆத்தும ஆதாயம் செய்யும் ஞானம்
# The Wisdom of Soul Winning

*Ken Tyler*

கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாடு முழுவதும் நமக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிற கட்டளைகளுக்கும், உதாரணங்களுக்கும் இணங்கும் போது தேவனுக்குக் கீழ்ப்படிபடுகிறார்கள். மாற்கு 16:15,16 வசனங் களில் பிரதான கட்டளையை நாம் காண முடியும்.

15 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற்கு 16:15) விசுவாசள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப் படுவான். (மாற்கு 16:15,16).

கிறிஸ்தவர்கள் ஞானத்தை விரும்ப வேண்டும். நீதிமொழிகள் 11:30 நாம் அந்த ஞானத்தை எப்படி அடைய முடியும் என்று சொல்லுகிறது? அதாவது, **ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவன் ஞானவான்** என்று சொல்கிறது. மனிதர்கள் ஞானத்தை சம்பாதிக்கக் கடுமையான முயற்சிகளை எடுக்கிறார்கள். உலகப் பிரகாரமான பட்டங்களைப் பெற மக்கள் கடுமையான முயற்சிகளை எடுக் கிறார்கள். ஆனால், தேவனுடைய பார்வையில் ஞானியாயிருக்க மிக சுலபமான வழி ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது தான்.

சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் போதிக்கும் ஆசை முதலில் நாம் தேவன் மீது கொள்ளும் அன்பினால் வரும். அடுத்ததாக, மற்றவர்கள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பினால் வரும். அதன் பின்பு நாம் சபைக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் சவுகரியத்தை விட்டு வெளியேறி ஆயத்தம் என்னும் பாதரட்சையை கால்களிலே தொடுத்தவர்களாகப் போய் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் எபேசியர் 6:15. **உலகெங்கும் போய்** என்னும் பிரதான கட்டளை உபதேசத்திற்கும், பிரசங்கத்திற்கும், ஞானஸ்நானத்திற்கும் முன்பாக வருகிறது. சோதனை வேளையில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சபை கட்டடத்துக்குள் இருந்து கொண்டு தேவனே ஆத்துமாக்களை உள்ளே கொண்டு வாரும் என்ற பாடல் பாடுவதை நாம் பார்த்திருக்கி றோம். ஆனால், நாம் வெளியே போய் ஆத்துமாக்களைஆதாயம் செய்ய வேண்டும் என்று கட்டளை இடப்பட்டு இருப்பதை அவர்கள் கருத்தில்

கொள்வதே இல்லை. கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்திலேயே மிகப்பெரிய பணி சுவிசேஷத்தின் மூலமாக ஆத்மாக்களை ஆதாயம் செய்வது தான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். யாரோ ஒருவர் இவ்விதமாகச் சொன்னார். ஒரு ஆப்பிள் பழத்தில் உள்ள விதைகளை யாராலும் எண்ண முடியும். ஆனால், ஒரு விதையில் உள்ள ஆப்பிள் பழங்களை யாரால் எண்ண முடியும்?. இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை கனி கொடுக்கும்படியாக அனுப்பினார். சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலர் 8:4.

வீடுகள் தோறும் போய் சுவிசேஷத்தை அறிவிக்கும் பணி இப்பொழுது சில வருடங்களாக மீட்டமைக்கப்பட்டு இருக்கிறது, ஆனால், இந்த பணி இன்னும் முழுமை அடையவில்லை. தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள் [அப்போஸ்தலர் 5:42]. இந்த உதாரணம் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தூண்டுகோலாக அமைய வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் போதிப்பதன் மூலமாக ஒரு சிறந்த முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளும் மற்றவர்களுக்கு போதித்துக் கொண்டே வளர வேண்டும். ✝

**கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய ஏன் அதிக ஆட்கள் இல்லை :**

1. *சுவிசேஷம் மனதிற்கு தான் போதிக்கப்படுகிறது. அது இருதயத்தில் தங்குவதில்லை*
2. *போதுமான அளவு அக்கறைப்படுகிற கிறிஸ்தவர்கள் இல்லை*
3. *முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்கள் மாதிரியாய் இருப்பதில்லை*
4. *இளம் கிறிஸ்தவர்கள் சோர்ந்து போய் இருக்கிறார்கள். அவர்கள் உற்சாகப்படுத்தப்படுவதில்லை*
5. *கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு போதிக்கவில்லை என்றால் சத்தியத்தைப் போதுமான அளவு நேசிக்கவில்லை.*

**செயலில் கிறிஸ்தவம்**

# பெண்கள் நற்செய்தியைப் பகிர்ந்தார்கள்
# The women shared the Good news

*Paul Holland*

**வா**ரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங் கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல்புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு, உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல், அது குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிர காசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள்.

அந்த ஸ்திரீகள் பயப்பட்டுத் தலைகவிழ்ந்து தரையை நோக்கி: நிற்கையில், அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார் என்றார்கள். (லூக்கா 24:1–6).

மேற்கண்ட அந்த வசனப் பகுதிகளிலிருந்து நாம் சில முக்கியமான கருத்துக்களை தியானிப்போம். இங்கே இந்த பெண்கள் பொதுவாக பெண்கள் என்ன செய்வார்களோ அதையும் செய்தார்கள், மட்டுமல்லாமல், தேவதூதர்கள் சொன்னதையும் செய்தார்கள். மேலும், இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்களுக்கு அறிவிக்கும்படியாக தேவ தூதர்கள் சொன்னதையும் செய்தார்கள்.

பெண்களின் இந்த உரையாடல் எப்படி இருந்திருக்கும் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? இப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து பெண்கள் எப்படிப் பேசுவார்கள் என்று உங்களுக்கு தெரியும். அவர்கள் எல்லா தகவல்களையும் விவரமாக சொல்லி இருப்பார்கள். அவர்கள் சம்பவத்தைப் பற்றிய தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், தாங்கள் அறிந்த தகவல்களை போட்டி போட்டுக்கொண்டும் அறிவித்து இருப்பார்கள். அவர் களுடைய கண்கள் முழுவதும் கண்ணீரால் மூடப்பட்டிருந்திருக்கும்.

ஆனால், இங்கே ஆண்கள், அதாவது அப்போஸ்தலர்கள் எவ்விதமாக நடந்து கொள்வார்களோ அவ்விதமாகவே நடந்து கொண்டார்கள். இது போன்ற காரியங்களைப் பொதுவாக பெண்கள் மற்றவர்களுக்கு அறிவிக்கும் போது பரவசத்துடனும், பரபரப்புடனும் தான் அறிவிப்பார்கள். நான் தனிப்பட்ட ரீதியில் வாழ்க்கையில்

நடக்கும் சம்பவங்களை மற்றவர்களுக்கு அறிவிக்கும் போது மற்ற ஆண்களைப் போல நானும் அதிகமாக உணர்ச்சிவசப்பட மாட்டேன். ஆனால், என் மனைவி மற்ற பெண்களைப் போலவே ஒரு சம்பவத்தை மற்றவர்களிடம் அறிவிக்கும் பொழுது அதிகப்பரவசத்துடனும், பரபரப்புடனும் அறிவிப்பார். பொதுவாக, ஆண்கள் தங்கள் உணர்வுகளை அதிகமாக வெளிப்படுத்துவதில்லை. கிறிஸ்து உயிர்த்தெழுந்த நற்செய்தியை இந்தப் பெண்கள் அப்போஸ்தலர்களிடம் அதாவது ஆண்களிடம் அறிவித்தபோது அந்த வார்த்தைகள் அவர்களுக்கு வீண் பேச்சாகத்தான் இருந்திருக்கிறது. அதனால் அப்போஸ்தலர்கள் அந்தப் பெண்களின் வார்த்தைகளை நம்பவில்லை என்று நாம் பார்க்கிறோம்.

இன்றும் கூட நாம் பலரிடம் சுவிசேஷத்தை அறிவிக்கும் போது அவர்கள் அதை வீண் பேச்சாகத்தான் எடுத்துக் கொள்கிறார்கள். அதைப்போல நாம் பலரிடம் இயேசுவின் இரத்தத்தினால் நமக்குக் கிடைக்கும் பாவ மன்னிப்பு குறித்தும், கிறிஸ்துவின் சபையின் அழகைக் குறித்தும் அறிவிக்கும் போது பெரும்பாலானவர்கள் அவைகளை வீண் பேச்சுக்களாகத்தான் எடுத்துக் கொள்கிறார்கள். இந்தச் சம்பவத்தில் பெண்களின் பேச்சை அப்போஸ்தலர்கள் நம்பாதது போலத்தான் இவர்களும் நம்பாமல் இருக்கிறார்கள்.

ஆனால், இயேசுவைத் தனக்குத் தெரியாது என்று மூன்று முறை மறுதலித்த பேதுருவோ எழுந்திருந்து கல்லறையினிடத்திற்கு ஓடினான் என்று நாம் பார்க்கிறோம். பேதுருவுக்கு மன்னிப்பு அவசியமாய் இருந்தது. ஏனென்றால், பேதுரு யாருக்கும் எந்த தீமையும் செய்யாத தன் உற்ற நண்பராகிய இயேசுவுக்கு விரோதமாக பாவம் செய்தார். அந்த சோகமான சனிக்கிழமையில் மிகவும் துக்கப்படவும், புலம்பி அழவும் செய்த ஒரு அப்போஸ்தலன் என்றால் அது பேதுருவாகத்தான் இருக்க முடியும். பேதுரு அந்தக் கல்லறையை நோக்கி ஓடின போது, எப்படி ஓடியிருப்பார் என்று உங்களுக்கு தோன்றவில்லையா? பேதுரு வெறுமனே காலியான கல்லறையை நோக்கி ஓடவில்லை. மன்னிப்பை நோக்கி ஓடி இருக்கிறார்.

2000 ஆண்டுகளுக்குப் பிறகு கூட நீங்களும் நானும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றி ஆச்சரியப்படுகிறோம். அதே நேரத்தில் பாவம் எவ்வளவு கொடூரமானது அது நம் ஆண்டவர் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்திருக்கிறது என்பதைக் குறித்தும் ஆச்சரியப்படுகிறோம். நம்முடைய பாவங்கள் தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த ரோமர் மற்றும் யூதர்கள் கைகளினாலே கொலை செய்யப்படுவதற்கு காரணமாக அமைந்தது.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தேவனுடைய ஞானம் வெளிப்படுத்தப்பட்டு இருப்பது குறித்து நாம் ஆச்சரியப்படுகிறோம். மனிதனை இரட்சிப்பதற்கான தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தில் கிறிஸ்தவத்தின் உண்மை தன்மை வெளிப்படுத்தப்பட்டிக்கிறது . தேவனுடைய இந்த செயல் திட்டத்தை குறித்து மனிதனால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தேவனுடைய அன்பும், கிருபையும் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறபடியால் அது குறித்து நாம் ஆச்சரியப்படுகிறோம். இதே மனிதனாகிய பேதுருதான் பெந்தெகொஸ்தே நாளிலே இயேசுவைக் கொலை செய்த யூதர்களைப் பார்த்து , இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபடியால் அவருடைய ரத்தத்தின் மூலமாக உங்களுக்கும் எனக்கும் பாவம் மன்னிப்பு கிடைக்கும் என்று சொன்னார். மேலும், இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிறபடியால் நீங்களும் நானும் மரணத்தைக் குறித்தோ ,பாவத்தின் விளைவுகள் குறித்தோ பயப்பட வேண்டிய அவசியம் இல்லை .

பேதுருவின் நாட்களில் வாழ்ந்த மக்கள் எப்படி உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ரத்தத்தினால் பாவமன்னிப்பை பெற்றுக் கொண்டார்களோ, அதைப் பெற்றுக் கொள்ள என்ன செய்தார்களோ அதைத்தான் இன்றும் இரட்சிக்கப்பட விரும்புகிறவர்கள் செய்ய வேண்டியதாய் இருக்கிறது. 'பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'[அப்போஸ்தலர் 2:38]. இன்றும் கூட நாம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து ஆச்சரியப்படுகிறோம். அது நாம் மரணத்தை மகிழ்ச்சிகரமாக எதிர்பார்க்க அனுமதிக்கிறது.

✝

## நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால்

- நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 5:1).
- நாம் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருக்கிறோம் (பிலிப்பியர் 2:5).

## செயலில் கிறிஸ்தவம்

# கர்த்தருடைய சேனையில்

# In the Lord's Army

*Rodney Nulph*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபை பயந்தாங்கொள்ளிகளுக்கானதல்ல. இன்றைய நாட்களில் மதம் என்பது செயல்பட அவசியமில்லாத ஒரு வாழ்க்கை முறையாக பலரால் பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும், தேவனுடைய புத்தகமாகிய வேதாகமம் கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது பற்றி முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் பேசுகிறது. தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பற்றி பயன்படுத்தும் ஒப்புமைகளில் எனக்குப் பிடித்தமானது கிறிஸ்தவர்களை **போர் செய்பவர்களுக்கு** ஒப்பாக பேசுவது தான். புதிய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் முழுவதுமாக சபை போராடும் குணம் கொண்டு செயல்படுகிற ஒன்றாக இருக்க வேண்டும் என்பதன் மீது அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் தீமை செழித்தோங்க வேண்டுமென்றால் நல்லவர்கள் எதுவும் செய்யாமல் இருந்தால் அதுவே போதுமானது என்று யாரோ ஒருவர் மிகச் சரியாகச் சொன்னார். எனவேதான், தேவன் தம்முடைய ஜனங்கள் செயல் படுகிறவர்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆகவே, கர்த்தருடைய சேனையில் சேர்க்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் குறிப்பிட்ட பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய சேனையில் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் உள்ள பொறுப்புகளை நாம் வேத வாக்கியங்களின் அடிப்படையில் பரிசீலித்து பார்ப்போம்.

முதலாவது, கர்த்தருடைய சேனையில் சேருவது ஒருவருடைய விருப்பமாய் இருக்கிறது. யோசுவா தன்னுடைய வாழ்க்கையின் கடைசி நாட்களில், கர்த்தரை சேவிப்பது ஒருவருடைய தெரிந்து கொள்ளுதல் என்று சொல்கிறார் ‘கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றான் (யோசுவா 24:15). இயேசு கிறிஸ்து இந்த தெரிந்து கொள்ளுதலை வலியுறுத்தி வெளிப்படுத்தின விசேஷத்தை முடிக்கிறார். ‘ஆவியும், மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட்கிற வனும் வா என்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்ப ள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் (வெளி.22:17)

கர்த்தருடைய சேனையில் யாரையும் வற்புறுத்தி சேர்ப்பதில்லை. அதேபோல் கர்த்தருடைய சேனையில் யாரும் தற்செயலாக சேர்வதும் இல்லை. மாறாக, கர்த்தருடைய சேனையில் ஒவ்வொருவரும் தங்கள் விருப்பத்தின் அடிப்படையிலேயே சேருகிறார்கள்.

இரண்டாவது, கர்த்தருடைய சேனையில் தளபதி ஒருவர் இருக்கிறார். சிலர் கர்த்தருடைய சேனையில் சேர்ந்து விட்டு மற்றவர்கள் மீது தங்களுக்கு ஒரு கட்டுப்பாடு இருப்பதாக நம்புகிறார்கள். கர்த்தருடைய சேனையில், இயேசு கிறிஸ்து மாத்திரமே தளபதியாக இருக்கிறார். அவர் கட்டளையிடுகிறார் போர் செய்பவர்கள் அதைப் பின்பற்றுகிறார்கள்( மத்தேயு 16 :24 ). இயேசு கிறிஸ்து சேனையின் தளபதியாக இருந்து கொண்டு ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார் ( 1 தீமோத்தேயு 6:15). கர்த்தருடைய சேனையில் போர்ச்சேவகர்கள் உண்மையாகவும், மனமுவந்தும் இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறார்கள் (யாக்கோபு 4:7).

மூன்றாவது, கர்த்தருடைய சேனை கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறது. எப்படி நாட்டில் உள்ள சேனை கட்டளைக்குக் கீழ்படிகிறதோ அப்படியே, கர்த்தரின் சேனை தளபதியின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறது. அந்தக் கட்டளைகள் எல்லாம் ஒரு போர் சேவகனுடைய கைப் புத்தகத்தில் தெளிவாக இடம்பெற்றிருக்கிறது (11 தீமோத்தேயு 3:15-17) . ஒரு போர்ச்சேவகர் தளபதியின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியத் தவறும் போது அவர் பெரும் பிரச்சனையில் சிக்கிக்கொள்கிறார். கர்த்தருடைய சேனையில் உள்ள போர்ச்சேவகர்கள் அவர்கள் தளபதி அல்லாமல் வேறொருவருடைய ஞானத்தையும், கட்டளைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை (மத்தேயு28:18-20).

கடைசியாக, கர்த்தருடைய சேனை சத்துருக்களோடு ஐக்கியம் வைப்பதில்லை. கர்த்தருடைய சேனையில் நாம் சத்துருவுக்கு எதிராக போர் செய்து கொண்டிருக்கிறோம்( 1 பேதுரு 5:8) . நாம் சத்துருக்களோடு எவ்விதத்திலும் சமரசம் செய்து கொள்ளக் கூடாது (2 யோவான் 9-11) . சில போர்ச்சேவகர்கள் தங்கள் பதவியை தக்க வைத்துக்கொள்ளாமல், வேறு இடத்தில் சேர்ந்து கொண்டது போல நாம் செய்யக் கூடாது. இந்த யுத்தம் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காதவர்களுக்கானதாகும் ரோமர் 12:1-2).

கர்த்தருடைய சேனையில் நாம் சத்துருவுக்கு எதிராக போர் செய்து கொண்டிருக்கிறோம்(1 பேதுரு 5:8). நாம் சத்துருக்களோடு எவ்விதத்திலும் சமரசம் செய்து கொள்ளக் கூடாது (2 யோவான் 9-11).

அருமையான நண்பர்களே, போர் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. கர்த்தருடைய சேனையில் தங்களைச் சேர்த்துக் கொண்டவர்களுக்கு தொடர்ந்து போர் செய்யும் பொறுப்பு இருக்கிறது. தேவைப்பட்டால் ஒருவர் தன் உயிரையும் கர்த்தருக்காக கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும் [வெளி.2:10]. போர்ச் சேவகர்களாக பூமியில் நாம் யுத்தத்தில் ஈடுபடும்போது நமக்கு விடுறை என்பதே இல்லை. தினம் தினம் போராட்டத்தில் ஈடுபடுவது அவசியமாய் இருக்கிறது. ஆயினும், உண்மையான தளபதிக்கு சேவை செய்யவும், அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவும் சத்துருக்களோடு சமரசமாகாமல் இருப்பதற்கு தீர்மானத்தை எடுப்பவர்களுக்கு நித்திய வெற்றி ஆயத்தமாய் இருக்கிறது [யோவான்14:1-4].

கர்த்தருடைய சேனையில் சேர்ந்ததினால் தனக்கு கிடைக்கப் போகிற பலனை குறித்து பவுல் இவ்வளவு உறுதியாய் கீழ்காணும் வார்த்தைகளை எழுதியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. [2தீமோத்தேயு 4:7-8]. தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகள் இன்றும் நம்முடைய காதுகளில் உரக்க ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. **ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிரா தென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர் களுமா யிருப்பீர்களாக** [1 கொரிந்தியர் 15:58].

✝

## உக்கிராணத்துவ விதிகள்

**நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுப்பீர்கள் (கலாத்தியர் 6:7).**

**கொடுக்கப்படும் ஒன்றை விட அதை கொடுக்கிறவரின் மனநிலை முக்கியமானது( 1 கொரிந்தியர் 9:7).**

**முதலில் நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் (2 கொரிந்தியர் 8:5).**

**இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாக் கொடுங்கள் (மத்தேயு 10:8).**

# சாத்தான் சனிக்கிழமை வேலை பார்க்கிறான்
# Satan is working on Saturday

*Marilyn Lastrape*

**ஞா**யிற்றுக்கிழமை வீணான நாளாக இருக்கும்படி சாத்தான் சனிக்கிழமை மிகக் கடுமையாக வேலை பார்க்கிறான். ஞாயிற்றுக் கிழமையைப் பொறுத்தவரை சாத்தானுக்கு ஓர் அதி பயங்கரமான திட்டம் உண்டு. அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் சாத்தான் ஒருபோதும் தவறு செய்வதில்லை. சாத்தான் ஞாயிற்றுக்கிழமை தற்செயலாக நமக்குத் தொந்தரவு கொடுப்பதில்லை. மாறாக, திட்டமிட்டு அவற்றை செயல்படுத்துகிறான். சாத்தானின் திட்ட மெல்லாம் தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரீடமாகிய மனித இனம் நரகத்தில் நித்திய நித்தியமாக அவனோடு கழிக்க வேண்டும் என்பதுதான். ஞாயிற்றுக்கிழமை ஒரு வீணான நாளாக இருக்கும்படி சனிக்கிழமை சாத்தான் பயன்படுத்தும் சில தந்திரங்களை கீழ்க்கண்டவாறு காணலாம்.

☞ நீங்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு போவீர்கள். ஆனால், சனிக்கிழமை இரவு நீங்கள் தாமதமாகத் தூங்கினபடியால் ஞாயிற்றுக் கிழமையிலே கண்களை திறந்து வைக்க முடியாது. உங்களுக்கு சோர்வாக இருக்கும். எனவே, ஞாயிற்றுக்கிழமை ஒரு வீணான நாள்.

☞ நீங்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் கலந்து கொள்வீர்கள் ஆனால், சனிக்கிழமை உங்கள் நேரத்தையும், ஆற்றலையும் எடுத்துக்கொண்டகாரியங்கள் உங்கள் கண்களில் தோன்றி உங்கள் சிந்தனைகளை சிதறடிக்கும். எனவே ஞாயிற்றுக் கிழமை ஒரு வீணான நாள் .

☞ நீங்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டாம். ஏனென்றால், அந்த நாளில் தேவன் உன்னுடைய உங்கள் எல்லா காரியங்களிலும் இடைப்பட்டு உங்களை சீர் குலைக்கிறார். அந்த வாரம் முழுவதும் நீங்கள் கடுமையாக உழைத்தபடியால் ஞாயிற்றுக்கிழமை மட்டுமே உங்களால் ஓய்வெடுக்க முடியும். எனவே, ஞாயிற்றுக்கிழமை ஒரு வீணான நாள். சனிக்கிழமை உங்கள் பிள்ளைகள் இரவு நீண்ட நேரம் கண் விழித்தபடியால் அடுத்த நாள் காலையில் அவர்கள் உங்கள் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க மாட்டார்கள். எனவே, ஞாயிற்றுக்கிழமை ஒரு வீணான நாள்.

மேற்சொல்லப்பட்ட காரணங்களையும் இன்னும் அதிகமான காரணங்களையும் சாத்தான் நாம் ஞாயிற்றுக்கிழமை தேவனுக்குப் பிரியமான ஆராதனையை ஏறெடுக்காதபடி அவன் இவைகளை மிகத் தந்திரமாகப் பயன்படுத்துகிறான். சாத்தான் இந்தக் காரணங்களை எல்லாம் நாம் புரிந்து கொள்ளும்படி இதமாக நம்மிடம் பல விதங்களில் பேசுகிறான். சாத்தான் பல சந்தர்ப்பங்களில் நம்மை அவனுடைய வழியில் சிக்க வைக்க நாம் விரும்பியதை எல்லாம் தருவது மாத்திரம் அல்லாமல், நம் பாவச்செயல்களுக்கு எந்த விளைவும் இருக்கா தென்றும் , நாம் அதற்கு எந்த விலையும் கொடுக்க வேண்டாம் என்றும் நம்மை வஞ்சித்து விடுகிறான். சாத்தான் நம்மிடத்தில் எவ்வித அச் சுறுத்தலும், ஆபத்தும், அழிவும் இல்லாதது போல் வந்து முழுவதுமாக நம்மை வஞ்சித்து நம்முடைய வாழ்க்கையை நாசமாக்கிப் போடுகிறான்.

நாம் பிசாசுகளின் பொய்களையும் எளிதில் கண்டு பிடிக்கிறவர் களாக இருக்க வேண்டும். நம் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சாத்தான் எப்படிப்பட்டவன் என்று விரிவாக விளக்கி இருக்கிறார். ‘நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக் கிறீர்கள், அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷகொலைபாதகனா யிருக்கிறான், சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை, அவன் பொய்யனும் பொய்யுக்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத் தில் எடுத்துப் பேசுகிறான்(யோவான் 8:44). நம்முடைய பரம விரோதியாகிய பிசாசைப் பற்றி இயேசு கிறிஸ்து இந்த ஒரு வசனத்தில் சொல்லியிருக்கும் சத்தியத்தை நம் உள்ளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டால் நமக்கு எத்தனை ஆறுதலாக இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை ஒரு வீணாண நாள், போதுமான ஓய்வு கிடைக்க வில்லை என்று நீங்கள் சொல்கிறீர்களா? பிரசங்கியாரும் கூட மிக ஊக்கமாக சத்தியத்தை பிரசிங்கிக்கலாம். ஆனால், தூங்குகிறவர்களுக்கு அது எந்த விதத்திலும் பயன்படாது. தூங்கிக் கொண்டு தேவனை ஆவியோடும், உண்மையோடும் எப்படித் தொழுது கொள்ள முடியும்?

‘தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர். தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப் படத்தக்கவர்(சங்கீதம் 89:7). ஒட்டு மொத்தமாக கவனம்

சிதறடிக்கப்படுகிறது என்று சொல்கிறீர்கள். சரீர ரீதியாகவும், மனரீதியாகவும் தேவனுக்கு ஞாயிற்றுக்கிழமை நம்மை நாம் முழுமையாக கொடுக்கத் தடையாக இருக்கும் காரியங்களை சனிக்கிழமை செய்யக்கூடாது என்று நாம் தான் தீர்மானம் எடுக்க வேண்டும்.

நாம் ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தவான்களோடு சேர்ந்து தேவனை ஆராதிப்பதை எதிர்நோக்குகிறோமா? ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை தோறும் இந்த சவால் நமக்கு முன்பாக இருக்கிறது. சனிக்கிழமைதோறும் உங்கள் நேரத்தை எடுத்துக்கொள்ளும் காரியங்களைப் பட்டியலிடுகிறார். நம் தெரிந்துகொள்ளுதலையும் தீர்மானங்களையும் குறித்து நாம் ஜாக்கிரதையாய் இல்லையென்றால், சாத்தான் மிகத்தீவிரமாக வேலை செய்து எல்லா ஞாயிற்றுக் கிழமைகளையும் வீணான நாட்களாக மாற்றிவிடுவான்

✝

## வேதாகமத்தில் 40

நோவாவின் நாட்களில் இரவும் பகலும் 40 நாட்கள் மழை பெய்தது (ஆதி7:4).

இஸ்ரவேல் ஜனங்கள் 40 வருடங்கள் மன்னாவைப் புசித்தார்கள் (யாத் 16:35).

மோசே சீனாய் மலையில் இரவும், பகலும் 40 நாட்கள் தேவனோடு இருந்தார்( யாத் 24:18).

தேவன் இஸ்ரவேலர்களை 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் அலையும்படி செய்தார்( எண் 14:33,34).

# நாம் ஆராதனையில் ஏன் பங்கெடுக்கிறோம்?
# Why do we attend worship?

*Derek Broome*

**நா**ம் ஏன் ஆராதனையில் பங்கெடுக்கிறோம்? முதலாவதாக, நாம் சர்வ வல்ல தேவனுக்கு ஆராதனையை ஏறெடுக்கிறோம். தேவன் நம்முடைய சிருஷ்டிகராக, நம்மை போஷிப்பவராக இருக்கிறார். சபையாக நாம் தேவனுக்கு மாத்திரமே ஆராதனையை ஏறெடுக்க வேண்டும். ஏனென்றால், துதிகளுக்கு அவர் மாத்திரமே பாத்திரராய் இருக்கிறார். சபை என்பது நாம் போகின்ற இடம் அல்ல. மாறாக, அது நாம் அங்கம் வகிக்கும் ஒரு குடும்பமாகும். அதாவது, சபை என்பது நம் ஆவிக்குரிய குடும்பமாகும்.

யோவான் 4:24 இவ்விதமாக சொல்லுகிறது. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்' என்றார். எனவே, சபையாக நாம் தேவனை மனிதனுடைய வழிகளின்படி அல்ல, தேவன் அங்கீகரித்திருக்கிற வழிகளின்படி அவரை ஆராதிக்க வேண்டும்

(மத்தேயு 15:9). நாம் தேவனை சரியான காரணங்களுக்காகவும், சரியான மனநிலையுடனும் ஆராதிக்க வேண்டும். நாம் தேவனை கடமைக்காகவும். கட்டாயத்திற்காகவும் ஆராதிப்பதில்லை. மாறாக, நாம் தேவனிடத்தில் அன்பு கூருவதினால் நாம் கூடி வந்து ஆராதிக்கிறோம். அந்த அன்பின் நிமித்தமாக நம்முடைய ஆராதனை வீணான ஆராதனையாகப் போகாதபடிக்கு உண்மையாகவும் மனப் பூர்வமாகவும் நம் தேவனுக்கு ஆராதனையை ஏறெடுக்க வேண்டும்(யோவான் 4:24) . நம் கர்த்தராகிய தேவனை ஆராதிப்பதற்கு முன்பாக நம்மை நாம் சோதித்து அறிந்து அவரை ஆராதிப்பதற்கு நம் இருதயங்களை ஆயத்தமாக்க வேண்டும்( 1 கொரிந்தியர் 11:27-32).

பிரதானமாக, நாம் ஏறெடுக்கும் ஆராதனை எனக்கான ஒன்றாக இருப்பது உண்மையாக இருந்தாலும் கூட, அது ஒருவருக்கொருவர் நன்மை பயக்கக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கிறது. எபிரேயர் 10:24-25 வசனங்களில் தேவனை ஆராதிப்பதற்காகவும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லும்படியாகவும், சபை கூடி வருவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆராதனையில் நம் பாடல்கள் பாடி, ஜெபித்து, போதித்து, கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்து, உற்சாகமாக கொடுக்கும் போது நாம் அவருக்கு ஒட்டு மொத்தமாக சுகந்த வாசனையை ஏறெடுக்கிறோம்.



என்னைப் பொறுத்தவரை, எப்போதுமே நான் சரியான மனநிலையுடன் ஆராதித்திருக்கிறேன் என்றோ, ஆராதனையில் என்னுடைய சிறந்ததை கொடுத்திருக்கிறேன் என்றோ சொல்ல முடியாது. இருந்தபோதிலும், விசுவாசத்தில் வளர்ந்திருக்கிறேன், அன்பு கூருவதில் வளர்ந்திருக்கிறேன் என்று தான் சொல்லமுடியும்.

ஒருவரிடம் இருந்து நாம் கேட்கும் மிக மோசமான வார்த்தை என்னவென்றால், ஆராதனையிலிருந்து எதுவும் கிடைக்கவில்லை என்று அவர் சொல்லும் வார்த்தை தான். இன்று உலகில் பலர் ஆராதனை தங்களுக்கு ஒரு பொழுதுபோக்கு அம்சமாக இருக்க வேண்டும் என்று தான் நினைக்கிறார்களே தவிர, ஆராதனைக்காக தங்கள் தரப்பிலிருந்து எதையாவது கொடுக்க விரும்புவதில்லை. ஆனால், ஆராதனை பற்றிய ஓர் உண்மை என்னவென்றால் ஒருவர் எதைப் போடுகிறாரோ அதிலிருந்து தான் ஒன்றை பெற்றுக் கொள்கிறார். நாம் ஒரு நிமிடம் நின்று நமக்குள்ளே இந்தக் கேள்வியை கேட்டுக் கொள்ள வேண்டும்.' எல்லோரும் என்னைப்போல் ஆராதித்தால் நம்முடைய ஆராதனை எப்படி இருக்கும்'? நான் பல இடங்களில் வளர வேண்டும் என்பது எனக்குத் தெரியும். நாம் எல்லோரும் சரியான நோக்கத்துடன் ஆயத்தமாகி, தேவனை உள்ளப் பூர்வமாக ஆராதிக்கத் தீர்மானித்து விட்டால், நம்முடைய ஆராதனை எவ்வளவு சிறப்பாக இருக்கும்? எவ்வளவு உற்சாகத்தை அந்த ஆராதனையிலிருந்து நாம் பெற்றுக் கொள்ள முடியும்? நாம் அனுதினம் தேவனுக்காக வாழப் பாடுபட்டு, அவரை ஆராதிக்க ஆயத்தமாவோம். ✝

ஆராதனை

# இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்
# Pray persistently

*D.A Adenugba*

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்(கொலோசெயர் 4:2). கிறிஸ்தவர்கள் எப்போதும் தங்களுக்காகவும் ஆட்சியாளர்கள் உட்பட எல்லோருக் காகவும் ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் சக கிறிஸ்தவர்களுக்காகவும், கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலும் கூட கொலோசெய கிறிஸ்தவர்களுக்காக இவ்விதமாக ஜெபித்தார். 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம் (கொலோசெயர் 1:5).

அதிகாரத்தில் இருப்பவர்கள் கூட நம் ஜெபங்களில் விடுபடக் கூடாது. உண்மையாகவே, அவர்களை நம் ஜெபங்களில் நினைவு கூர வேண்டும் 'நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலக மில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக் காகவும், அதிகாரள்ளயாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்(1 தீமோத்தேயு 2:2).

இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் யாருக்காகவும் ஜெபிப்பதில்லை, ஆனால் அவர்கள் நமக்காக பரிந்து பேசுகிறார்கள் (ரோமர் 8:26, 34). ஜெபமானது பிதாவாகிய தேவனுக்கு இயேசு கிறிஸ்து மூலமாகத்தான் ஏறெடுக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் மூலமாகவோ அல்லது மரணம் நியமிக்கப்பட்டு இருக்கிற எந்த ஒரு மனிதன் மூலமாகவோ ஏறெடுக்கப்படுவதில்லை.

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்துவதற்காக இயேசு கிறிஸ்து ஒரு உவமையையே ஒதுக்கி விட்டார் (லூக்கா 18:1-8). ஒருவர் தன்னுடைய விண்ணப்பத் திற்கு பதிலை பெற்றுக் கொள்வதற்கு ஒருறை மாத்திரம் விண்ணப் பித்தால் அது போதுமானதல்ல. எனவே தொடர்ந்து அவர் விசுவாசத்தோடு இயேசு கிறிஸ்து மூலமாக விண்ணப்பங்களை ஏறெடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் (மத்தேயு 21:22). உண்மையாகவே,ஜெபம் ஆச்சரியமூட்டும் பலன்களைக் கொண்டு வருகிறது.

அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள், உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு ன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். (மத்தேயு 6:7,8).

ஆட்சியாளரை குறிக்கிறது. ஆனால் துரதிஷ்டவசமாக ஆட்சியாளர்களில் பலர் தேவனுக்கு பயப்படாதவர்களும், மனுஷரை மதியாதவர்களுமாகத்தான் இருக்கிறார்கள். மேலும் அவர்கள் அன்பு காட்டப்பட வேண்டிய அக்கறைப்படவும் வேண்டிய விதவைகளை, திக்கற்றவர்களை, அந்நியர்களை ஒடுக்குகிறார்கள் (யாத்திராகமம்22:22; உபாகமம் 10;18). ஏபால் பர்வதத்தில் இருந்து வந்த சாபங்களில் இதுவும் ஒன்று (உபாகமம்27:19). ஜெபத்தை பற்றி போதிக்கும் நோக்கத்திற்காக இந்த உவமையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நியாயாதிபதி தேவனை அடையாளப் படுத்துகிறார். இந்த தேவனிடத்தில் தான் அவருடைய பிள்ளைகள் இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும், ஏனென்றால், நம்முடைய தேவன் அநீதி உள்ளவர் அல்லவே (லூக்கா 18:6).

இடைவிடாமல் தேவனிடத்தில் விண்ணப்பிப்பதன் மூலமாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கிறது. நாம் சோர்ந்து போகாமல் ஜெபித்தால் கேட்டதைப் பெற்றுக் கொள்வோம். **அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில் நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்** என்று எழுதினார் (ரோமர் 12:12). நாம் ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும் என்று கொலோசெயர் 4:2 ல் வாசிக்கிறோம்

**எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்**(எபேசியர் 6:18).

நாம் ஜெபிக்கும் பொழுது, நம் விண்ணப்பங்களை தேவனுக்கு தெரியப்படுத்துகிறோம் (பிலிப்பியர் 4:6). கூச்சல் குழப்பத்தினாலோ, ஆடல் பாடலினாலோ, மேளதாளத்தினாலோ அல்ல, ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலே தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதைப்போல் ஜெபத்தில் வீணான வார்த்தைகளை திரும்பத் திரும்ப உச்சரிக்க கூடாது. 7 அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.

இடைவிடாத ஜெபத்தினால் அசாதாரண ஆசீர்வாதங்களை நம்மால் பெற்றுக் கொள்ள டியும். இந்த உவமையில் சொல்லப்பட்டிருக்கும் நியாயாதிபதி ஜனங்களுக்கு சரியான நேரத்தில் நியாயஞ்செய்யும்

பவுல் சகோதரர்களிடத்தில் ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொண்டபோது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டதை நம்மால் வாசிக்க டியும் 1 கடைசியாக, சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபே ல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கு, துர்குணராகிய பொல்லாத மனுஷர்கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே.

(2 தெசலோனிக்கேயர் 3:1,2). சில துன்மார்க்கமான மனிதர்கள் தேவனுடைய வார்த்தையை வெறுப்பார்கள், அது பரவாமல் இருக்க தடைச் செய்வார்கள். அந்த வகையில் பவுலின் ஜெப வேண்டுகோள் பொருத்தமானது தான் என்பதை நாம் அறிந்து கொள்ள டியும். நம்டைய ஜெபங்களும் கூட தேவனுக்கு நேரடியாக தெரிவிக்கும் வகையில் குறிப்பாக இருக்க வேண்டும்.எப்பாப்பிராவும் கொலோசெய கிறிஸ்தவர்கள் தேவனுக்கு சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் நிலை நிற்க வேண்டும் என்று ஜெபித்திருக்கிறார் (கொலோசெயர் 4:12).

எப்பொழுதும் ஜெபியுங்கள்; சோர்ந்து போகவும் வேண்டாம், களைத்துப் போகவும் வேண்டாம். ஜெபத்தில் வீணான வார்த்தைகளை அலப்ப வேண்டாம். சகோதர சகோதரிகளுக்காகவும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்காகவும், ஆளுகிறவர்களுக்காகவும் ஜெபியுங்கள். 'இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்' (1 தெசலோனிக்கேயர் 5:17).

✝

---

## பிலிப்பியர் நிருபத்தை பவுல் எழுதியதற்கான நோக்கங்கள்

*1 அவர்கள் உபகாரத்திற்கு நன்றி சொல்லும்படி*

*2 தன் சூழ்நிலை பற்றி அவர்களுக்கு தெரிவிக்கும்படி*

*3 தன் அன்பை அவர்களுக்கு காட்டும்படி*

*4 விசுவாசத்தில் அவர்களை ஊக்கப்படுத்தும் படி*

*5. கள்ளப் போதகர்கள் குறித்து அவர்களை எச்சரிக்கும்படி.*

# சிந்தனைக்கு...

**வா**லிபர்களுக்கும், வயதானவர்களுக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உண்டு. இவ்விரு வர்க்கத்தையும் வித்தியாசப்படுத்தும் சில காரியங்களை நான் கீழே குறிப்பிட்டு இருக்கிறேன். இவைகளோடு சிலவற்றை நீங்கள் கூட்டிக் கொள்ளலாம்.

- ❀ வாலிபர்கள் எல்லாவற்றையும் அவசர அவசரமாகச் செய்வார்கள். வயதானவர்கள் எல்லாவற்றையும் மெதுவாகச் செய்வார்கள்.
- ❀ வாலிபர்கள் எல்லாவற்றையும் உற்சாகத்துடன் செய்கிறார்கள். வயதானவர்களின் ஆற்றல் குறைவாகவே உள்ளது.
- ❀ வாலிபர்கள் ஒரு பொருளை உடனே அடைய வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், வயதானவர்களோ அவசரப்படாமல் நாளை அடையலாம் என்று விரும்புகிறார்கள்.
- ❀ வாலிபர்கள் நல்ல பழைய நாட்களைக் குறித்து கேட்க விரும்புவதில்லை.. வயதானவர்களோ இக்கால வாலிபர்களின் கோமாளித்தனத்தை பார்த்து நகைக்கிறார்கள்.
- ❀ வாலிபர்கள் அதிகமான பணத்தை சம்பாதிக்கிறார்கள். ஆனால், வயதானவர்களோ தங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை வாங்க மலிவான இடங்களை தேடுகிறார்கள்.
- ❀ வாலிபர்கள் சுவர்களில் சுலபமாக ஏறி விளையாடுகிறார்கள். ஆனால், வயதானவர்களோ உடலில் உள்ள கொழுப்பை கரைக்கவும் குறைக்கவும் முயற்சிக்கிறார்கள்.
- ❀ வாலிபர்களுக்கும், வயதானவர் களுக்கும் மேற்சொல்லப்பட்ட வித்தியாசங்கள் பல இருந்தாலும் கூட இவ்வுலகத்தை ஆளும் இயற்கை விதிகளுக்கு இருவரும் உட்பட்டு வாழும் மனித இனமாகத்தான் இருக்கிறார்கள்.
- ❀ முதியவர்கள் வாலிபர்களுக்கு என்ன ஆலோசனை கொடுக்க முடியும்? கீழ்காணும் காரியங்களை சிந்தித்துப் பாருங்கள்:
- ❀ சேமிப்பவராக இருங்கள்; கொடுப்பவராகவும் இருங்கள்
- ❀ நல்ல உதாரணங்களைப் பின்பற்றுங்கள்; காலப்போக்கில் உங்கள் உதாரணங்களை மிஞ்சும் அளவுக்கு காரியங்களை சிறப்பாக செய்யுங்கள் .
- ❀ திருமணத்துக்கு முன்பு எவ்விதமான தகாத உறவும் வேண்டாம்.
- ❀ இவ்வுலகம் எவ்விதத்திலும் உங்களுக்கு கடன் படவில்லை; நீங்களும் அன்பைத் தவிர வேறு எதிலும் மற்றவர்களுக்கு கடன் பட வேண்டாம்.

❀ உங்கள் வாழ்க்கையை நன்றாக திட்டமிடுங்கள், உங்கள் கையில் இருப்பது இன்று மட்டுமே.

❀ முக்கியமான ஏதோ ஒன்றைச் சொல்லுங்கள். சிறுபிள்ளைகளோடு சேர்ந்து மழலை மொழியில் பேசுங்கள்.

❀ நீங்கள் உங்களை என்னவாக சொல்லிக் கொள்கிறீர்களோ அப்படியே இருங்கள்; நீங்கள் இருக்க வேண்டிய அளவுக்கு இல்லை என்பதை ஒத்துக் கொள்ளுங்கள்.

❀ சிறு பிள்ளைகளை உற்றுப் பாருங்கள்; அவர்களைப் போலிருங்கள். கீழே இறங்கு வது சுலபமானது, துரிதமானது ; ஆனால் மேலே ஏறுவது நெடியது, கடினமானது.

மேற்ச்சொல்லப்பட்ட வார்த்தைகள் எல்லாமே நீதிமொழிகள் 1:8,9 வசனங்களை அடிப்படையாகக் கொண்டதுதான்.

என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும்‘(நீதிமொழிகள் 1:8,9).

✝

---

உணவு பரிமாறுபவர்: இறைச்சி துண்டை நீங்கள் எதைப் போல் விரும்புகிறீர்கள் ?

உட்கார்ந்திருப்பவர்: என் மனைவியிடம் வாக்குவாதத்தில் வெற்றி பெற்றது போல் விரும்புகிறேன்.

உணவு பரிமாறுபவர்: அது மிகவும் அரிதானது.

‘என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவி கொடும், நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர், எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப்படுத்தி, வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள். [சேலா.]

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள், நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்.

நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள், உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். [சங்கீதம் 4:1-5].

நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.

**அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை**

## அவர் எனக்கு பாரமானவர் அல்ல, அவர் என்னுடைய சகோதரன்

## "He isn't heavy, He's my brother "

*John A.Gray*

‘**அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக் கொள்ளுகிறேன்.** பிலிப்பியர் 4:3]. பிலிப்பி பட்டணத்தில் இருந்த தன் சகோதரனையோ அல்லது சகோதரியையோ உத்தமக் கூட்டாளி என்று அழைத்ததன் பொருள் ஒரே மனதுடன் இணைந்து வேலை செய்வ தாய் இருக்கிறது. பவுலும், அவருடைய உத்தம கூட்டாளியும் கர்த்தருடைய சேவைக்காக ஒன்றாகக் கட்டப்பட்டு ஆத்துமாக்களுக்காக ஏக்கம் கொண்டு ஜெபித்து பாடுபட்டார்கள். சில வேதாகம மொழியாக்கங் களில் இங்கே சொல்லப்பட்ட நபர் பற்றி வெறுமனே கூட்டாளி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், அதை நாம் இங்கே பார்த்துக் கொண்டிருக்கும் உத்தம கூட்டாளி என்பதைத் தாண்டி ஊழியத்தில் பிரயாசப்பட ஆயத்ததமாயிருக்கும் ஒரு நபராகும். இந்த உத்தம கூட்டாளி நம் உணர்வுகளை உணர்ந்து கொள்ளும் ஒரு நபராகும். இவர் சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படும், அழுகிறவர் களுடனே அழும் ஒரு நபராகும் [ரோமர் 12:15]. இந்த கூட்டாளியுடன் வாழ்க்யையின் குறிக்கோள்கள் பகிர்ந்து கொள்ளப்படுவதால் தான் பவுல் அந்நிய நுகத்திலே விசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக என்று எச்சரித்தார். ‘**அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்த மேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?** ‘2 கொரிந்தியர் 6:14. நாம் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்பட்டால் ஒரே திசையில் செல்ல மாட்டோம். அப்போது நமக்கு வித்தியாசமான எஜமான்கள் இருக்கிறபடியால் வித்தியாசமான குரல்களுக்கு நாம் செவி கொடுப்போம்.

இந்த உத்தம கூட்டாளி என்னும் பதத்தைச் சொல்அர்த்த ரீதியாக பார்த்தால் ஒரு நுகத்தின் கீழ் இருக்கும் இரண்டு நபர்களில் ஒருவரைக் குறிக்கும் வார்த்தையாகும். நுகம் என்பது. மரத்தால் செய்யப்பட்ட ஒன்றாகும். பொதுவாக, நுகத்தை குதிரைகள் அல்லது மாடுகளின் தோள்களில் குறுக்காக கட்டி அதை கலப்பை அல்லது வண்டியோடு இணைத்துக் கொள்வார்கள். நுகத்தின் கீழ் இருக்கும் மிருகங்கள் முன்னோக்கிச் செல்லும்போது, நுகத்திற்கு எதிராக தள்ளப்பட்டு

பின்னால் வைக்கப்பட்டிருக்கும் சுமையை இழுத்துச் செல்லும். வண்டியின் உரிமையாளர்கள் ஒரே அளவுடைய இரு மிருகங்களை தெரிந்தெடுத்து அவர்களின் மேல் நுகத்தை வைப்பார்கள். அப்போது



அவைகள் பாரத்தை சமமாக இழுத்துச் செல்லும். அதே போல் நுகத்தில் பூட்டப்பட்டு பாரத்தை எடுத்துச் செல்லும் மிருகங்கள் இணைந்து செல்லாமல் ஒன்றோடு ஒன்று எதிர்த்தால் அவைகளுக்கிடையே சுகமான பயணம் இராது. அதேபோல் ஊழியத்தின் பாதையிலும் இருவருக்கிடையே ஒருமித்த அல்லது உடன்பாடு இல்லை என்றால் ஊழிய பயணம் சுமகமாக இராது. அதாவது, ஊழியத்தில் அவரவருக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை அவரவரே நிறைவேற்ற வேண்டும்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் நுகத்தடியில் தங்களை இணைத்து மற்றவருடைய பாரத்தை சுமக்கும் உத்தம கூட்டாளிகள் அவசியப் படுகிறார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியத்திற்கு என்று சீஷர்களை வெளியே அனுப்பிய போது, அவர்களை அவர் தனியாக அனுப்பவில்லை. மாறாக, இரண்டு பேராக அனுப்பினார். ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்துவதற்கும், சரியான பாதையில் செல்லவும் நம் ஆண்டவர் அப்படி இருவராக ஊழியத்திற்கு அனுப்பினார் மாற்கு 6:7]. ஆழமான ஆவிக்குரிய நட்பை வளர்க்க நாம் நேரத்தை எடுத்துக் கொள்ளும் போது, தேவன் நம்மை என்னவெல்லாம் செய்யச் சொல்லி இருக்கிறாரோ அவைகளை எல்லாம் செய்து முடிக்க இந்த உத்தம கூட்டாளிகள் உதவுவார்கள்.

**அவர் எனக்கு பாரமானவர் அல்ல, அவர் என்னுடைய சகோதரன்** சாலை நீளமானதும், வளைவுகளை உள்ளடக்கியது மாகும். அது நம்மைக் காரியங்கள் எங்கே, எப்போது என்று அறிந்திருக்கிறவரிடத்தில் கொண்டு செல்கிறது; நான் ஒரு காரியத்தால் நிறைந்திருக்கிறேன், ஆம், நான் சோகத்தால் நிறைந்திருக்கிறேன்; உண்மையில் யாருடைய இருதயமும் சந்தோஷத்தினால் நிறைந்திருக்கவில்லை. ஆனால், அந்த மகிழ்ச்சியால் நிறைந்த இடத்திற்கு ஒரு நாள் நாம் செல்வோம் என்பதை அறிந்திருக்கிறேன். அவர் எனக்கு பாரமானவர் அல்ல அவர் என்னுடைய சகோதரனாய் இருக்கிறார், நான் மறுபடியும் சொல்கிறேன் அவர் எனக்கு பாரமானவர் அல்ல, அவர் என்னுடைய சகோதரன். ✞

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# மறக்கப்பட்ட கருவி

## The Forgotten Tool

*Betty Burton Choate*



கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கிறார்கள். நாம் தனியாகவும் பாடுகிறோம். பொது இடங்களிலும் பாடுகிறோம். நாம் ஜெபிக்கிறோம், தேவனுடைய வார்த்தையைப் படிக்கிறோம், நாம் கர்த்தருடைய பந்தியிலே பங்கெடுக்கிறோம், நாம் கொடுக்கிறோம். நாம் ஒருவரை ஒருவர் சந்தித்து, போதித்து புத்திசொல்கிறோம். நம்மிடையே ஐக்கிய விருந்து உண்டு.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியங்களில் மற்றொரு கருவியை பயன்படுத்துவதினால் உண்டாகும் ஆசீர்வாதங்களை நம்மில் சிலர் கற்றிருக்கிறோம் .

'நீங்கள் உபவாசிக்கும்போது ' என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீடர் இடத்தில் பேசின வார்த்தைகள் பல நூற்றாண்டுகளாக எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இங்கே நம் ரட்சகர் நீங்கள் உபவாசிக்கும்போது என்று தான் சொன்னாரே தவிர, உபவாசித்தால் என்று சொல்லவில்லை. இங்கே இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்கள் உபவாசிப்பார்கள் என்னும் உண்மையை உணர்த்தி, அப்படிப்பட்ட உபவாச நேரத்தில் இந்த உலகத்தின் மக்களுக்கு முன்பாக நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நமக்குச் சொல்கிறார். இங்கே இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் உபவாசம் இருக்கும்போது தம்பட்டம் அடித்து தங்களைப் பக்திமான்களாக காட்டாமல், தனிப்பட்ட ஆவிக்குரிய நன்மைகளுக்காக அதை அந்தரங்கமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்.

சபை ஆவிக்குரிய சரீரமாக, தனிப்பட்ட நபர்களாக வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிப்பதற்காகக் கூட வேண்டும். இதை உதபதேசத்தின் அடிப்படையில் செய்ய வேண்டும். 'வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான் (அப்போஸ்தலர் 20:7). நாம் இதை கட்டளையின் அடிப்படையில் செய்ய வேண்டும். சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாம் விட்டுவிடாமல்,

ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும் எபிரேயர் 10:25.

இந்த நடைமுறை நம்மைக் கட்டுப்படுத்துகிறது. நாம் பரிசுத்தவான்களோடு சபை கூடி வருதலை வேண்டுமென்றே தவறவிட்டால் 26ஆம் வசனத்தின்படி நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்களாக இருப்போம்.

தேவன் தம்டைய மிகுந்த ஞானத்தினாலே வருடங்களினாலோ அல்லது மாதங்களினாலோ அல்லாமல் ஏழு நாட்களை உள்ளடக்கிய வாரமாக பிரித்திருக்கிறார். நம் வாழ்க்கையின் காலம் எவ்விதமான ஒழுங்கும் ஓய்வுமின்றி நம் முன்பாக வைக்கப்பட்டால் அது எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? குறுகிய நாட்களை உள்ளடக்கிய கால சுழற்சி முறை மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். அதில் வாரத்தின் முதல் நாளை தேவனை ஆராதிப்பதற்கு என்று நாம் ஒதுக்கி வைக்கிறோம். ஆராதனை என்பது தேவனை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தாலும் கூட, அதில் உண்மையாகவே பயன்பெறுவது நாம் தான். ஏனென்றால் அந்த நேரம் நம்மை நாமே சுய பரிசோதனை செய்து கொள்வதற்கான ஒரு நேரம் ஆகும்.

நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். (எபிரேயர் 12:22-24).

நம்மை நாமே சுய பரிசோதனை செய்த பிறகு, தேவனுடைய பயங்கரமான சமூகத்திற்குள் வரும் போது தேவனை நோக்கி துதி பாடல்கள் பாடுவது நம் உணர்வுகளை தட்டி எழுப்பும் ஒரு பயிற்சியாகும். (கிட்டத்தட்ட எல்லாம் ஜீவராசிகளும் பாடல் பாடுகிறது என்பதை கவனித்திருக்கிறீர்களா?). நாம் சபைக்குள் பிரவேசிக்கும் பொழுது அதாவது அந்த புதிய உலகத்திற்குள் பிரவேசிக்கும் போது

பாடல் பாடுவது என்பது பூமிக்குரிய செயல்பாடுகளில் ஒன்றாகவும், நம் வாழ்க்கையின் ஓர் அங்கமாகவும் மாறிவிடுகிறது. எனவே பாடல்கள் பாடுவது என்பது நம்மில் இயல்பாக இருக்கிற ஒரு தன்மையாகும். மேலும் பாடல் பாடுவது நம் ஆவியை தேவனோடு ஐக்கியப்படுத்துவதின் ஓர்அங்கமாகும்.

நிச்சயமாகவே ஜெபம் என்பது தேவனோடு ஐக்கியம் கொள்வதற்கான மற்றும் ஒரு வழியாகும். தேவன் நமக்கு செய்து கொண்டிருக்கின்ற எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துவதற்காகவும், நம் தேவைகளைக் கேட்பதற்காகவும் நம் பிதாவினிடத்தில் நம் இருதயத்தை ஊற்றுவதற்கு நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவனுடைய வார்த்தையைக் படித்து அவருடைய ஞானத்தால் வழி நடத்தப்பட சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். அதுபோல் அவருக்கென்று உற்சாகமாக கொடுக்க நமக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து தேவன் நமக்கு சவால் விட்டு இருக்கிறார். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் பேகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்[மல்கியா 3:10].

இவ்வுலகில் வாழும் கோடிக்கணக்கான மக்களில் இயேசு கிறிஸ்து நம்டைய பாவங்களுக்காக மரித்தார் என்பதையும், நாம் அனுதினம் அவருடைய ஒளியில் நடக்கும் போது, அவருடைய இரத்தம் நம்டைய பாவங்களைத் தொடர்ந்து கழுவி சுத்திகரிக்கிறது என்பதையெல்லாம் அறிந்து கொள்ளும் சிலாக்கியம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற படியால் நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்! [1 யோவான் 1:7]. இயேசு கிறிஸ்துவின் தியாகத்தையும், அவருடைய ரத்தம் நம்டைய பாவங்களைத் தொடர்ந்து கழுவி சுத்திகரிக்கிறது என்பதையும் நாம் எப்போதும் நினைவில் வைத்திருக்கும்படி, வாரந்தோறும் இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூரும்படி கர்த்தருடைய பந்தியை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். இது நாம் கூட்டாக தேவனை ஆராதிக்கும் போது நம் மையப் புள்ளியாக இருக்க வேண்டும்.

**ஆராதனையில் உபவாசம் ஏன் சேர்க்கப்படவில்லை?**

நாம் உபவாசம் இருக்கத் தவறினால் பாவம் செய்கிறோம் என்பதற்கு வசனம் எதுவும் இல்லையா? உபவாசம் என்பது இயேசு சிலுவையில் ஆணி அறைந்த பழைய ஏற்பாட்டுக் கட்டளையா?

உபவாசம் என்பது இயேசுவின் நாட்களில் வாழ்ந்த யூதர்களின் மாய மாலத்தோடு சம்பந்தப்பட்ட ஒன்றா? எப்படிப் பார்த்தாலும் உபவாசம் இருக்கவில்லை என்றால் நஷ்டம் நமக்குத் தான். கூட'நீங்கள் உபவாசிக்கும்போது' என்னும் இயேசுவின் வாக்கியத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் நாம் உபவாசிக்க வேண்டும் என்பது நமக்குப் புரிகிறது. ஆனால், ஏன் கிறிஸ்தவர்கள் உபவாசிக்க வேண்டும்? அதனால் என்ன பயன்? இக்கேள்விகளுக்கெல்லாம் பதில் உலக வேலையில் இருந்து விலகி தங்கள் சரீரத்தை வருத்தி ஒரு நாளோ அல்லது பல நாட்களோ ஆகாரத்தை துறந்தவர்களுக்குத்தான் தெரியும். இப்பூமிக்குரிய சரீரத்தை ஒட்டுமொத்தமாக மறந்து, உலகக் கவலைகளை துறந்து ஜெபம், பாடல், வேதத்தை வாசிப்பது மற்றும் படிப்பது போன்றவளுக்காக இந்த உலகத்தை மறந்து தேவனோடு தனித்திருப்பது ஓர் உன்னத அனுபவமாகும். அது ஓர் உன்னத அனுபவமாக இருக்கிறபடியால், தொடர்ந்து அது போன்று உபவாசம் இருக்கும் ஆசையை நமக்குள் துண்டும். தேவன் மீது மாத்திரம் நம் சிந்தையை செலுத்தும் வாய்ப்பு வேறெந்த நிலையிலும் நமக்கு கிடைப்பதில்லை.

உபவாசிக்காமலேயே நாம் அதே விதமான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால்,நான் அப்படி நினைக்கவில்லை. ஏனென்றால், அந்த அனுபவத்தின் ஒரு பகுதி நாள் ழுவதற்குமான சரீரத் தேவைகளில் இருந்து விலகி தேவனோடு அதிகப்படியாக செலவு செய்யும் நேரமாக இருக்கிறது. ஒரு நாளின் கால அட்டவணையில் உணவு எவ்வளவு நேரத்தை எடுத்துக் கொள்கிறது என்பதை கவனித்து இருக்கிறீர்களா?

சரீரத்தில் நாம் அடிக்கடி ஐக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு அனுபவிக்கிறோம். அவைகள் எல்லாம் நமக்கு நல்லது தான், அந்த நடைறையை நான் குறைத்து மதிப்பிட மாட்டேன். இருந்தபோதிலும், பாடல் பாடுவதற்கும், வேதத்தைப் படிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் ,உபவாசிப்பதற்கும் நாம் ஒரு நாள் ஒன்றிணைய வேண்டும் என்று நான் ஆலோசனை சொல்லுவேன் அல்லது இத்தகைய ஆவிக்குரிய நோக்கத்திற்காக ஒரு ழு இரவையே நாம் எடுத்துக் கொள்ளலாம்.

நம் ஐக்கிய விருந்து வேலைகளில், அரசியல், காலநிலை , குடும்பம், விளையாட்டு போன்றவைகளை உள்ளடக்கிய உரையாடல் தவறாமல் இடம்பெறுகிறதை கவனித்திருக்கிறீர்களா? இருந்த போதிலும், ஒரு நாள் அல்லது ஓர் இரவை ஜெபத்திற்காகவும் ,உபவாசத்திற்காகவும் செலவிட்டால் அதன் முழு தலைப்பும்

தேவனைப் பற்றியும், அவருக்கான நம்முடைய அன்பு பற்றியதுமாகத்தான் இருக்கும்.

சபைக்காக இத்தகைய உபவாசக் கூடுகைகள் அதில் பங்கெடுக்கும் ஒவ்வொருவருடைய ஆவிக்குரிய தன்மையை ஆழப்படுத்துவதற்கு வல்லமையான கருவிகளாக இருக்கும் அல்லவா? உணவுக்காக ஒரு நிமிடத்தை கூட ஒதுக்காமல், ஒரு நாள் அல்லது ஒரு இரவு முழுவதும் ஒன்றிணைந்து ஆராதனைக்காக செலவிடும்போது குடும்ப உறவு பலப்படுத்தப்படும் அல்லவா?

✝

---

### எதைத் தெரிந்து கொள்ளுகிறீர்கள்?

- *தேவனையா அல்லது அந்நிய தேவர்களையா? (யோவான் 24:1415)*
- *கிறிஸ்துவையா அல்லது பேலியாளையா?(கொரிந்தியர் 6:15)*
- *ஜீவனையா அல்லது மரணத்தையா? (உபாகமம் 30:1519)*
- *கிறிஸ்துவின் சபையா அல்லது மார்க்கப்பிரிவினையையா? (மத்தேயு 16:18)*
- *தேவனுடைய வார்த்தையையா அல்லது மனித பாரம்பரியத்தையா? (மத்தேயு 16:8)*
- *பரலோகத்தையா அல்லது நரகத்தையா? (வெளி 21:14,8)*

## கிறிஸ்தவ இல்லம்

# சாய்ந்து போகிற நிழல்

# A lengthened shadow

*Michael L. King*

பெரும்பாலான வாலிபர்கள் தங்கள் ஆரம்ப கால வளர்ச்சியையும், தங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் திசையையும் தொலைத்து விடுவது துரதிர்ஷ்டவசமானது. அநேக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் இளம் பிராயத்தில் இருந்து பெரியவர்களாக வளர்வதைக் காணும் போது தங்கள் மூச்சை பிடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விசுவாசத்தை இழந்து விடுவது குறித்தும், அவர்கள் இவ்வுலகத்தாரோடு கெட்டுப் போவதுகுறித்தும் அதிகமாக பயப்படுகிறார்கள். வாலிபப் பிராயத்தில் எவ்வித முன் யோசனையும் இன்றி வாழும் வாலிபர்கள் செய்யும் செயல்களும், வாழ்க்கையை உடனே வாழ்ந்து விட வேண்டும் என்னும் அவருடைய எண்ணம், வாழ்க்கையைப் பற்றிய அவர்களுடைய கண்ணோட்டத்தை மரத்துப் போகச் செய்து விடுகிறது. அவர்கள் கர்த்தருக்காக வாழக் குறிப்பிட்ட வயது வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. வாலிப வயதிலேயே கர்த்தருக்காக வாழ்ந்து அதன் மூலம் கிடைக்கும் நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் இழந்து போக வேண்டாமே.

ஞானியும், பிரசங்கி புத்தகத்தின் ஆசிரியருமான சாலமோன் தன்னுடைய வாசகர்களை ,அதிலும் குறிப்பாக வாலிபர்களை இவ்விதமாக எச்சரிக்கிறார் '**நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை, தீங்குநாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற் முன்னும்**'என்று(பிரசங்கி 12:1). இவ் வசனத்தில் சாலமோன் வாலிபர்களுக்கு எந்தவிதமான தீர்வுகளையும் வழங்கவில்லை. மாறாக, வாலிபப்பிராயத்தை வீணடிப்பதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றித் தான் சொல்கிறார். வாலிபப் பிராயத்தில் வாலிபர்களின் அறிவு கூர்மையாய் இருக்கிறது, இக்காலகட்டத்தில் அவர்கள் அதிக ஆற்றலுடனும், ஆர்வத்துடனும் காணப்படுவார்கள். அவர்களுடைய பார்வை திறன் அருமையாகயிருக்கும், அவருடைய பற்கள் உறுதியாய் இருக்கும், அவர்களுடைய செவித்திறனும் செம்மையாக இருக்கும். மேலும், வாலிபர்கள் எந்த ஒரு காரியத்தையும் தைரியமாகத், துணிந்து செய்வார்கள். இருந்தபோதிலும், அவர்கள் அதன் விளைவுகளைக் கண்டு பயந்து தானாகவேண்டும் .

இவ்வாசனப்பகுதியில் சாலமோன் ஞானி ஒரு வாலிபருடைய வாழ்க்கை மாயையினால் நிறைந்திருக்கிறது என்று முடிவாகச் சொல்கிறார். மாயை வாழ்க்கையின் உண்மைத் தன்மையையும், நியாயதீர்ப்பையும் தெளிவற்றதாகச் செய்து மறைத்து விடுகிறது. வாலிபர்களால் வீணடிக்கப்படும் வருடங்கள் உண்மையிலேயே வாலிப வயதில் தேவனால் அனுமதிக்கப்படும் நன்மைகளை நாசமாக்கிப் போடுகிறது. எனவே, இங்கே எச்சரிப்பு என்னவென்றால், வாலிபர்கள் அந்த மாயையில் இருந்து எழுந்து உணர்வுள்ளவர்களாகி முதிர் வயதில் அல்ல, வாலிபத்திலேயே கர்த்தருக்கு செய்வதில் தங்கள் கவனத்தை திருப்ப வேண்டும்.

சாதாரணமாக, இவ்வுலகத்திற்குரிய காரியங்களில் மனிதனால் மகிழ்ச்சியையும், முழுமையையும் நீடித்திருக்கும் திருப்தியையும் அடைய முடியுமானால், வாழ்க்கை வீணானதும் காற்றைப் பிடிப்பது போன்ற தாகும் என்று சாலமோன் ஞானி ஒரு முடிவுக்கு வருகிறார். 'அவன் வந்த பிரகாரமே போகிறான், இதுவும் கொடுமையான தீங்கு, **அவன் காற்றுக்குப் பிரயாசப்பட்டதினால் அவனுக்கு லாபம் என்ன?** (பிரசங்கி 5:16).

வாலிபப்பிராயம் முதல் அந்திய நாட்கள் வரை சமச்சீரான மற்றும் முழுமையான வாழ்க்கையை வாழ்வது முக்கியமானதாகும். இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றினவர்களுக்கு இவ்விதமாக போதித்தார் 'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'(மத்தேயு 6:33). இன்றைய நாட்களில் இவைகள் எல்லாம் இந்த சொற்றொடருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுத் தேட அநேகர் ஓடுகிறார்கள். ஆனால், அவர்கள் அடைந்து விட்டதாகத் தெரியவில்லை. இன்று உலகெங்கும் வாலிபர்கள் மத்தியில் தற்கொலை என்பது ஒரு தலைவலியாக உருவெடுத்து வருகிறது. அதாவது, 15 வயதில் இருந்து 25 வயதில் இருக்கும் வாலிபர்கள் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருகிறது. அதேபோல் அமெரிக்க தேசத்தில் எடுக்கப்பட்ட ஆய்வின்படி 35 முதல் 65 வயது வரை உள்ளவர்களின் தற்கொலை விகிதம் 30 சதவீதம் அதிகரித்து இருக்கிறது.

அங்குள்ள தேசிய புள்ளியல் துறை வெளியிட்டு இருக்கிற அறிக்கையின்படி கடந்த 30 வருடங்களில் இல்லாத அளவுக்கு தற்கொலை அதிகரித்திருப்பதாகச்சொல்லுகிறது. வாழ்க்கையின் நோக்கத்தை உறுதி செய்வதற்கும் வாழ்க்கைக்கு மதிப்பை கொடுப்பதற்கும் இந்த வாலிப வருடங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். இங்கே உண்மை என்னவென்றால், ஒரு

வாலிபனுக்கு வாழ்க்கையைப் பற்றிய சரியான மதிப்பு இல்லை என்றால் அது மிகவும் அபாயகரமானது. அதனால் தான் தாவீது இவ்விதமாகச் சொன்னார்.'என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப் போலிருக்கிறது, புல்லைப் போல் உலர்ந்து போகிறேன். [சங்கீதம் 102:11]. சபைகளுக்கு வாலிபத்தின் நோக்கத்தையும், அதற்கான விளக்கத்தையும் வாலிபர்களுக்கு அறிவிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. வாலிபர்கள் தங்களை தேவன் நேசிக்கிறார் என்பதையும், அவர்களுக்காக தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக் கிறார் என்பதையும் தங்கள் மனதில் பதிய வைக்கும் போது அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஒரு நோக்கத்துடன் வாழ்வார்கள்.

இவ்வுலகில் யாரும் தானாக தோன்றவில்லை என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, எல்லோரும் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். 'நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்' சங்கீதம் 139:14. இதை அறிந்த ஒருவரால் தேவனுடைய கையின் கிரியையை எப்படி அழிக்க முடியும்?

## கிறிஸ்தவ நடை

*1 அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரமாக* **நடந்து** *கொள்ள வேண்டும் (எபேசியர் 4:1).*

*2 விசுவாசத்தில்* **நடக்க** *வேண்டும்(2 கொரிந்தியர் 5:7).*

*3 அன்பில்* **நடக்க** *வேண்டும் (யோவான்15:10).*

*4. ஞானமுள்ளவர்களாய்* **நடக்க** *வேண்டும் (எபேசியர் 5:15).*

*5 இயேசு நடந்தது போல* **நடக்க** *வேண்டும் (1 யோவான் 2:6).*

# உண்மையான அன்பு நேரம் எடுக்கும்
# True Love takes time

*Denny petrillo*




**உ**ன்னதப்பாட்டு 2:7 பெரும்பாலும் தவறாக புரிந்து கொள்ள பட்டாலும் கூட, சரியாகப் பார்க்கப்படும் போது, அது அன்பைப் பற்றி மதிப்பு மிக்க பாடத்தைத் தருகிறது. இவ்வசனப் பகுதியில் சூலமித்திய பெண் சில பெண்களிடம் பேசிக் கொண்டிருக்கிறாள். இப்பெண்கள் சாதாரணமாக எல்லாப் பெண்களையும் போலவே போலவே அன்புக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இங்கே இந்த சூலமித்திய பெண் அவர்களிடம் அன்புக்காக அவசரப்பட வேண்டாம் என்று சொல்லுகிறாள்.

திருமண ஆலோசனைகான என்னுடைய பல வருட அனுபவங் களில் எண்ணற்ற பெண்கள் என்னிடம் அடிக்கடி அடிக்கடி சொல்லும் ஒரே சொற்றொடர், 'நான் இந்தத் திருமண உறவுக்குள் அவ்வளவு சீக்கிரமாக குதித்திருக்கக் கூடாது' என்பதுதான். பல்வேறு பட்ட காரணங்களுக்காக அவர்கள் இந்தத் திருமண வாய்ப்பை வசமாக்கி கொண்டார்கள் (பொருளாதாரப் பாதுகாப்பு, பெற்றோரிடம் இருந்து விடுதலை, போகப் போக கணவனிடத்தில் அன்பு உருவாகும், என் கணவன் சரியான நபர் என்று நினைத்தேன் ) போன்றவைகள் அந்த காரணங்களாக செல்லப்படுகிறது. இருந்தபோதிலும், ஒரு வருடமோ அல்லது அதற்கு முன்போ அந்தப் பெண் திருமண காரியத்தில் தவறு செய்து விட்டதாக எண்ணுகிறாள்.

இயேசு கிறிஸ்து விவாகம் என்பது வாழ்க்கைக்கான ஒன்று என்று போதித்தார் (மத்தேயு 19:3–6). ஒருவர் ஒரு தீர்மானத்தை எடுத்து விட்டால் அதன்படி தான் வாழ வேண்டும். உண்மையில் சொல்லப் போனால் ஒருவர் தன் வாழ்க்கைத் துணையை விவாகரத்து செய் வதற்கு ஒரே காரணம் வேசித்தனமாகத் தான் இருக்க வேண்டும் என்று பிற்பாடு தெளிவுபடுத்துகிறார் (மத்தேயு 19:9). இந்த போதனை

சீஷர்களை ‘மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படி இருந்தால் விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல‘ என்று சொல்ல வைத்தது. இங்கே சீஷர்கள் சொல்ல வருகிறது என்னவென்றால், திருமண பந்தத்தில் ஒருவர் தன் வாழ்க்கை முழுவதையும் மற்றவருக்கு ஒப்புக் கொடுக்கவில்லை என்றால் திருமணம் பண்ணாமல் இருப்பதே நல்லது என்னும் அர்த்தத்தில் தான் சொல்கிறார்கள். இயேசு கிறிஸ்து இங்கே எல்லா மனிதர்களும் இப்படிப்பட்ட முடிவுகளை எடுக்கலாம் என்று சொல்கிறார். சீஷர்களின் பொதுவான கருத்து நல்லதாகத்தான் இருக்கிறது. திருமணம் செய்வது சம்மந்தமான தீர்மானங்களை ஒருவர் துரிதமாக எடுக்க கூடாது என்பதுதான் இதன் பொருளாய் இருக்கிறது.

சூலமித்தியாளின் வார்த்தைகள் இன்றும் ஞானமுள்ள வார்த்தை களாய் இருக்கின்றன. திருமண காரியத்தில் அவசரப்பட வேண்டாம். அன்பு இயற்கையாகவே உருவாகட்டும். அந்த அன்பு உண்மையான அன்பாயிருந்தால் ஏற்ற நேரத்தில் வெளிப்படும். அந்த விதத்தில் நீங்கள் திருமணம் செய்ய முடிவெடுத்தால் அது சரியான முடிவு என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள் .

✝

## தேவனுக்கு மாத்திரம் தெரியும்

- **சரித்திர சம்பவங்கள் அனைத்தும் துல்லியமாக தேவனுக்கு மாத்திரம் தெரியும்**
- **நிகழ்கால காரியங்கள் அனைத்தும் அப்படியே தேவனுக்கு மாத்திரம் தெரியும்**
- **எதிர்கால காரியங்கள் ஒவ்வொன்றும் தேவனுக்கு மாத்திரம் தெரியும்**
- **குறிப்பிட்ட சூழ்நிலையில் என்னவெல்லாம் நடந்தது என்று தேவனுக்கு மாத்திரம் தெரியும்.**

### வசன ரீதியான பாடங்கள்

# பஸ்காவைப் பற்றிய இரண்டு சுவாரசியமான தகவல்கள்

# Two interesting details about the Passover

*Aaron Cozort*

உபாகமம் பதினாறாம் அதிகாரம் இஸ்ரவேல் தேசத்தின் மூன்று முக்கியமான பண்டிகைகள் பற்றி மோசேயின் அறிவுரைகளைப் பதிவு செய்கிறது. பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி, கூடாரம் பிற்பாடு தேவாலயம் ) இருந்த இடத்தில் இஸ்ரவேலர்கள் வருடத்திற்கு மூன்று பண்டிகைகளை ஆசரிக்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தார்கள். அந்த மூன்று பண்டிகைகள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டிருக்கின்றன: பஸ்கா பண்டிகை, வாரங்களின் பண்டிகை, கூடாரப் பண்டிகை .

## பஸ்காவின் புளிப்பில்லா அப்பம்

பஸ்கா பண்டிகையின் போது இஸ்ரவேலருடைய வீடுகளில் புளிப்புள்ள அப்பம் எங்கும் காணப்படவே கூடாது. பழைய ஏற் பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் புளிப்பு அல்லது புளித்தமா ஒரு பொருளை கெடுக்கும் ஒன்றாக அல்லது பொதுவான அடிப் படையில் பாவத்தைக் குறிக்கும் ஒன்றாகவே கருதப்படுகிறது( 1 கொரிந்தியர் 5) . இந்த காரணத்திற்காகவும் இந்தப் பாடத்தை கற்றுக் கொள்வதற்காக வும் பஸ்கா பண்டிகையின் போது இஸ்ரவேலர்கள் புளிப்பில்லா அப்பத் தை மாத்திரம் புசிக்கும்படியாகவும் கட்டளையிடப்பட்டிருந்தார்கள் .

இதைக் குறித்து இன்னும் சுவாரசியமான காரியங்கள் உபாகமம் பதினாறாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ‘நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளை நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் நினைக்கும்படி, பஸ்காபலியுடனே புளிப்புள்ள அப்பம் புசியாமல், சிறுமையின் அப்பமாகிய புளிப்பில்லாத அப்பங்களை ஏழுநாள் வரைக்கும் புசிக்கக்கடவாய், நீ தீவிரமாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபடியினால் இப்படிச் செய்யவேண்டும்‘ (உபாகமம் 16:3). இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேற ஆயத்தமாகி கொண்டிருந்த போது அவர்கள் புளிப்பில்லா அப்பத்தைப் புசிக்க மோசே கூடுதலான சில காரணங்களை அடையாளம் கண்டார். அவர் புளிப்பில்லா அப்பத்தை எகிப்தில் இஸ்ரவேலர்கள் அடிமைத்தனத் திலிருந்ததைக் குறிக்கத்தக்கதாக அதை சிறுமையின் அப்பம் என்று அழைத்தார். மோசே அங்கே இஸ்ரவேலர்கள் அவசர அவசரமாக எகிப்தில் இருந்து வெளியேறியதைக் குறிப்பிடுகிறார். புளித்த மா வேலை செய்யக் கொஞ்சம் நேரம் எடுக்கும், அதாவது அது



மாவை உப்பப் பண்ண கொஞ்ச நேரம் எடுக்கும். தேவனுடைய கட்டளையின் காரணமாக இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேற ஆயத்தமான போது அவர்கள் சுட்டு உடனடியாக புசிக்கத்தக்கதாக புளிப்பில்லா அப்பத்தைத்தான் உண்டாக்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தார்கள்.

**பஸ்கா பலியின் நேரம்**

இந்த உலகத்தில் இயேசு கிறிஸ்து வாழ்வதற்கு சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் சாயங்கால வேளையிலே பஸ்கா பலியை செலுத்த வேண்டும் என்று சொல்லி யிருந்தார். '**உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நேரமாகிய சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிறபோது பஸ்காவை அடித்து**'[உபாகமம் 16:6]. லூக்கா 23:44 ல் இயேசு கிறிஸ்து ஒன்பதாம் மணி நேரத்தில் சிலுவையில் மரிப்பார் எனும் உண்மையை நாம் காண்கிறோம். இது யூத கால அட்டவணையின்படி சூரியன் அஸ்தமிக்கிற சாயங்கால வேளையைக் குறிக்கிறது. நம்முடைய பஸ்காவாகிய இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் மோசே பஸ்கா பலியை செலுத்துவதற்கு எந்த நேரத்தை கட்டளையிட்டாரோ அதே நேரத்தில் தான் மரித்தார்.

பழைய ஏற்பாட்டுத் தகவல்களை குறித்து ஆழ்ந்து சிந்திக்க நாம் நேரத்தை எடுத்துக் கொண்டால் அது மதிப்பு மிக்கதாகயிருக்கும். ஏனென்றால், தேவனுடைய வெளிப்பாட்டை நாம் முழுமையாக புரிந்து கொள்ள அவைகள் தகவல்களைத் தந்து நமக்கு உதவுகின்றன.

✞

# முன் கூட்டியே தீர்மானித்தல்

# Prejudice

*David Conley*

**முன்கூட்டியே தீர்மானித்தல்** என்னும் சொற்றொடர் ஒரு காரியத்தின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து பார்ப்பதற்கு முன்பாகவே தீர்மானித்து விடுவது என்று பொருள்படுகிறது. அதாவது, ஒரு காரியத்தைக் குறித்து போதுமான அறிவோ, ஆதாரமோ இல்லாவிட்டாலும் கூட, நியாயமான காரணங்கள் இல்லாவிட்டாலும் கூட காரியம் இப்படியாகத்தான் இருக்கும் என்று முடிவு எடுப்பது. இந்த முன்கூட்டியே தீர்மானம் செய்வது என்னும் வார்த்தைக்கு மாற்றாக அல்லது இணை வார்த்தையாக **பட்சபாதம்** காட்டுவது என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. பட்சபாதம் என்பதற்கு ஒரு அகராதி இவ்விதமாக விளக்கம் கொடுக்கிறது. நியாயமற்ற முறையில் தீர்ப்பை திருத்தி ஒருவர் மீது சாய்ந்து அவருக்கு சாதகமாக நடந்து கொள்ளும் மனப்பான்மை தான் பட்சபாதம் என்று.

ஆனால், பல சந்தர்ப்பங்களில் ஜனங்கள் முன்கூட்டியே தீர்மானம் செய்வதையும், தீர்ப்பு செய்வதையும் போட்டு குழப்பிக் கொள்கிறார்கள். அதாவது, நான் ஒரு குறிப்பிட்ட உபதேசத்தைக் குறித்தோ, அல்லது வாழ்க்கை முறை குறித்தோ தீர்ப்பு செய்தால் நான் பட்சபாதமாக நடந்து கொள்வதாக சிலர் என்னைக் குற்றம் சாட்டலாம். ஆனால், இது உண்மையல்ல. இவ்விரண்டு வார்த்தைகளுக்கு இடையேயான வித்தியாசத்தை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தீர்ப்பு செய்வது என்பது நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் நாம் செய்கின்ற ஒன்றாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நாம் நீதியின் படி தீர்ப்பு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். யோவான் 7:24). இயேசு கிறிஸ்து இரக்கம், விசுவாசம் போன்றவைகளை நாம் வெளிப்படுத்த வேண்டியது எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது நாம் தீர்ப்பு செய்வதும் என்று சொல்கிறார்.

தீர்ப்பு செய்வது என்பதற்கான கிரேக்கப் பதம் ‘krino‘ என்பதாகும். அதன் பொருள் தீர்மானிப்பது, கண்டிப்பது போன்றவைகள் ஆகும். மேலும், தீர்ப்புச் செய்வது என்பது வாதப்பிரதிவாதங்களை பரிசோதித்து, கிடைத்த ஆதாரங்களை ஆராய்ந்து பார்த்து ஒருவர் தன்னுடைய அபிப்பிராயத்தை மற்றவர் மீது சொல்வதாகும்.

ஒரு காரியத்தைக் குறித்து அறியாமல் அதைக் குறித்து தன்னுடைய அபிப்பிராயத்தை(தீர்ப்பை) வழங்குவது உண்மையாகவே முட்டாள் தனமானதாகும். இருந்தபோதிலும், ஒரு காரியத்தை குறித்த நன்கு படித்தறிந்த பிறகும் அதைக் குறித்து தன் அபிப்ராயத்தை தெரிவிக்காமல் இருப்பதும் அல்லது தீர்ப்பு செய்யாமல் இருப்பதும் பொறுப்பற்ற ஒரு செயலாகும். என் வாழ்க்கையின் முக்கியமான காரியங்கள் சம்மந்தமாக நான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதாவது, என் தீர்ப்பை நான் சொல்ல வேண்டும்.

என் ஆத்துமாவை விட எது முக்கியமானதாக இருக்க முடியும்? நான் உண்மைகளை ஜாக்கிரதையாக நிறுத்துப் பார்த்து , ஒரு தீர்மானம் ( தீர்ப்பு) எடுக்க வேண்டும். அதாவது, எது உண்மையான உபதேசம், எது பொய்யான உபதேசம் என்பதைக் குறித்து ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். மற்றவர்களுடைய அபிப்பிராயத்தின் அடிப்படையில் நான் தீர்ப்பு செய்தால் அல்லது அத்திசையில் பயணிக்கும் மனப்பான்மை எனக்கு இருந்தால் அல்லது அந்த உபதேசத்தை குறித்து எனக்கு எவ்வித அறிவும் இல்லதிருந்தால் அதைக் குறித்து தீர்ப்பு செய்வது முட்டாள்தனமானதாகும். அதேபோல் ஒரு காரியத்தை குறித்து நன்கு படித்தபிறகும் நான் அதைக் குறித்து தீர்ப்பு செய்யாதிருந்தால், என் ஆத்துமாவின் எதிர்காலத்தைக் குறித்து பொறுப்பற்றவனாய் இருப்பேன். எனவே, முன்கூட்டியே தீர்மானம் செய்யாதிருங்கள். ஆனால், அதே நேரத்தில் நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள். ✝

## கிறிஸ்துவை தரித்துக் கொள்பவர்

- மேலானவைகளை நாடுகிறவராக இருக்கிறார் (கொலோ *3: 1,2*).
- *மற்றவர்களின் பாரத்தை சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறார் (கலாத்தியர் 6:2).*
- வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடத்தை கொடுக்கிறார் (மத் *6:33*).
- உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் இருக்கிறார் (ரோமர் *12:2*).



## ரோமர் புத்தகம் மூலமாக தேடுதல் வேட்டை

*Rebecca Rushmore*

1. எது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவப்பெலனாய் இருக்கிறது?

2. யாரெல்லாம் பாவம் செய்திருக்கிறார்கள்?

3. ஏன் ஆபிரகாம் நீதிமானாக எண்ணப்பட்டார்?

4. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் எது இல்லை?

5. எது பொறுமையை உண்டாக்குகிறது?

6. எது தேவனுடைய வரமாய் இருக்கிறது?

7. கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்வதற்கு எது அவசியமாய் இருக்கிறது?

8. எத்தனை பேர் பாகாலுக்கு முன்பாக முழங்கால் படியிடாதவர்கள் என்று தேவன் சொல்கிறார்?

9. கிறிஸ்தவர்கள் இப்பிரபஞ்சத்தில் இருந்து எப்படி மறுரூபம் ஆக வேண்டும்?

10. மேலான அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்கள் யாருக்கு எதிர்த்து நிற்கிறார்கள்?

வேதாகம கதாபாத்திரம்

# நீங்கள் எவ்விதமான பெண்?

## which Lady are you?

*Emily Fisher*

**நீ**திமொழிகள் புத்தகம் இரண்டு வகையான பெண்களைப் பற்றிப் பேசுகிறது. ஒன்று தேவனிடத்திலிருந்து வந்த ஞானப்பெண். அவளுடைய வார்த்தைகள் நீதியுள்ளவைகள் [நீதிமொழிகள் 8:32-36] மற்றொன்று, உலகத்தில் இருந்து வந்த பொல்லாத பெண், அவளுடைய வார்த்தைகள் ஒருவரை மரண அறைகளுக்கு கொண்டு செல்லும் [நீதிமொழிகள்7:27]. இவ்விரு பெண்களைப் பற்றி நாம் பரிசோதித்துப் பார்ப்போம்.



தன் மிகுதியான இனிய சொற்களால் அவனை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுரவாக்கினால் அவனை இணங்கப் பண்ணினாள்' [நீதிமொழிகள் 7:21]. நீதிமொழிகள் ஏழாம் அதிகாரத்தில் விவரிக்கப் பட்டிருக்கிற அந்த துன்மார்க்கமான பெண்ணுக்கு வாயாடி, தந்திர மானவள், அடங்காதவள் போன்ற பதங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. அவள் அறிவில்லாதவள், பேதையர்களாகிய வாலிபரை தன் காலில் விழப் பண்ணுகிறாள், அவள் வேசியின் ஆடையை அணிந்திருந்தாள் [நீதிமொழிகள் 7:10]. இப்பெண்ணுக்கு சாந்தமும், அமைதலும் உள்ள ஆவியைப் பற்றி அக்கறையே இல்லை [1 பேதுரு 3:4]. அவள் மற்றவருடைய கவனத்தை தன் பக்கம் ஈர்த்து, தேவனைப் பிரியப்படுத்துவதை விட ஆண்களைத் தன் வசப்படுத்தவே பார்ப்பாள் [1 தீமோத்தேயு 2:9-10]. இத்தகைய பெண்ணின் கால்கள் வீட்டிலே தரிப்பது இல்லை [நீதிமொழிகள் 7:11]

இப்படிப்பட்ட பெண் நேரத்தை தேவனுடைய வார்த்தையைப் படிப்பதில் செலவழிப்பதில்லை. இவள் அதிக நேரத்தை வெளியில் செலவிட்டு, உலகப்பிரகாரமான பொருள்களில் அதிக அக்கறை உடையவளாயிருக்கிறாள் நீதிமொழிகள் 7:16 17]. இவளைப் பொருத்த வரை வீடு என்பது தானும், தன் கணவனும் உறவு கொள்ளும் இடமாக மட்டும் இல்லாமல், அந்நியர்களையும் தன்

வீட்டுக்கு அழைத்துப் பழகும் ஒரு பெண்ணாக இருக்கிறாள். (நீதிமொழிகள்7:19; தீத்து 2:4,5; எபேசியர் 5:22–33). இப்படிப்பட்ட பெண் வெட்கமில்லாதவளும், தன் இனிய சொற்களால் மற்றவர்களை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுர வாக்கினால் அவர்களை இணங்கப் பண்ணுகிறாள் (நீதிமொழிகள் 7:13,21). இவள் தான் தேவ சாயலில் படைக்கப்பட்டிருந்தும் கூட தேவன் மீது நம்பிக்கை வைக்காமல் பல ஆண்களுடன் பழகுவதன் மூலமாக தன்னம் பிக்கையை அதிகரிக்க நினைக்கிறாள் (நீதிமொழிகள் 3:26; ஆதியாகமம் 1:27) இவள் சமாதான பலிகளை செலுத்துகிறாள். தன் பொருத்தனைகளை நிறைவேற்றுகிறாள் (நீதிமொழிகள் 7:14; லேவியராகமம்3). இவள் சபை கூடுகைகளில் எப்போதும் கலந்து கொள்ளுகிறபடியால் மற்றவருடைய பார்வையிலே பக்தி உள்ள வளாக காணப்பட்டாலும் கூட, தேவனுக்கு உதட்டளவில் ஆராதனை ஏறெடுத்தாலும் கூட, இவளுடைய இருதயம் தேவனிடத்தில் இருந்து வெகு தூரமாய் இருக்கிறது (ஏசாயா29:13). இத்தகைய பெண் வெளியே நீதி உள்ளவளாக தெரிந்தாலும் கூட, உள்ளே மரித்தவர் களின் எலும்புகளினாலும், சகல அசுத்தத்தினாலும் நிறைந்த கல்லறையை போன்றவள் (மத்தேயு23:27).

இப்படிப்பட்ட பெண் நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான பலிகளை தேவனுக்குச் செலுத்தாமல் ஆண்களைப் பிரியப்படுத்த பலிகளை செலுத்துவது போல் தெரிகிறது (சங்கீதம்51:17) . இந்தப் பெண் உலகப் பிரகாரமான காரியங்களை தன் நுனி விரலில் வைத்திருப்பது போல் தெரிந்தாலும் இவ்வாழ்க்கையில் மிக முக்கிய மான காரியத்தை மறந்து விட்டாள். ‘காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக் கொள், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். பிரசங்கி 12:13 14).

ஆனால், முற்றிலும் வித்தியாசப்பட்ட கோணத்தில் நீதிமொழிகள் புத்தகம் அதன் கடைசி அதிகாரத்தில் குணசாலி ஸ்திரீபற்றி

பேசுகிறது. இவள் கற்புள்ளவளும், செம்மையானவளுமாய் இருக்கிறபடியால் இவள் புருஷனுடைய இருதயம் இவளை நம்பும் [நீதிமொழிகள் 31:1] . இவள் தனக்கும், தன் வீட்டாருக்கும் போதுமான ஆடைகள் இருப்பதை உறுதி செய்கிறாள் [நீதிமொழிகள் 31:21-22]. இப்பெண் மற்றவர்களுக்காக அக்கறைப்படுகிறபடினாலும் தன் சுய தோற்றத்தை விட கௌரவத்தை தூக்கிப் பிடிக்கிறபடியினாலும் தன் ஞானத்தை வெளிப்படுத்துகிறாள் நீதிமொழிகள் 31:25] .

இந்த பெண் தன் சரீர தோற்றத்தின்படி கவர்ச்சியாய் இல்லாமல் ஞானம் போன்றவைகளால் கவர்ச்சியாய் இருக்கிறாள் [நீதிமொழிகள் 31:25,26]. இந்தப் பெண் சௌந்தர்யம் வஞ்சனை உள்ளது என்பதையும் இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே அழியாத அலங்காரம் என்று நினைக்கிறாள் நீதிமொழிகள் 31:30;1 பேதுரு 3:4] . இவள் வீட்டில் தரித்திருப்பதற்குத் தான் முதலிடத்தை கொடுக்கிறாள் [தீத்து2:5] இவள் தன் வீட்டு பொறுப்புகளை குறித்து எரிச்சல் அடைவதும் இல்லை, பிள்ளைகள் அதிகமாக இருக்கிறார்களே என்று வருத்தம் அடைவதும் இல்லை. இந்தப் புத்தி உள்ள பெண்ணுக்கு ஒருவருடைய வீடு தேவனுடைய அஸ்தி பாரத்தின் மீது கட்டப்பட வேண்டும் என்றும், வீட்டில் பிள்ளைகள் தேவனால் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் என்பதும் தெரியும் [சங்கீதம் 127:1,3-5].

மேற்சொல்லப்பட்ட இரண்டு வகையான பெண்களைக் குறித்து நாம் இதுவரை பார்த்தோம். ஒருவர் நம்மை **ஜீவபாதைக்கு** வழிநடத்துகிறார். மற்றொருவர் நம்மை **மரணப் பாதைக்கு** வழி நடத்துகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவப் பெண்ணும் தன் மனதில் தனக்குத்தானே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி நீதிமொழிகள் புத்தகத்தில் நான் எவ்வகையான பெண்ணாக இருக்கிறேன்- பாவியான பெண்ணாக இருக்கிறேனா (I நீதிமொழிகள்7) அல்லது குணசாலியான பெண்ணாக இருக்கிறேனா [நீதிமொழிகள்31]? என்பது. ✞

வேதாகம கதாபாத்திரம்

# தவறாக குற்றம் சாட்டப்படுதல்

## Falsely accused

*Andy Robison*

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்டு, ரோமச் சட்ட முறைப்படி விசாரிக்கப்பட்டார். அப்போது அவர் கிறிஸ்தவத்திற்கு ஆதரவாக தொடர்ந்து உத்தரவு சொன்னபோதும் கூட அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி உன்னிடத்தில் யாதொரு குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியாததால் ரோமா ஆளுநரான பெஸ்து பவலைப் பார்த்து‘ **பவுலே நீ பிதற்றுகிறாய், அதிக கல்வி உனக்கு பைத்தியண்டாக்குகிறது என்றான். அதற்குப் பவுல் சாந்தமாய் இவ்விதமாக பதில் அளித்தார். அப்போஸ்தலர் 26 : 25 அதற்கு அவன்: கனம் பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்** என்று.

உண்மையாகவே, கிறிஸ்தவம் சத்தியத்தையும், காரணகாரியங்களையும் உள்ளடக்கிய ஒரு மார்க்கமாகும். கிறிஸ்தவம் **குருட்டு** விசுவாசத்தின் மார்க்கமல்ல. பலர் வேண்டுமென்று இதை நசுக்க நினைத்தாலும் கூட இதற்கான ஆதாரங்கள் தாராளமாக இருக்கின்றன. கிறிஸ்தவர்கள் பைத்தியக்காரர்கள் என்று உலகத்தின் மக்கள் எப்போதுமே குற்றச்சாட்டை வைத்துக்கொண்டு தான் இருப்பார்கள். குற்றம் சாட்டுகிறவர்களுக்கு தகுந்த காரண காரியங்களைக் கொண்டு நாம் உத்தரவு சொல்ல ‘கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் என்று போதிக்கப்பட்டுள்ளோம்.

**கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச் சாட்சியுடைவர்களாயிருங்கள்** [1 பேதுரு 3:15,16] கொலோசெயர் 4 :6 **‘அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக** ✝

### வேதாகம கதாபாத்திரம்

# சாத்தானின் பொறுமை

## The patience of Satan

*Paul Mowrer*



நிச்சயமாகவே, யோபுவின் பொறுமையை குறித்து கேள்விப் பட்டிருப்பீர்கள். அதேபோல், தேவனுடைய பொறுமையை குறித்தும் கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஆனால், சாத்தானின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அநேகமாக இது உங்களுக்கு பைத்தியக்காரத்தனமாக தோன்றலாம். ஆனால், நான் இன்று சாத்தானின் பொறுமை குறித்து தான் எழுதப்போகிறேன். நம்முடைய வாழ்வில் சாத்தானின் கிரியைகளைப் பற்றி புரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது.

கடந்த வாரம் நானும், என் மனைவியும் மனைவியின் பெற்றோருடைய 65 ஆவது திருமண விழாவில் பங்கெடுக்கும்படியாக போயிருந்தோம். நாங்கள் எப்போதெல்லாம் குடும்பமாக கூடுகிறோமோ அப்போதெல்லாம் நாங்கள் அனுபவிக்கும் செயல்பாடுகளில் ஒன்று அங்கே கூடிவரும் சபையோடு சேர்ந்து தேவனை ஆராதிப்பது தான். என்னுடைய சகோதரர்களில் ஒருவரை சமீபத்தில் சந்தித்த போது தேவனுடைய பிள்ளைகளாக நம்முடைய வழியில் வரும் ஏமாற்றங்களையும், சோர்வுகளையும் குறித்து நாங்கள் பேசினோம். அப்போது பல வருடங்களுக்கு முன்பு பிரசங்கியார் ஒருவர் என்னிடம் தெரிவித்த கருத்தை திரும்பத் திரும்ப நான் வலியுறுத்தினேன். ஏமாற்றங்களும், சோர்வுகளும் சாத்தான் நம்மை தாக்க பயன்படுத்தும் கருவி என்பதுதான் அந்தக் கருத்தாகும். நான் சொன்ன அக்கருத்தை என் சகோதரன் ஏற்றுக்கொண்டார். அதற்குப் பதில் அளிக்கும் விதமாகத்தான் சாத்தான் பயங்கர பொறுமைசாலி என்றார்.

கடந்த பல நாட்களாக நான் அந்த சிந்தை என் மனதை ஆட்கொள்ள அனுமதித்தேன். நாம் துரிதமாக தேவனுடைய பொறுமையையும், யோபுவின் பொறுமையையும் சுட்டிக் காட்டுவோம். ஆனால், சாத்தான் நம்மைத் தாக்க தொடர்ச்சியாக கிரியை செய்வான் என்னும் உண்மையை உணர்ந்து கொள்ளத் தவறி விடுகிறோம். பேதுரு 5 : 8 ‘தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரி கிறான்‘. சிங்கம் இரை தேடுவதில் ஒருறை மட்டும் முயற்சித்து விட்டு அதோடு கைவிடுவதை நாம் கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஒருவேளை சிங்கம் அதன் இரையின் மீது பாய்ந்து தாக்குவதை நீங்கள்பார்க்காமல் இருந்திருக்கலாம். ஆனால், எவ்வித சந்தேகமும் இன்றி ஒரு பூனை அதன் இரையின் மீது பாய்வதற்கு முன்பாக செய்யும் ஆயத்த வேலைகளை நிச்சயமாய் பார்த்திருப்பீர்கள். பொதுவாக, சிங்கம் மற்றொரு மிருகத்தை தாக்குவதற்கு அவசரம் காட்டுவதில்லை. பொறுமையாகக் காத்திருந்து நேரத்தை கணித்து தாக்குதலை நடத்தும் .

நாம் இவ்விதமாக சாத்தானை நினைக்காமல் இருக்கலாம், மாபெரும் சத்துருவின் கிரியைகளை மறுபரிசீலனை செய்வதற்கு இது சரியான நேரமாக இருக்கிறது. சாத்தான் ஆதியிலே ஏதேன் தோட்டத்தில் தடை செய்யப்பட்ட கனியை புசிக்கும் சோதனையில் விழுந்து போகும் வரை பொறுமையாக காத்திருந்தான். சாத்தான் அப்போது காத்திருந்தது போலவே இப்போதும் பலரை விழுங்கு வதற்காக பொறுமையாகக் காத்திருக்கிறான். துரதிஷ்டமாக, அவனுடைய வெற்றி வீதம் அதிகரித்துக் கொண்டே போகிறது. சாலமோன் ஞானி சோதனையில் விழும் ஒருவனை அடிக்கப்படும் இடத்திற்கு அறியாமல் செல்லும் ஒரு மாட்டுக்கு ஒப்பாகப்பேசுகிறார் நீதிமொழிகள் 7:22]. உலக சிற்றின்பங்களில திளைத்து போய் இருக்கிற நாம் கூட அடிக்கப்படும் இடத்திற்கு அறியாமல் போகிற மாடுகளாக இருக்கிறோமா?

அப்போஸ்தலனாகிய பவுல் திமோத்தேயுவுக்கு எழுதும்போது தேவன் மனம் திரும்புதலை அருளத்தக்கதாக சாந்தமாய் அவர்களுக்கு போதிக்க வேண்டும் என்று எழுதினார். கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும்

சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும். பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக் கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்' 2தீமோத்தேயு 2:24–26]. கிறிஸ்தவர்களாகிய நாம் காலதாமதம் ஆவதற்கு முன்பாக தூக்கத்திலிருந்து விழிக்கும் நேரம் வந்துவிட்டது . நம் கர்த்தர் பொறுமை உள்ளவராய் இருக்கிறார். ஆனால், சாத்தானும் பொறுமையாக இருக்கிறான். நம் ஆத்மாக்களுக்கான யுத்தத்தில் வெல்லப் போவது யார்?

✝

## *கிறிஸ்து நிராகரிக்கப்படும் விதம்*

- **அவருடைய தெய்வீகத்தன்மையில்**
  **(லூக்கா 1:35)**
- **அவருடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில்**
  **(மத்தேயு 28:18)**
- **அவருடைய நாமத்திற்குக் கீழ்ப்படிவதில்**
  **(பிலிப்பியர் 2:911)**
- **அவருடைய சபையை அங்கீகரிப்பதில்**
  **(அப்போஸ்தலர் 20:28)**

# சபைக்காக கிறிஸ்துவின் மாதிரி

## Christ's blueprint for the church

*Dale Grissom*

இன்று நாம் காண்பவைகளில் முதல் நூற்றாண்டில் ரோம கலாச்சாரத்தில் இல்லாத ஒன்று இல்லவே இல்லை. உண்மையில், அமெரிக்க ஐக்கிய தேசத்திலும், மற்றும் உலகெங்கிலும் இன்றைய நாட்களில் அநேகர் தாங்கள் கிறிஸ்தவத்தைப் பின்பற்றுவதாக சொல்லிக் கொள்கிறார்கள். அதாவது, கிபி 59, 69 மற்றும் 79 கால கட்டங்களை விட இன்றைய நாட்களில் அநேகர் கிறிஸ்தவத்தை பின்பற்றுவதாக சொல்லிக் கொள்கிறார்கள். கிறிஸ்தவம் என்பது தங்கள் இருதயங்களையும், தங்கள் ஜீவியங்களையும் இயேசு கிறிஸ்து வுக்கு அர்ப்பணித்த ஜனங்களை உள்ளடக்கிய ஒரு சிறு இயக்கமாகும்.

அன்றைய ரோம, கிரேக்க உலகமானது பல கடவுள் வழிபாட்டு முறை கொண்டதாக இருந்தது. இதைக் குறித்து ஒரு வரலாற்று ஆசிரியர் சொல்லும்போது, அன்றைய உலகில் சுமார் 30,000 கடவுள்கள் இருந்ததாக சொல்கிறார். பழங்கால ரோம சாம்ராஜ்யத்தில் இரண்டு பட்டணங்கள் மாத்திரமே மிகப்பெரிய பட்டணங்களாக இருந்திருக்கின்றன. ஒன்று ரோமாபுரி, மற்றொன்று எகிப்தின் அலெக்சாண்ட்ரியா பட்டணம். மேலும், அன்றைய நாட்களில் பல பட்டணங்களில் மக்கள் தொகை 50 ஆயிரத்திற்கும் குறைவாகவே இருந்திருக்கிறது. அன்றைய உலகில் 30,000 க்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட பட்டணங்கள் வெறும் 30 மாத்திரமே இருந்திருக்கின்றன.

இருந்த போதிலும், பெரும்பாலான பட்டணங்களில், அதிலும் குறிப்பாக Zeus, Athena, Apollos போன்ற பட்டணங்களில்15–20 பிரதான கடவுள்களுக்கு கோயில்கள் இருந்திருக்கின்றன. இருந்தபோதிலும்',கிறிஸ்தவம் ஆரம்பிக்கப்பட்ட கிபி 30 லிருந்து கிபி 330 வரையிலான காலகட்டங்களில் நம்முடைய விசுவாசம் ஒரு சிறிய இயக்கத்தில் இருந்து பெரிதாக வளர்ந்து இலட்சக்கணக்கான மக்களை மனமாற்றம் அடையச் செய்து 300 ஆண்டுகளில் ரோமாபுரியில் பிரதானமான மார்க்கமாக மாறியது. எப்படி இது நடந்தது? ஆதிக் கிறிஸ்தவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்திய தனால் இந்த மாற்றம் ஏற்படவில்லை. அவைகள் அவர்களிடத்தில் அப்போது இல்லை. ஆராதனையில் அவர்கள் துதி குழுக்களையும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் ஓரினச் சேர்க்கையை சட்ட

பூர்வமான வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டதினால் அப்படி ஆகவில்லை. அவர்கள் பொது ஆராதனையில் கிறிஸ்தவ ஆண்கள் கூடி வரும் போது பெண்களை பிரசங்கிக்கவும், போதிக்கவும், ஜெபிக்கவும் அனுமதித்ததினால் அப்படி ஆகவில்லை. ரோம் நகரின் மற்ற மதங்கள் இவைகளை எல்லாம் போதித்து இவைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டன. இருந்தபோதிலும், கிறிஸ்தவம் ரோம சாம் ராஜ்யத்தில் ஆதிக்கம் செலுத்தியது. ஏனென்றால், அப்போஸ்தலர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சுவிசேஷ செய்திக்காக என்ன மாதிரியை போதித்தார்களோ அதே மாதிரியைத்தான் கிறிஸ்தவர் களும் பின்பற்றினார்கள். மேற்ச்சொல்லப்பட்ட காரணங்களால் ரோம சாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவம் வளர்ந்து செழித்தோங்கியது.

இயேசு கிறிஸ்து ஒரு மாபெரும் போதகராக திகழ்ந்தார். அவர் என்ன போதித்தாரோ அதை அப்படியே வாழ்ந்து காட்டினார். அவர் பொது இடங்களிலும் போதித்தார்,தனிப்பட்ட ரீதியிலும் போதித்தார். அவர் ஆண்களுக்கும் போதித்தார், பெண்களுக்கும் போதித்தார். அவர் ஏழைகளுக்கும் போதித்தார், பணக்காரர்களுக்கும் போதித்தார். அவர் பக்தி உள்ளவர்களுக்கும் போதித்தார், பக்தி இல்லாதவர்களுக்கும் போதித்தார். ஏன் அவர் அப்படி செய்தார்? மனிதனால் அறியாமையில் இரட்சிக்கப்பட முடியாது என்பதற்காக அப்படிச் செய்தார்.

இயேசு கிறிஸ்து பரமேறுவதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களிடத்தில் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறத்தக்கதாக எருசலேமில் காத்திருக்கும்படியாக கட்டளை இட்டார். மேலும், இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம்' பரிசுத்த ஆவி உங்களி டத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தம், எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்' (அப்போஸ்தலர் 1:8). கிறிஸ்துவின் சபை சுவிசேஷ பிரசங்கத்தின் மூலமாக எப்படி ரோம சாம்ராஜ்யத்தை கவிழ்த்துப் போட்டது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

**பிரசங்கம் பழைய ஏற்பாட்டில் இருந்தும் இருக்க வேண்டும்**

இயேசு கிறிஸ்து பரமேறுவதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களிடத்தில் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறத்தக்கதாக எருசலேமில் காத்திருக்கும்படியாக கட்டளை இட்டார். மேலும், இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம்' பரிசுத்த ஆவி உங்க ளிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தம், எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்' (அப்போஸ்தலர் 1:8).

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சபை ஆரம்பிக்கப் பட்ட போது பரிசுத்த ஆவியானவர் பேதுருவையும், மற்ற அப்போஸ்தலர் களையும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும், போதிக்கவும் வழி நடத்தினார் [2:14]. பேதுரு செய்த முதல் காரியம் பழைய ஏற்பாட்டில் இருந்து வசனங்களை மேற்கோள் காட்டியதாகத்தான் இருந்தது [யோவேல் 2:28-32, சங்கீதம் 16, 2 சாமுவேல் 7]. அப்போஸ்தலரு டைய நடபடிகள் புத்தகத்தில் மாத்திரம் பழைய ஏற்பாட்டில் இருந்து 36 வசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அதி காரத்திலும் ஒன்றுக்கும் மேற்பட்ட வசனங்கள் மேற்கோள் காட்டப் பட்டிருக்கின்றன. அப்போஸ்தலர்களை பொறுத்தவரை **போதனை யின் ஆதாரமாகவும், அதிகாரமாகவும் பழைய ஏற்பாடு இருந்திருக்கிறது.** அதனால் தான் அவர்கள் வசனத்தை கேட் கிறவர்கள் பழைய ஏற்பாட்டு வசனங்களை கேட்க வேண்டும் என்று விரும்பி இருக்கிறார்கள்.

சபைக்கான மாதிரியை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத் திலிருந்து பின்பற்றும் கிறிஸ்துவின் சபை 39 புத்தகங்களை உள்ளடக் கிய பழைய ஏற்பாட்டைப் படித்து அதை போதிக்கும். நாம் அப்புத்தகங்களை அறிந்து கொள்ள வேண்டும். நாம் அவைகளை ஜாக்கி ரதையாகப் படிக்க வேண்டும். நாம் பழைய ஏற்பாட்டை நன்றாக படித்து புரிந்து கொள்ளவில்லை என்றால் புதிய ஏற்பாட்டை முழுமையாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய ரீதியிலே புரிந்து கொள்ள முடியாது.

பிரசங்கமானது கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இரண்டாம் அதி காரத்தில் பேதுருவின் பிரசங்கத்தில் அவர் இயேசுவின் ஜீவியம் பற்றி போதித்ததை நாம் காண முடியும் [2:22]. அங்கே பேதுரு இயேசு கிறிஸ்து தம்முடைய அற்புத அடையாளங்கள் மூலமாக தம்மை தேவ னுடைய குமாரனாக நிரூபித்ததை புரிந்து கொண்டார் [யோவான் 20:30,31].

அப்போஸ்தலனாகிய பேதுரு முதன் முதலாக புறஜாதிகளி டத்தில் பிரசிங்கத்த போது இயேசு செய்த நற்கிரியைகளையும், அற்புத அடையாளங்களையும் அவர்களுக்கு பிரசங்கித்தார்[10:38]. ஒரு சபைக்கு இயேசுவைப் பற்றிய பிரசங்கம் மிகவும் அவசியமானது. அதனால் தான் பிலிப்பு என்பவர் சமாரியாவில் உள்ள ஒரு பட்டணத் திற்கு போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவை குறித்து பிரசங்கித் தார் என்று லூக்கா ஆசிரியர் பதிவு செய்கிறார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:5]. அப்போஸ்தலனாகிய பவுல் அத்தனே பட்டணத்தில் இருந்த தத்துவ ஞானிகளிடம் பிரசிங்கத்தபோது அவர்களிடம் பழைய ஏற்பாட்டை மேற்கோள் காட்டவில்லை. ஆனால், அவர் இயேசுவைப் பற்றியும் அவருடைய உயிர்த்தெழுதலின் ஆதாரத்தைப் பற்றியும் பேசினார்[அப்போஸ்தலர் 17:31].

உலகத்தில் என்ன நடந்தாலும் கிறிஸ்தவம் நிலைத்து நிற்கும். ரோம் நகரம் விழுந்து போனபோது, கிறிஸ்தவம் நிலைத்து நின்றது. எதிர்காலத்தில் அமெரிக்காவுக்கு என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால், கிறிஸ்தவம் நிலைத்திருக்கும் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்றும் நான் நம்புகிறேன். கிறிஸ்தவம் நிலைத்திருந்து எல்லோருக்கும் ஒளி வீச வேண்டும்.

இயேசு கிறிஸ்து நமக்குப் பரிபூரண ஜீவன் தருவதற்காக தாம் வந்ததாக சொல்கிறார் (யோவான் 10:10). அந்த பரிபூரண ஜீவன் தைரியத்தை தன்னகத்தே கொண்டதாக இருக்க வேண்டும். நாம் உண்மையுள்ளவர்களாகவும், தைரியள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் (வெளி 21: 8). நாம் ஜனங்களிடம் போய் தேவன் அவர்களை நேசிக்கிறார் என்று சொல்வது மிக சுலபமாகும். அதேபோல், இயேசு அவர்களுக்காக மரித்தார் என்று சொல்வதும் மிக எளிதானதாகும். இதுபோன்ற செய்திகள் தங்களை எரிச்சல் அடையச் செய்வதாக யாரும் உணர்வதில்லை. இஸ்லாமியர்களுக்குக் கூட இதுபோன்ற செய்திகள் எரிச்சலை ஏற்படுத்துவதில்லை. தேவனுடைய அன்பைப் பற்றி ஜனங்களிடம் பேசுவதற்கு தைரியம் அவசியம் இல்லை. ஆனால், அவர்களுடைய **பாவத்தைப் பற்றி** பேசுவதற்கு தான் தைரியம் அவசியமாகிறது. வேதாகமம் பாவத்திற்கு என்ன விளக்கம் கொடுக்கிறதோ அதே விளக்கத்தை நாம் ஜனங்களுக்கு கொடுக்கும் போது அது தாக்கத்தை ஏற்படுத்தும். அதன் பொருள் ஏதோ ஒரு நடத்தை தவறானது என்றும், அது நிறுத்தப்பட வேண்டும் என்றும் பொருள்படும். மேலும், அதன் பொருள் ஏதோ சில நம்பிக்கைகள் தவறானது என்றும், அவைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் பொருள்படும்.

நம் எல்லோருடைய நம்பிக்கைகளும் பல வேளைகளில் தகர்ந்து போயிருக்கின்றன. பலர் நமக்கு நம்பிக்கை துரோகம் செய்திருப் பார்கள். நாம் பல ஏமாற்றங்களை சந்தித்து அவைகள் நம் இதயங்களை கசப்பாக்கி இருக்கும். கோழைத்தனம் நம் இருதயங்களை ஆட் கொண்டால் கடினமான வேளைகளில் நாம் போய் ஓடி ஒளிந்து கொள்வோம். **தூய நற்செய்தி** சிலரை எரிச்சல் அடையச் செய்வதால் நாம் பல சந்தர்ப்பங்களில் **சுவிசேஷத்தைப் புரட்டி** ஜனங்களுக்கு தகுந்தவாறு பேசி விடுகிறோம். நாம் பரிசேயர்களைப் போல தேவனுடைய புகழ்ச்சியை விட மனிதர்களுடைய புகழ்ச்சியை அதிகமாக விரும்பி விடுகிறோம். இருந்தபோதிலும், தைரியம் நம் இருதயங்களை ஊக்குவித்தால் நாம் தொடர்ந்து அன்புடன் சத்தியத்தை போதிப்போம்.

**நாம் தைரியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்**

உபாகம் 31 :6 யை வாசிக்க ஒரு நிமிடத்தை எடுத்துக் கொள்ளுங்கள். **பலம் கொண்டு திடமானதாய்** இரு என்னும் சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் பத்து முறை இடம்பெற்றிருக்கிறது. அதைப்போல் பயப்படாதே என்னும் சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் 30 முறைகள் இடம்பெற்றிருக்கிறது. மோசே ஏன் இஸ்ரவேலர்களை பலம் கொண்டு திடமனதாய் இருக்கும்படி உற்சாகப்படுத்துகிறார்? ஏனென்றால், தேவன் அவர்களோடு இருந்தார். தேவன் அவர்களோடு பயணித்தார். தேவன் அவர்களை விட்டு விலகுவதுமில்லை அவர்களை கைவிடுவதுமில்லை.

யோவான் 14 27ல் சமாதானம் பற்றி இயேசுவின் வார்த்தைகளை வாசியுங்கள். புதிய ஏற்பாடு சமாதானம் என்னும் வார்த்தையை 97 முறைகள் பயன்படுத்தி இருக்கிறது.

யோவான் சமாதானம் என்னும் வார்த்தையை பத்து முறைகள் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால், இதே யோவான் பயம் என்னும் வார்த்தையை 20 முறைகள் பயன்படுத்தி இருக்கிறார். ஒட்டு மொத்தமாக பயம் என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் 101 முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் பயப்படுவோம் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். ஆனால், நாம் அவரோடு நடந்தால் ,அவருடைய சத்தியத்திற்கு நம்மை அர்ப்பணித்துக் கொண்டால், நாம் பூரண சமாதானத்தை பெற்றுக் கொள்வோம் என்று அவர் நமக்கு நிச்சயப்படுத்துகிறார். எனவே, நாம் தேவன் மீது விசுவாசம் வைத்து அவருடைய சத்தியத்தில் நிலைத்திருந்து பயமில்லாமல் இருப்போம்.

நாம் தைரியமாக தேவனுடைய செய்தியை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டு அந்தச் செய்தியை வாழ்க்கையாக வாழ்வோம். எனக்கு நகைச்சுவை பிடிக்கும். உண்மை சம்பவங்களை உள்ளடக்கிய சிறுகதைகளும் பிடிக்கும். எனக்கு வரலாறும் பிடிக்கும். பல பிரசங்கங்கள் வேத வாக்கியங்களை விட மேற்சொல்லப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். ஆனால், உங்கள் வாழ்க்கையை நீங்கள் அவைகளின் மீது கட்ட முடியாது. 1கொரிந்தியர் 3 11ல் பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இவ் விதமாக எழுதுகிறார், போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. நிச்சயமானதும், நிலையானதுமான ஒரே அஸ்தி பாரம் இயேசு கிறிஸ்து தான். எனவேதான், நாம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் படித்து அதை மற்றவர்களுக்கு பிரசிங்கிக்கவும், போதிக்கவும் வேண்டும். ✝

# பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு வாக்களிக்கப்பட்டார்

# The Holy spirit promised to the Apostles

*Raymond Elliott*

ஒரு வேதவாக்கியப் பகுதியை புரிந்து கொள்ளும் முயற்சியில் இரண்டு கேள்விகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒன்று பேசுகிறவர். இரண்டாவது யாருக்கு பேசப்படுகிறவர். இது வேத வாக்கியங்களை விரிவாக விளக்க வழி வகுக்கும். நோவாவை பேழையைக்கட்ட கட்டளையிட்டது தேவன் தான் என்பதை புரிந்து கொள்வதில் நமக்கு எந்த பிரச்சனையும் இல்லை [ஆதியாகமம் 6]. ஆபிரகாமிடம் அவன் குமாரனாகிய ஈசாக்கை பலி பீடத்தில் பலியாக செலுத்தும்படி சொன்னது தேவன் தான் [ஆதியாகமம்22]. அதைப்போல் அந்த பணக்கார வாலிபனிடம் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடுக்கும்படியாக சொன்னது இந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான்[ மாற்கு 10]. இந்த உண்மை பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பல்வேறு பட்ட சபைகளுக்கும் தனிநபர்களுக்கும் நிருபங்களை எழுதிய தேவா தாசர்களுக்கும் பொருந்தும். பரிசுத்த ஆவியானவர் சம்பந்தமாக புதிய ஏற்பாட்டில் அதிக தவறாகப்புரிந்து கொள்ளப்பட்டிருக்கிற வசனப்பகுதிகளில் ஒன்று [யோவான் 14 –16] அதிகாரங்களில் இடம்பெற்றுள்ளது.

[யோவான் 14 –16] அதிகாரங்களின் பின்னணி இயேசு கிறிஸ்து தம்டைய 12 அப்போஸ்தலர்களோடு பஸ்காவை புசித்த அந்த நிகழ்வு தான் [மத்தேயு 26:20 ; மாற்கு 14:17 ; லூக்கா 22:14]. எனவே, இங்கே பேசுகிறவர் இயேசு கிறிஸ்து, பேச்சை கேட்கிறவர்கள் அவருடைய 12 அப்போஸ் தலர்கள். இயேசு அவர்களிடம் தம் உலகை விட்டு கடந்து போன பிறகு சத்தியத்தை பிரசங்கிக்க அவர்களை எல்லா விதத்திலும் வழிநடத்த தேற்றரவாளன் ஒருவர் அனுப்பப்படுவார் என்பதை பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். பல்வேறுபட்ட மார்க்கப் பிரிவினை கூட்டத்தின் தலைவர்கள் இயேசு பரிசுத்த ஆவியானவரை பற்றி அப்போஸ்தலர்களிடம் சொன்னவைகள் எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும் என்று தவறாக போதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, வருடம் தோறும் எல்லா நாளும் அருமையான ஆவிக்குரிய கருத்துக்களை வெளிப்படுத்தும் பத்திரிகை ஒன்றில் ஒரு ஆசிரியர் இவ்விதமாக ஆணித்தரமாக எழுதியிருந்தார். இயேசு பரமேறி பிதாவனிடத்தில் திரும்பி போனபோது, பரிசுத்த ஆவியை நம்மை எல்லாவற்றுக்குள் வழிநடத்தவும், நம்மை தேற்றவும், எல்லா காரியங்களையும் நம் நினைவுக்கு கொண்டு வரவும் அனுப்பினார் என்று எழுதினார். அது மாத்திரமல்லாமல், ஆவிக்குரிய பயணத்தில் நமக்கு விசேஷித்த வல்லமை உண்டென்றும், நாம் ஒரு பெரிய மலையை எதிர்கொண்டால் கூட பயப்படாமலும் பதறாமலும் இருந்து தேவன் நமக்கு தந்திருக்கிற வல்லமையை பயன்படுத்துங்கள் என்றும் எழுதினார். அவர்

அதோடு நின்று விடாமல், அத்தகைய சூழ்நிலையில் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு என்று சொல்லுங்கள் என்றும் எழுதியிருக்கிறார்.

மேற்சொல்லப்பட்ட வார்த்தைகளை எழுதின அந்த மார்க்கப் பிரிவினை கூட்ட கிறிஸ்தவரின் நேர்மையையும், உண்மையையும் நாம் ஒத்துக் கொண்டாலும் கூட யோவான்14:26 ல் இடம்பெற்றுள்ள வார்த்தைகளை அவர் தவறாக புரிந்து கொண்டு அதை தவறாகப் பயன்படுத்தி இருக்கிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும் '**என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றர வாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்** (யோவான் 14:26). மேலும், யோவான்16:13 ல் இவ்விதமாக பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. **சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற் குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.**

(யோவான் 16:13). ஆகவே, பரிசுத்த ஆவியானவர் கீழ்க்காணும் காரியங்களில் அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்வார்.

1 பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் போதிப்பார் 2. அப்போஸ் தலர்கள் என்ன அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினாரோ அவை களை பரிசுத்த ஆவியானவர் குரலுக்கு நினைப்பூட்டுவார் 3. சகல சத்தியத் திற்குள்ளும் அவர்களை நடத்துவார் 4. மேலும் பரிசுத்த ஆவியானவர் வரப்போகிற காரியங்களை அப்போஸ்தலர்களுக்கு அறிவிப்பார்.

லூக்கா24:49 ன் படி, இயேசு பரமேறுவதற்கு முன்பாக இந்த வார்த்தைகளை அப்போஸ்தலர்களிடம் பேசினார். **என் பிதா வாக்குத் தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்** என்றார் (லூக்கா 24:49). அப்போஸ்தலர் 1:4 ல் இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் இவ்விதமாகச் சொன்னார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி; **யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ் நானம் பெறுவீர்கள்(அப்போஸ்தலர் 1:4)**. மேலும், இயேசு தொடர்ந்து இவ்விதமாக சொல்லுகிறார் (அப்போஸ்தலர்1:8). அப்போஸ்தலர் 2:1-4 வசனங்களில் கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் செய்த படியே அந்த 12 அப்போஸ் தலர்களும் பெந்தெகொஸ்தேநாளிலே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட காரியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

1 கொரிந்தியர் 2 :10 ல் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதினார். **நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும்,**

தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்‘. இங்கே பவுல் தனக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டவைகள் எல்லாம் ஆவினாலே வெளிப்படுத்தப்பட்டது என்று சொன்னார். மேலும் தொடர்ந்து பவுல் இவ்விதமாக எழுதினார்12 நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.

அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக் குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். [1 கொரிந்தியர் 2:12,13]. பவுல் தான் கிறிஸ்துவின் ரகசியம் சம்பந்தமாக அறிவிக்கின்ற காரியங்களை கர்த்தரிடமிருந்து வெளிப்பாடு மூலமாக பெற்றுக் கொண்டதாகச் சொல்கிறார் [எபேசியர் 3:3-6]. மேலும், பவுல் தான் பிரசிங்கித்த சுவிசேஷம் சம்பந்தமாக [கலாத்தியர் 1:11-12] வசனங்களில் எழுதி இருக்கிறார். 11 மேலும் சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின் படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை., மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். [கலாத்தியர் 1:11,12]. பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களும், புதிய ஏற்பாட்டு வேத வாக்கியங்களும் தேவ ஆவினால் ஏவப்பட்டவைகள் தான் [ 2 தீமோத்தேயு 3:16,17].

சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தை சில தேவ தாசர்களிடம் மாத்திரம் தான் இருந்தது. பிற்பாடு, தேவ ஆவியினாலே ஏவப்பட்ட மனிதர்கள் பல்வேறுப்பட்ட நிருபங்களை எழுதிய போது ஏவப்பட்ட வார்த்தைகள் மனிதர்களிடத்திலும் இருந்தன, எழுத்து வடிவத்திலும் இருந்தன. கடைசியாக, நிறைவானது வந்து குறைவானது ஒழிந்து போகும் காலம் வந்தது[ 1 கொரிந்தியர் 13:9,10]. அதாவது, மனிதனுக்காக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தம் இப்போது முழுமையாக இருக்கிறபடியால், அது மனிதனுக்குள் பாதியாக, எழுதப்பட்ட வடிவத்தில் பாதியாக, இந்நாட்களில் இல்லை. கடைசியாக, யூதா தன்னுடைய சிறிய நிருபத்தில் இவ்விதமாக எழுதுகிறார் ‘பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான் களுக்கு **ஒருவிசை** ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற் காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது‘[யூதா 1:3]. **ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசம் சதாகாலத்திற்கும் கொடுக்கப் பட்டிருக்கிறபடியால்,** இன்றைய நாட்களிலே தேவனிடமிருந்து கூடுதலான வெளிப்பாடுகள் எதுவும் நமக்கு அவசியம் இல்லை. நம் இரட்சிப்புக்கு தேவையான எல்லா சத்தியத்தை வெளிப்படுத்தும் பரிசுத்த ஆவியானவரின் பணி நிறைவேறிவிட்டது. ✞

## சத்திய வழி


❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**

❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி


❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**

❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை


❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | செவ்வாய் | காலை | 6.30 மணி |
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு
இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.ஒப. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382
P.R. **சுவாமி** : 098440 70763
P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420
B. **அர்ஜுனன்** : 994435 58041

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய ................................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________

# 5 நிமிட வேத பாடம்

## மாயக்காரரே உங்களுக்கு ஐயோ!

**Paula Bates**

1) கர்த்தர் அவனை நோக்கி: __________________ நீங்கள் போஜனபான பாத்திரங்களின் __________________ சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உள்ளமோ __________________ பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது. (லூக்கா 11:39)

2) நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய _______________ எடுத்துக்கொண்டீர்கள், நீங்களும் ________________, உட்பிரவேசிக்கிறவர்களையும் _____________ என்றார். (லூக்கா 11:52)

3) மாயக்காரராகிய _______________! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, _______________ கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ _____________ எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். (மத்தேயு 23:27)

4) ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும் ____________ வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் ____________ சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ____________ வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பபடுத்துவீர்கள். (மத்தேயு 23:34)

5) ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது ____________ பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய ____________ இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று; அவர்கள் திருவசனத்திற்கு ____________ இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள். (1பேதுரு 2:7,8)

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்




## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

' திருமறை ஆசான் '
' கிருபையுள்ள வார்த்தை '
' வேர்டு ஆப் கிரைஸ்ட் '


மேலும் விபரங்களுக்கு : E.Z.S. ராஜநாயகம், தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385